ஆராதனை

சகோ-D.M.D.பெஞ்சமின்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆராதனை

சகோ. D.M.D.பெஞ்சமின்

முதல் பதிப்பு : ஏப்ரல் 2015

பிரதிகள் : 1000

ஆசிரியர் : சகோ. D.M.D.பெஞ்சமின்

விலை : ரூ. 80/-

வெளியீடு:

இயேசு வாழ்வளிக்கிறார்

நாகர்கோவில் - 629 002

கன்னியாகுமரி மாவட்டம்.

Phone : 04652 - 279920, 279921

Fax : 04652 - 227498

E-mail : revdmdbenjaminjplm@yahoo.com

துவக்கவுரை

மனிதன் சிருஷ்டிக்கப்பட்டது முதல் இன்றுவரை மனிதன் தேவனுக்குச் செய்துவரும் ஆராதனைகளைக் குறித்து வேதாகமத்திலிருந்து ஆவியானவரின் வழிநடத்துதலின்படி ஜெபத்தோடு எழுதியுள்ளேன். முற்றிலும் வசனத்தின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ள இப்புத்தகம் அனைவருடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் பிரயோஜனமுள்ளதாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. விசுவாசிகளின் ஆராதனையைக் குறித்த சந்தேகங்களை மாற்றி தெளிவை ஏற்படுத்தும் என விசுவாசிக்கிறேன். விசுவாசிகள் தவறான உபதேசங்களையும் ஆராதனைகளையும் பின்பற்றாமல் சத்தியம் என்ன என்பதை அறிந்து கொள்வதில் ஏற்படும் சாத்தானின் தந்திரமான திட்டங்களை மேற்கொள்ள இப்புத்தகம் நிச்சயமாய் ஒரு சத்திய விளக்கவுரையாக அமையும். தேவன் அவருடைய துதியைச் சொல்லிவரும்படி ஏற்படுத்தின மனிதன் தேவனை மறந்து அவரைத் துதித்து ஆராதிக்கத் தவறின இடங்களில் வெற்றியின் சுவடுகள் பதிந்ததே இல்லை. ஆகவே சத்தியத்தை அறிந்துகொள்ளுகிற அறிவுடன் ஒவ்வொரு நாளும் புதிய பெலனோடும், பரிசுத்த ஆவியின் பெலனோடும் உண்மையாய் தேவனை ஆராதித்து மகிழ்ந்து, அவ்வாராதனையின் மகிழ்ச்சியின் நிறைவால் இவ்வுலகில் உயர்வாக வாழ்ந்து, உன்னதரின் தேசத்தை சுதந்தரிக்கும்படி கர்த்தருடைய வருகையை சந்திக்க ஆயத்தமாவோம் என்று ஜெபித்து தேவநாம மகிமைக்காக உங்கள் கரங்களில் இப்புத்தகத்தை சமர்ப்பிக்கிறேன்.

உங்கள் அன்பு சகோதரர்,

Bro. **D.M.D. பெஞ்சமின்**

உள்ளே....

		பக்கம்
1.	காயீன் ஆபேலின் ஆராதனை	1
2.	ஏனோக்கின் ஆராதனை	9
3.	நோவாவின் ஆராதனை	13
4.	ஆபிரகாமின் ஆராதனை	17
5.	ஈசாக்கின் ஆராதனை	25
6.	யாக்கோபின் ஆராதனை	29
7.	இஸ்ரவேல் மக்களின் ஆராதனை	37
8.	கர்த்தர் வாசம் பண்ண ஆசரிப்புக் கூடாரம்	49
9.	கர்த்தருக்கு ஆராதனை செய்ய ஆலயம்	75
10.	இன்றைய ஆலயமும் ஆராதனையும்	83
11.	திருவிருந்தும் ஞானஸ்நானமும்	99

1

காயீன் ஆபேலின் ஆராதனை

தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் தன்னைப் படைத்த தேவனை ஆராதிக்க ஆரம்பித்தான். தேவனுடைய முதல் சிருஷ்டியாகிய ஆதாம் தேவனை ஆராதித்ததாகவோ, தேவனுக்கு பலி செலுத்தியதாகவோ வேதம் கூறவில்லை. தேவனைக் குறித்த காரியங்களைத் தன் பிள்ளைகளுக்குச் சொல்லியிருக்கக்கூடும். ஆதாம் தேவனோடு இருந்த காலத்தை அவன் பிள்ளைகள் அறிந்திருக்கவில்லை. ஏனெனில் ஆதாம் ஏதேன் தோட்டத்தை விட்டு துரத்தப்பட்ட பின்னரே அவர்கள் பிறந்தனர். ஆதாமின் முதல் இரண்டு பிள்ளைகளில் ஒருவன் நிலத்தைப் பயிரிடுகிறவன், மற்றொருவன் ஆடு மேய்க்கிறவன்,

நியாயப்பிரமாணமோ, ஆராதனை ஒழுங்குகளோ வரையறுத்து வழங்கப்படாத அக்காலத்தில் காயீன், ஆபேலின் உள்ளத்தில் கர்த்தருக்கு பலி செலுத்த வேண்டும் என்ற எண்ணம் உருவானது.

சிலநாள் சென்ற பின்பு, காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான். ஆதி 4:3

கர்த்தருக்கு பலிசெலுத்தும்படி வந்ததாக வேதத்தில் குறிப்பிடப்படும் முதல் மனிதன் காயீன். கர்த்தரோ, அவன் தகப்பனாகிய ஆதாமோ பலிசெலுத்துவதைக் குறித்து எதுவும் சொல்லாதிருந்தும், அவனுக்குள் தானாகவே கர்த்தருக்கு பலி செலுத்த வேண்டும் என்ற எண்ணம் ஒரு பிரமாணமாக

உருவெடுத்ததன் நிமித்தமாக நிலத்தின் கனிகளை தனக்குத் தந்த கர்த்தருக்கு நன்றியறிதலாக அவற்றில் சிலவற்றைக் காணிக்கையாகக் கொண்டு வந்தான்.

ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும், அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான். ஆபேலையும், அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார். காயீனையும், அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரிக்கவில்லை. *ஆதி.4:4,5*

காணிக்கை என்பது பலி எனவும், பலி என்பது ஆராதனை எனவும் பெயர்பெறும். எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்திற்கு இஸ்ரவேல் ஜனங்களை அழைத்துச் செல்லும்படி மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் போய் பேசுகையில் "பண்டிகை கொண்டாடும்படி" (யாத்.5:1), "பலியிடும்படி" (யாத்.5:3) என்று கூறுவதை நாம் வேதத்தில் வாசிக்க முடிகிறது. ஆகவே காணிக்கை, பலி, பண்டிகை போன்ற வார்த்தைகளும் "ஆராதனை" என்ற வார்த்தைக்கு ஈடாக பயன்படுத்தப்பட்டிருப்பதை நாம் வேதத்தில் கண்டு கொள்ளலாம்.

அப்படியானால் ஆதாமின் வீட்டில் வைத்து தான் கர்த்தருக்கு முதல் ஆராதனை நடந்திருக்க வேண்டும். காரணம் அன்று பலிபீடங்களோ, ஆராதனை இடங்களோ இல்லை. எந்த ஒரு இடத்தைக் குறித்தும் வேதத்தில் குறிப்பிடப்படவுமில்லை. இங்கு கர்த்தரை ஆராதனை செய்ய வந்தவர்கள் இரண்டுபேர். காணிக்கையாக வெளிப்பட்ட இந்த ஆராதனையில் கர்த்தர் இறங்கிவந்து ஒருவனுடைய காணிக்கையை ஏற்றுக்கொண்டார். ஒருவனுடைய காணிக்கையையோ ஏற்றுக்கொள்ளவில்லை. இன்றும் இரண்டோ மூன்றோபேர் அவருடைய நாமத்தினிமித்தம் கூடிவரும்போது இயேசுவும் அங்கே வருகிறார்.

அங்கீகரிக்கப்படாத காயீனின் ஆராதனை

காயீனையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரிக்கவில்லை. *ஆதி.4:5*

காயீனை கர்த்தர் அங்கீகரிக்கவில்லை; காயீனின் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரிக்கவில்லை என்று வசனம் காயீனின் காணிக்கை அங்கீகரிக்கப்படாததன் காரணத்தைத் தெளிவாகக் கூறுகிறது. காயீனைக் கர்த்தர் அங்கீகரிக்காததினால் அவனுடைய காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரிக்கவில்லை. ஒருவனைக் கர்த்தர் அங்கீகரித்தால் மட்டுமே அவனுடைய பலியையும் கர்த்தர் அங்கீகரிப்பார். காயீன் ஏன் அங்கீகரிக்கப்படவில்லை? காயீன் பொல்லாங்கனால் உண்டாயிருந்தவனும், பொல்லாங்கு செய்கிறவனுமாயிருந்தான்.

பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலை செய்த காயீனைப் போலிருக்க வேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தம்தானே. 1 யோவான் 3:12

சகலவித பொல்லாங்கும் செய்துவிட்டு தேவனை திருப்திபடுத்துவதற்காக அவன் காணிக்கை கொண்டுவந்தான். கர்த்தர் அவன் செய்த பொல்லாங்கை அறிந்திருந்தபடியால் அவன் கொண்டுவந்த காணிக்கையைக் கர்த்தர் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்றும் பிசாசின் வழியில் நடந்து சகலவித பொல்லாங்குகளையும் செய்துவிட்டு பலிகளையும், காணிக்கைக்ளையும் கொண்டுவந்து தேவனை ஆராதிக்கிற காயீனைப் போன்றோர் பலர் உண்டு. கர்த்தர் ஏற்றுக்கொள்ள முடியாத ஒருவன் கொடுக்கும் காணிக்கையையும் அவர் ஏற்றுக்கொள்ள முடியாது. இத்தகையவர்களைப் பார்த்து எரேமியா தீர்க்கதரிசி கேட்கிற கேள்வி ஒன்று உண்டு.

நீங்கள் திருடி, கொலைசெய்து, விபசாரம் பண்ணி, பொய்யாணையிட்டு பாகாலுக்குத் தூபங்காட்டி, நீங்கள் அறியாத அந்நிய தேவர்களைப் பின்பற்றி பிற்பாடு வந்து, என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயத்திலே எனக்கு முன்பாக நின்று இந்த அருவருப்புகளையெல்லாம் செய்வதற்காக விடுதலை பெற்றிருக்கிறோமென்று சொல்வீர்களோ? எரே.7:9,10

வாரம் முழுவதும் தங்களுக்குத் தோன்றிய வழிகளில் நடந்துவிட்டு ஞாயிற்றுக்கிழமை மட்டும் ஆராதனைசெய்ய வருவதினால் எந்த பிரயோஜனமும் இல்லை. கர்த்தருக்கு உகந்த பொல்லாங்கு நீங்கப்பெற்ற இருதயம் இல்லாதவர்களாய் தேவனைவிட்டு அகன்றுநிற்கும் எந்த ஒருவருடைய ஆராதனையையும் கர்த்தர் கவனிக்கமாட்டார். உங்கள் ஆராதனை உங்கள் இருதயத்திலிருந்து எழும்பக்கூடுமானால் உங்களை நிச்சயமாய் கர்த்தர் அங்கீகரிப்பார்; உங்கள் ஆராதனையையும் கர்த்தர் அங்கீகரிப்பார். ஆராதனை இருதயத்திலிருந்து எழும்பும்படி இயேசுவின் இரத்தத்தினால் இருதயத்தைக் கழுவிவிடுங்கள். பட்சபாதமில்லாத கர்த்தர் உங்கள் ஆராதனையை அங்கீகரிப்பார்.

இவ்விதமாக, கூடாரத்தின்மேலும் ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின் மேலும் இரத்தத்தைத் தெளித்தான். எபி.9:21

அங்கீகரிக்கப்பட்ட ஆபேலின் ஆராதனை

ஆபேலையும், அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார். ஆதி.4:4

ஆபேலை கர்த்தர் அங்கீகரித்தார்; ஆபேலின் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார். ஆபேலின் காணிக்கையைக் கர்த்தர் அங்கீகரித்ததன் காரணம் கர்த்தர் ஆபேலை அங்கீகரித்ததே. தேவன் விரும்பும் கனியுடைய வாழ்வு அவனுக்கு உண்டாயிருந்தது. ஆபேல் தன் வாழ்க்கையில் நன்மை செய்கிறவனாயிருந்தான் (ஆதி.4:7), நீதிமானாயிருந்தான் (மத்.23:35), மட்டுமல்ல அவன் விசுவாசத்தினாலே பலிசெலுத்தினான் (எபி.11:4).

விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான். எபி.11:4

தலையீற்று காணிக்கை

கர்த்தர் மோசேயின் மூலமாக ஜனங்களுக்குக் கொடுத்த பிரமாணத்தில் முதற்பேறு (யாத்.23:29,30) மற்றும் முதற்பலன்

(யாத்.23:19) கர்த்தருக்குரியது என்று அறிவித்தார். ஏறக்குறைய 2500 வருடங்களுக்குப்பின் கட்டளையிடப்படும்படி கர்த்தருடைய உள்ளத்தில் இருந்த இக்காரியத்தை ஆபேல் விசுவாசத்தினாலே முன்கூட்டியே செய்து நிறைவேற்றினான். அதாவது தலையீற்றாகிய காணிக்கையைக் கொண்டு வந்தான்.

கொழுமையான காணிக்கை

ஊனமில்லாதவைகளும், பழுதற்றவைகளுமான கொழுமையானவற்றை அவன் காணிக்கையாகக் கொண்டுவந்தான். இதுவும் தேவனுடைய இருதயத்திலிருந்த ஏறக்குறைய 2500 வருடங்களுக்குப்பிறகு கட்டளையாக வெளிப்பட வேண்டிய காரியமே.

அவன் செலுத்துவது செம்மறியாட்டு மந்தையிலுள்ள ஆடுகளிலாவது வெள்ளாட்டு மந்தையிலுள்ள ஆடுகளிலாவது எடுக்கப்பட்ட சர்வாங்க தகனபலியானால், பழுதற்ற ஒரு கடாவைக் கொண்டுவந்து.... லேவி.1:10

காயீன் காணிக்கையாக செலுத்தின நிலத்தின் கனிகள் முதற்பலன்கள் அல்ல. ஆபேலோ தேவனுடைய இருதயத்தையும், அவருடைய இருதய விருப்பத்தையும் அறிந்து கொண்டவனாக விசுவாசத்தினாலே தேவனுடைய சித்தத்தை முன்னறிந்து, தேவனுக்குப் பிரியமானபடி காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான். தேவனுடைய இருதயத்தோடு ஆபேலின் அந்தரங்க இருதயம் ஒன்றியிருந்தபடியால்தான் தேவனுடைய இருதயத்தை விசுவாசித்து வாசித்தறிந்து தேவன் அங்கீகரிக்கத்தக்க பலியை அவனால் செலுத்த முடிந்தது.

சில தவறான கருத்துக்கள்

காயீன் நிலத்தின் கனிகளைக் கொண்டு வந்ததினால், கர்த்தர் காயீனின் காணிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. காயீன் கொண்டுவந்த காய் கனிகளில் கேடுபாடு இருந்தது. ஆபேல் மிருகங்களைக் கொண்டுவந்தபடியால் கர்த்தர் ஆபேலின்

காணிக்கையை ஏற்றுக்கொண்டார் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் இது தவறு. ஏனெனில் கர்த்தருக்குக் காணிக்கையாக எதைக் கொடுக்க வேண்டும்? எதைக் கொடுக்க கூடாது? என்று அன்று எந்த நியமமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. காணிக்கை மீதான நியமங்கள் 2500 வருடங்களுக்குப் பின்புதான் வழங்கப்பட்டது. மேலும் நிலத்தின் பலன்களைக் கர்த்தர் பலியாகக் கொண்டு வரும்படி வேதத்தில் சொல்லியிருக்கிறார்.

முதற்பலன்களை போஜனபலியாக நீ கர்த்தருக்கு செலுத்தி வந்தால் நிறைந்த பச்சையான கதிர்களை நெருப்பிலே வாட்டி உதிர்த்து. அதை உன் முதற்பலனின் போஜனபலியாகக் கொண்டுவரக்கடவாய். *லேவி. 2:14*

இரு ஆராதனைகளின் ஆவிக்குரிய கண்ணோட்டம்

காயீன், ஆபேல் இவ்விரண்டு பேருடைய காணிக்கைகளும், இரண்டுவித ஆராதனைகளைக் காண்பிக்கிறது. காயீனுடைய ஆராதனை ஆவியின் தரிசனமில்லாத ஆராதனை. ஆபேலுடைய ஆராதனையோ ஆவியின் தரிசனத்தின் நிறைவுமிக்க ஆராதனை.

காயீனுடைய ஆராதனை விசுவாசத்தினால் எழாததும், தேவனை திருப்திபடுத்தும் நோக்கோடு மட்டும் செய்யப்பட்டதுமான வெறுமையான ஆராதனை. தேவனுடைய பிரசன்னம் வெளிப்படாத வீணான ஆராதனை. தேவனுடைய இருதயம் நாடாததால் அங்கீகரிக்கப்படாமல்போய் சலிப்பில் மிஞ்சின ஆராதனை, தேவனுடைய சாபத்தையும், காயீனுடைய எரிச்சலையும் முடிவாகப் பெற்ற ஆராதனை, ஜாக்கிரதையோடு விட்டுவிட்டு சீர்ப்படுத்தப்பட வேண்டிய ஆராதனை. இவ்வண்ணம் ஆராதிப்பவர்கள் அநேகர் இன்றும் உண்டு. அவர்கள் ஆவியின் தரிசனம் இல்லாமல் ஆராதித்து வந்த சமாரியா ஸ்திரீயை நோக்கி இயேசு சொன்ன வார்த்தைகளுக்குச் செவிகொடுத்தாக வேண்டும்.

உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது

கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.

யோவான் 4:23

ஆபேலின் ஆராதனையோ ஆவிக்குரிய தரிசனத்தால் பிறந்த விசுவாசத்தின் நிறைவேறுதலான ஆராதனையாய் இருந்தது. இவ்விதமாய் தேவனை ஆராதிக்கிறவர்களையே தேவன் இன்றும் தேடுகிறார். ஆபேலின் ஆராதனை தேவனால் சாட்சிபெற்ற ஆராதனை, காயீனுடைய ஆராதனையிலும் மேன்மையான ஆராதனை, இயேசு கிறிஸ்துவுக்கு நிழலாக பேசப்படும் சாயலை அவனுக்கு அளித்த ஆராதனை, விசுவாச வீரர்களின் பட்டியலில் அவனை இடம்பெறச் செய்த ஆராதனை, இன்றும் பேசிக்கொண்டிருக்கிற ஆராதனை, முடிவுபெறாத ஆராதனை. பூமியில் எத்தனையோ கோடி ஜனங்கள் பிறந்து தேவ பக்தியோடு வாழ்ந்து மரித்தார்கள். ஆனால் இயேசுவின் ரத்தத்தோடு சேர்த்து பேசப்பட்ட இரத்தம் ஆபேலின் இரத்தம் மட்டுமே. இயேசு தன் வாய்திறந்து, ஆபேலின் ரத்தத்தைக் குறித்து, *நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் (மத்.23:35)* என்று கூறினார்.

விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான். அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான். அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்றும் பேசுகிறான்.

எபி.11:4

ஆபேல் புதிய ஏற்பாட்டு சபைக்கு சமமாக இருக்கிறான். புதிய ஏற்பாட்டு சபை மரித்த சபையல்ல. அது ஜீவனுள்ளதாய் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறதைப் போல ஆபேலும் இன்னும் பேசிக்கொண்டிருக்கிறான். காயீன் நியாயப்பிரமாணத்திற்கும், மனுஷ விருப்பத்தினால் துவங்கிய ஆராதனைகள் மற்றும் அனுசரிப்புகளுக்கும் இணையாகக் காட்டப்படுகிறது. காயீனின் ஆராதனைக்கொத்த இவைகள் நிலைப்பதில்லை.

ஆபேல் விசுவாச வீரர்களின் பட்டியலில் முதல் பெயரானான் (எபி.11:4). கிறிஸ்துவும் மரித்தோரிலிருந்தெழுந்து முதற்பலனானார்

(I கொரி.5:20). கிறிஸ்துவின் சாயலையடைந்து அவரோடு கூட அரசாளத் துடிக்கும் நாமும் ஆபேலைப் போன்ற ஆராதனை வீரர்களாய் மாறி கிறிஸ்து நமக்கு வாக்களித்துப்போன தேசத்தை அடைவோமாக.

அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. ரோமர் 12:1

②

ஏனோக்கின் ஆராதனை

ஆதாமின் குமாரர்களான காயீன், ஆபேலின் ஆராதனைகளின் முடிவில் கர்த்தரின் அங்கீகாரத்தைப் பெறாத காயீனின் எரிச்சல் ஆபேலைக் கொன்றுபோடச் செய்தது. ஆதாம் மீண்டும் ஒரு குமாரனைப் பெற்று சேத் என்று பெயரிட்டான். ஆதாம் 930 வருடங்கள் உயிரோடிருந்தபோதிலும் (ஆதி.5:4,5) அவன் எந்த ஒரு பலியும் செலுத்தவோ, கர்த்தரை தொழுதுகொள்ளவோ செய்யவில்லை. நோவா பிறப்பதற்கு 126 வருடங்களுக்கு முன்புவரையிலும் வாழ்ந்திருந்தபோதிலும் கர்த்தரைக் குறித்து பிறருடன் சொல்லவோ, தனக்கு சம்பவித்த காரியங்களை பிறருக்கு அறிவித்து எச்சரிப்புக் கொடுக்கவோ செய்ததாக வேதாகமம் கூறவில்லை. ஆதாமின் மூன்றாவது மகனான சேத்துக்கு ஏனோஸ் பிறந்தபோது மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள் (ஆதி.4:26). சேத்தும் ஏனோசும் தேவனைத் தொழுதுகொண்டதாக தெரியவில்லை. அக்காலத்தில் துவங்கப்பட்ட மனுஷருடைய ஆராதனையில் எந்தவித பலனும் ஏற்படவில்லை. முதலாவது ஆராதனையாக ஒரே வீட்டில் ஆரம்பித்த இருவருடைய ஆராதனைகளில் ஒருவருடைய ஆராதனை நின்றுபோயிற்று. ஆதி 4: 26 கூறும் இந்த இரண்டாவது ஆராதனையும் மனுஷர் தாங்களாகவே துவங்கினபடியால் அதுவும் நின்று போயிற்று. தேவசித்தமோ, ஆவிக்குரிய தரிசனமோ இல்லாததும், விசுவாசத்திலிருந்து எழாததுமான எந்த ஆராதனையும் தேவனுக்கு முன்பாக நிலைப்பதில்லை.

ஆதாமின் ஏழாம் தலைமுறையாகப் பிறந்தவன் ஏனோக்கு. ஏனோக்கு தேவனை ஆராதித்ததாகவோ, தேவனுக்கு பலிசெலுத்தினதாகவோ வேதாகமத்தில் சொல்லப்படாவிட்டாலும் அவன் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனும், தேவனுடைய தீர்க்கதரிசியுமாக இருந்தான் என்பது உண்மை. ஆபேல் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைத் தீர்க்கதரிசனமாக முன்னறிந்துகொண்டு செய்தான்.

ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக் குறித்து : இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்பு கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடினவார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிர தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான். யூதா 14,15

ஆதியாகம புத்தகம் ஏனோக்கின் வாழ்க்கையை திட்டமும் தெளிவுமாக, தட்டுத்தடுமாற்றமின்றி சுருங்கிய வார்த்தைகளுடன் ஒரே வசனத்தில் காட்டி முடித்துவிட்டாலும், அவனுடைய விசுவாசம் விசுவாச வீரர்களின் பட்டியலில் இரண்டாவது பெயராக குறிப்பிடப்படும் அளவுக்கு உயர்ந்திருந்ததை நாம் காணமுடிகிறது.

ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணப்படாமற்போனான். தேவன் அவனை எடுத்துக்கொண்டார். ஆதி.5:22

விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினால், அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான். எபி.11:5

ஏனோக்கின் ஆராதனை

ஏனோக்கைக் குறித்து வேதம் குறிப்பிடுகிற 'தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில்', 'தேவனுக்குப் பிரியமானவனென்று' இதுபோன்ற வார்த்தைகள் தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்த ஏனோக்கின் வாழ்க்கை தேவனுக்குப் பிரியமானதென்று சாட்சிபெறும் அளவுக்கு தேவனோடு இரண்டற கலந்த வாழ்க்கையாயிருந்தது என்பதை வெளிப்படுத்துகிறது. ஏனோக்கு ஏதோ ஒருநாள் ஏதோ ஒரு இடத்தில் தேவனுக்கு பலியிட்டான் என்றோ, தேவனைத் தொழுதுகொண்டான் என்றோ வசனம் நமக்குத் தெரிவிக்காவிட்டாலும் அவனுடைய முழு இருதயமும், முழுமையாக அவனுடைய வாழ்க்கையும் தேவனோடுள்ள உறவுக்கும், பரிசுத்தராகிய கர்த்தரின் பரிசுத்த உறவாடுதலுக்கும், அவரை திருப்தியாக்கும் கனிகளை வெளிப்படுத்துவதற்கும் அர்ப்பணிக்கப்பட்டிருந்ததை நாம் உணர்ந்து கொள்ளமுடிகிறது. தான் ஆசையாய் உண்டாக்கின ஆதாம் ஏவாளிடம் திருப்தியடைய முடியாதவராய் விசனமடைந்த தேவனுடைய மனஸ்தாபத்தைப் போக்கி தேவனுக்குப் பிரியமாய் வாழ்ந்துவந்த ஏனோக்கிடம் தேவன் பிரியம் வைத்தார். அவனோடுகூடவே தேவனும் சஞ்சரித்தார். ஏனோக்கு தன் வாழ்க்கையை தேவனோடு சஞ்சரிக்க அர்ப்பணித்தது அவனுடைய ஆராதனையின் ஆழம் அவனுடைய வாழ்வின் எல்லை வரை எட்டியிருந்ததையும், தேவனுக்குப் பிரியமாகக் காணப்பட்டு தேவனால் எடுத்துக் கொள்ளப்பட்டது அவனுடைய ஆராதனை தேவனால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதையும் காட்டுகிறது. அவனுடைய முடிவுபெறாத இடைவிடாத ஆராதனையும், வாழ்வுக்கும் ஆராதனைக்கும் இடைவெளியற்ற அவனுடைய திறந்தபுத்தகம் போன்ற பரிசுத்த வாழ்க்கையும் தேவனையும், ஏனோக்கையும் பிரிக்க முடியாததாக்கிவிட்டது.

இப்படிப்பட்ட ஏனோக்கின் நெருங்கிய பிரிக்கமுடியாத தேவனோடுள்ள உறவு இன்று நமக்குமுன் மிகப்பெரிய சாட்சியாய்

நின்றுகொண்டிருக்கிறது. அவனுடைய ஆராதனையாய் வெளிப்பட்ட தேவஉறவு இன்றுவரை வாழ்ந்துவருகிற பலருக்கு எட்டமுடியாத ஒரு எல்லையாகவே இருந்து கொண்டிருக்கிறது. தேவனை ஆராதிக்கிற ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் ஆராதனையும் தேவனுக்கு ஒன்றிணைத்து அர்ப்பணிக்கப்பட வேண்டியது அவசியம். ஆராதிக்கிற நமது ஆராதனையின் முன்னிருந்த மற்றும் பின்னிருக்கிற நமது வாழ்க்கைகள் நாம் செய்த ஆராதனைக்கு ஏற்றவையாய் இருக்க வேண்டும். நமது வாழ்க்கையும், தேவனுக்கு முன் நின்று நாம் செய்கிற ஆராதனையும் எந்த இடைவெளியுமற்றவிதத்தில் இறுக இணைந்ததாக இருக்கவேண்டும்.

தேவமகிமையை அனுபவித்து தேவனோடு உறவாடி வாழ்ந்திருந்த ஆதாம் பின்பு எல்லாவற்றையும் மறந்து உலக மக்களுக்கு இணையாக வாழ்ந்ததுபோல நாம் வாழக்கூடாது. சீர்கெட்டு வாழ்ந்துகொண்டிருந்த, தேவனுக்கு விசனத்தையளித்த தலைமுறையைப் பார்த்துக்கொண்டு, அவர்கள் நோவாவின் காலத்தில் அழிக்கப்படுவதற்கு 126 வருடங்களுக்கு முன்புவரை வாழ்ந்திருந்தான். எனினும் அவன் தேவனைத்தேடவோ, தன் சந்ததிகளைக் காப்பாற்றும்படி தேவனிடம் வேண்டிக்கொள்ளவோ, தேவனைக் குறித்தும் தேவனோடு வாழவேண்டிய விதம் குறித்தும் கற்றுக்கொடுக்கவோ செய்யவில்லை. ஆனால் இந்த ஏனோக்கோ எந்த அறிவுரையும் தனக்கு கிடைக்காதபோதிலும், தன்னைப் படைத்தவருக்கு தன்னை அர்ப்பணித்து மகிழ தன் வாழ்க்கையை தேவனுக்குக் கொடுத்து, அநேகருடைய ஆசீர்வாதமான வாழ்க்கைக்கு தன் வாழ்வை மாதிரியாகப் பின்வைத்துப்போனான். ஏனோக்கைத் தொடர்ந்து நாமும் அவனைப் போல தேவனோடிணைந்து வாழ நமது வாழ்க்கையை அவருக்கு அர்ப்பணிப்போம். சத்துருவுக்கும், அவனுடைய திட்டங்களுக்கும் இடம் இல்லாமற்போகும்படி நம்மை முழுமையாய் தேவனுக்குக் கொடுத்து அவரை மகிமைப்படுத்துவோம், மகிமையடைவோம்.

3

நோவாவின் ஆராதனை

தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்த ஏனோக்கின் பரம்பரையில் வந்த லாமேக்கினால் 'கர்த்தர் சபித்த பூமியிலே நம்மைத் தேற்றுபவன்' என்கிற விசுவாசத்தோடு நோவா பெற்றெடுக்கப்பட்டான்.

பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆதி 6:11,12

சீர்கெட்டுப்போன பூமியை ஜலத்தினால் அழிப்பதற்குத் தீர்மானித்த கர்த்தர், நீதிமானும் உத்தமனுமாயிருந்து தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்த நோவாவை அவனோடு வாழ்ந்த சீர்கெட்ட ஜனத்தோடுகூட அழித்துப்போட விரும்பவில்லை.

நோவாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. ஆதி.6:8

நோவாவையும், அவன் குடும்பத்தையும் உயிரோடே காக்கும்படி கர்த்தர் உண்மையுள்ளவராயிருந்து, பூமியிலே தங்கள் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்தவர்களிடமிருந்து பிரித்தெடுத்து பேழைக்குள் பிரவேசிக்கப்பண்ணி காப்பாற்ற நினைத்தார். கர்த்தர் கற்றுக்கொடுத்தபடியே செய்ய தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் இருதயமுடையவனாயிருந்த நோவா பேழையை அவருடைய வார்த்தையின்படியே செய்துமுடித்து தேவனுக்கு முன்பாக நீதிமானாக நின்றபடியால் (ஆதி.7:1) கொடுமையினால் நிறைந்த பூமியோடுகூட அவன் வாரிக்கொள்ளப்படாமல் காக்கப்பட்டான்.

பூமியின் மேல் நாற்பதுநாள் மழைபெய்து, ஜலப்பிரளயத்தினால் மனுஷர்முதல் உயிருள்ள வஸ்துக்கள் யாவும் அழிந்து, அவைகள் பூமியிலிராதபடிக்கு நிக்கிரகமாயின. நோவாவும் அவனோடே பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டன. கர்த்தருடைய நாமத்தில் ஆராதனை செய்துவந்த மனுஷர்களிலும், அவர்களுடைய பின்தலைமுறைகளிலும் நோவாவின் குடும்பம் தவிர வேறு ஒருவரும் காப்பாற்றப்படவில்லை. நோவாவும் அவனுடைய குடும்பத்தினரும் மட்டுமே அந்த மகாபெரிய அழிவிலிருந்தும், தண்டனையிலிருந்தும் விசேஷமானவிதத்தில் பாதுகாக்கப்பட்டனர். நோவாவின் தேவ சித்தத்தைக் கேட்கிற திறந்த செவிகள் மற்றும் கீழ்படிகிற இருதயத்துடன் கூடிய அனுதின ஆராதனையே இந்த பாதுகாப்பை அவனுக்கும் குடும்பத்துக்கும் அருளியது.

அப்பொழுது நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்துகொண்டு, அவைகளை பலிபீடத்தின்மேல் தகனபலிகளாகப் பலியிட்டான். ஆதி.8:20

தேவனோடு வாழ்ந்து வந்ததால் தேவனால் பாதுகாக்கப்பட்டு காப்பாற்றப்பட்ட நோவா பேழையிலிருந்து இறங்கி புறப்பட தேவனால் கட்டளை பெற்றபோது தேவனை ஆராதிக்க மனமுற்றான். தேவனுக்கு நன்றி செலுத்த ஆரம்பித்த அவனுடைய இருதயம் அவனை ஆராதனைக்குள் இழுத்துச் சென்றது. அவனுடைய இருதயத்தில் புறப்பட்டு வந்த ஆராதனையின் தொனியே பலியிடுதலாக வெளிப்பட்டது. பலியிடுவது ஆராதனைக்குச் சமம் என்பதை முன்பகுதியில் பார்த்தோம். தேவன் ஆபிரகாமிடம் பலியிடச் சொன்னதைக் (ஆதி 22:2) குறித்து அவன் தன் வேலைக்காரனிடம் சொல்லும்போது 'தொழுது கொள்ளப்போகிறோம்' (ஆதி.22:5) என்று கூறுவதும் இதைத் தெளிவாக்குகிறது.

பலிப்பொருள், பலிபீடம் இவையேதும் அறிவிக்கப்படாத அக்காலத்திலேயே அவனுக்குள் பூரணமடைந்த துதி உச்சகட்டமடைந்து உள்ளுக்கமாக உருவெடுத்து, 1500

வருஷங்களுக்குப்பின் கர்த்தர் நியாயபிரமாணத்தின் வாயிலாக வெளிப்படுத்தவிருந்த விஷயங்களை நோவாவின் விசுவாசக்கண்களுக்கு முன் வெளிப்படச் செய்தது. அவன் அதன்படி செய்து, விசுவாச வீரர்களின் பட்டியலில் இடத்தைப் பெற்றான்.

சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார். ஆதி.8:21

நோவாவின் ஆராதனையைக் கர்த்தர் அங்கீகரித்தார். சுகந்த வாசனையாக ஏற்றுக்கொண்டார். சீர்கெட்டுப்போன தலைமுறைகளின் பொல்லாப்பைக் கண்டு மனஸ்தாபப்பட்டு, விசனமடைந்து இருந்த கர்த்தருடைய இருதயம் நோவாவின் ஆராதனையில் மாற்றம்பெற்று திருப்தியடைந்தது. 'அழிப்பேன்' என்று சொன்ன கர்த்தர் அவனுடைய ஆராதனைக்குப்பின் 'இனி சங்கரிப்பதில்லை' என்று தம்முடைய உள்ளத்தில் (ஆதி.8:21,22) சொன்னார். நோவாவின் ஆராதனை தேவனுடைய இருதயத்தை அமரப்பண்ணிற்று.

நிழலாகிய நோவாவின் ஆராதனை

1. நோவா விசுவாசத்தோடு தேவனுக்கு பலிசெலுத்தினது போல நாமும் இயேசுவின் மீது விசுவாசமுள்ளவர்களாக ஆராதனை செய்ய வேண்டும்.
2. சுத்தமுள்ளவைகளை அவன் பலிசெலுத்தினதுபோல நாமும் பாவத்திலிருந்து விடுதலைபெற்றதொரு சுத்த இருதயத்தோடு கர்த்தருக்கு ஆராதனை செய்ய வேண்டும்.
3. பலிபீடத்தின்மேல் பலியிட அறிந்திருந்த நோவாவைப் போன்று தேவசபையாகிய பலிபீடத்திலே தேவனை ஆராதிக்க வேண்டும்.
4. ஜலத்திலிருந்து காப்பாற்றப்பட்ட பிறகு பலி செலுத்தின நோவாவைப் போல பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைத்தலுக்கு அடையாளமான ஞானஸ்நானம் எடுத்தவர்களாக கர்த்தரை ஆராதிக்க வேண்டும்.
5. நோவா தன் குடும்பத்தோடு பலிசெலுத்தினதுபோல நாமும் குடும்பமாக கர்த்தரை ஆராதிக்க வேண்டும்.

நோவாவும் குடும்பமும் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்து கீழ்படிந்து கிறிஸ்துவுக்கு நிழலான பேழைக்குள் பிரவேசித்து காப்பாற்றப்பட்டார்கள். அப்படியே நாமும் இயேசுவாகிய பேழைக்குள் பிரவேசித்து அக்கினியினால் இனி உண்டாகப்போகிற நியாயத்தீர்ப்பிலிருந்து நம்மை காப்பாற்றிக்கொள்ள வேதவசனம் எச்சரிக்கிறது. பேழைக்குள் பிரவேசித்து காப்பாற்றப்படத்தக்க கிருபையை தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளும்படி தேவனோடு சஞ்சரிக்கிற வாழ்வை உடையவனாயிருந்த நோவாவைப் போல நம்முடைய இருதயமும் தேவனோடு சஞ்சரித்து மகிழுகிற இருதயமாய் மாறி நியாயத்தீர்ப்புக்கு நீங்கி காக்கப்பட உங்கள் வாழ்வை தேவனுடைய வார்த்தைகளுக்கு அர்ப்பணித்துவிடுங்கள். அப்பொழுது தேவன் விரும்பும் வாசனைமிக்க ஆராதனை உங்களில் வெளிப்படும்.

பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும், அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் அறியாதிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது. || பேதுரு 3:5-7

④

ஆபிரகாமின் ஆராதனை

நோவாவின் ஆராதனைக்குப்பின் 1000 வருடங்கள் கழிந்த பின்னரே நோவாவின் மகனான சேமின் வம்சத்தில் தேவனைத் தேடுகிற ஒரு மனிதன் வெளிப்பட்டான். தன்னைத் தேடுகிறவர்களைக் காண்கிற அவருடைய கண்கள் நோவாவுக்குப்பின் பத்தாம் தலைமுறையில் வந்த தேராகுடைய மகனாகிய அம்மனிதனைக் கண்டது. அவன்தான் ஆபிரகாம். தேராகு நாகோர், ஆரான் என்பவர்களையும் பெற்றிருந்தான். ஆரான் லோத்தைப் பெற்றபின் ஊர் என்கிற அவர்களுடைய பிறந்த இடத்திலேயே மரித்து விட்டான். தேராகு ஆபிராம், ஆபிராமின் மனைவி சாராய், ஆரானின் குமாரன் லோத்து ஆகியோருடன் கல்தேயர் பட்டணமாகிய ஊர் பட்டணத்தைவிட்டு கானான் தேசத்துக்குப் புறப்பட்டு வந்தான். ஆனால் வழியில் ஆரானிலேயே இருந்து விட்டார்கள். தேராகு அங்கே மரித்துவிட்டான். அங்கே தான் கர்த்தர் ஆபிராமை அழைத்தார்.

பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொண்டாரென்று அறியுங்கள். சங்.4:3

பலிபீடம் கட்டி தொழுது கொண்டான்

கர்த்தர் ஆபிரகாமை அழைத்து நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ என்றார். கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப் போனான். அத்தேசத்திற்கு வந்து சேர்ந்தான். தேவனுடைய வார்த்தைகள் காதுகளில் விழுந்ததும் யோசனையும் தாமதமுமின்றி புறப்பட்டு, அடைய வேண்டிய

இடத்தை வந்து அடைந்த ஆபிரகாமுக்குக் கர்த்தர் அங்கே தரிசனமானார். அவனுக்கு உண்டாகப்போகும் சந்ததிக்கு அந்த தேசத்தை வாக்களித்தார். தன்னை மறவாமல் தன்னைத் தொடர்ந்துவந்து தனக்கு தரிசனமான கர்த்தருக்கு அவன் தன் உள்ளத்தின் நிறைவால் அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.

அவன் தனக்குத் தரிசனமான கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினான். ஆதி.12:7

அவன் அவ்விடத்தில் கட்டின பலிபீடத்தில் பலியிட்டதாகக் குறிப்பிடப்படவில்லை. இப்பலிபீடத்தில் அவன் தேவனுக்குப் பலியிடுவதற்கு பதிலாக தொழுதுகொண்டு ஆராதனை செய்திருக்கலாம்.

பின்பு அவன் அவ்விடம்விட்டு பெயர்ந்து பெத்தேலுக்குக் கிழக்கே இருக்கும் மலைக்குப் போய், அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான். ஆதி.12:8

அத்தேசத்திலே பஞ்சம் கொடிதானபோது, எகிப்து தேசத்துக்குப்போய் அங்கே தங்கினான். அங்கிருந்து அவன் எகிப்திற்குப் போனது தேவனுக்குப் பிரியமில்லாத காரியம். அங்கே தன் தவற்றை உணர்ந்த அவன் தன் மனைவியையும் திரும்பப் பெற்றுக்கொண்டு, மறுபடியும் கானானுக்குத் திரும்பி அவன் தான் முன்பு கர்த்தரைத் தொழுதுகொண்ட இடத்தைத் தேடிப்போய் அங்கே கர்த்தரைத் தொழுதுகொண்டான்.

தான் முதன்முதல் ஒரு பலிபீடத்தை உண்டாக்கினதுமான ஸ்தலமட்டும் போனான்; அங்கே ஆபிராம் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான். ஆதி.13:4

ஆபிராம் பிரயாணம் செய்த இடங்களில் பலிபீடம் கட்டி தேவனைத் தொழுதுகொண்டான். லோத்தைவிட்டுப் பிரிந்த ஆபிராமின் கண்களைத் திசையெங்கும் நோக்கும்படி கர்த்தர் ஏறெடுக்கச்செய்து, அவன் (இன்னும் பெற்றுக்கொள்ளாத) சந்ததியைக் குறித்து அவனுக்குக் கொடுத்த வாக்கை மீண்டும் நினைவுபடுத்தி உறுதிப்படுத்தினார். தன்னைத் தேற்றும்படி தன்னோடு பேசின

கர்த்தரைத் தான் குடியிருந்த இடத்தில் மீண்டும் தொழுது கொண்டான்.

அப்பொழுது ஆபிராம் கூடாரத்தைப் பெயர்த்துக் கொண்டுபோய், எபிரோனிலிருக்கும் மம்ரேயின் சமபூமியில் சேர்ந்து குடியிருந்து, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.

ஆதி.13:18

பலியிடச் சொல்வதற்கு முன் பலியிட்டுவிட்டான்

இதுவரை அவன் கட்டின எல்லா பலிபீடங்களிலும் அவன் தொழுதுகொண்டான் என்று வசனம் குறிப்பிடுகிறதேயன்றி அவன் பலிசெலுத்தியதாகக் கூறவில்லை. கர்த்தரை தொழுதுகொண்டு வந்த அவனுக்கு பலி செலுத்துவதைக் கற்றுக்கொடுக்க கர்த்தர் எண்ணினார்.

அதற்கு அவர் : மூன்று வயதுக் கிடாரியையும், மூன்று வயது வெள்ளாட்டையும், மூன்று வயது ஆட்டுக்கடாவையும், ஒரு காட்டுப்புறாவையும், ஒரு புறாக்குஞ்சையும் என்னிடத்தில் கொண்டுவா என்றார். அவன் அவைகள் எல்லாவற்றையும் அவரிடத்தில் கொண்டுவந்து, அவைகளை நடுவாக துண்டித்து, துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைத்தான்; பட்சிகளை அவன் துண்டிக்கவில்லை. பறவைகள் அந்த உடலின்மேல் இறங்கின; அவைகளை ஆபிராம் துரத்தினான். சூரியன் அஸ்தமிக்கும்போது ஆபிராமுக்கு அயர்ந்த நித்திரை வந்தது. திகிலும், காரிருளும் அவனை மூடிக்கொண்டது. *ஆதி.15:9-12*

கர்த்தர் பலிப்பொருட்களை தம்மிடத்தில் கொண்டுவரச் சொன்னாரேயன்றி பலியிடச் சொல்லவில்லை. பலியிடும் விதத்தைக் கர்த்தர் சொல்லுவதற்குமுன் அவனாகவே பலிசெலுத்திவிட்டான். நிகழ்ந்தது என்ன? துண்டிக்கப்படாத பறவைகள் பலிப்பொருளின்மேல் இறங்கின. பறவைகள் இங்கு சாத்தானைக் குறிக்கிறது. ஆராதனையில் சாத்தான் குறுக்கிட இடமுண்டாயிற்று. ஆசீர்வாதத்தை உறுதிப்படுத்தும்படி செய்யப்பட்ட ஆராதனை சாபத்தில் முடிவுற்றுப்போனது.

அப்பொழுது அவர் ஆபிராமை நோக்கி: உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய் (ஆதி.15:13) என்றார்.

தேவ வார்த்தையின்படி பயத்தோடும், நடுக்கத்தோடும் நொறுங்குண்ட இருதயத்தோடு செய்யப்படும் ஆராதனையைக் கர்த்தர் புறக்கணிக்கமாட்டார். ஆராதனை தேவனிடம் கற்றறிந்து ஒழுங்கும் கிரமமுமாக நிர்விசாரமின்றி செய்யப்பட வேண்டும் என்பதில் கர்த்தர் கவனமாயிருப்பார். இருதயத்தில் மறைந்து கிடக்கும் முழுமையாக அகற்றப்படாத பாவங்களோடு பரிசுத்தமில்லாமல் ஆராதனை செய்தால் அதைக் கர்த்தர் விரும்பமாட்டார். அவன் துண்டித்து பறவைகளின் அசுத்தங்களைக் களையாமல் அவற்றை பலிபீடத்தில் வைத்ததைப் போன்று இருதயம் முழுவதும் பாவசிந்தைகளும், உலக சிநேகமும் நிறைந்திருக்கும்போது வெளிப்படையான வேஷபக்தியோடு துணிகரமாய் நின்றுகொண்டு ஆராதித்தால் அது சாபத்தையே கொண்டுவரும். ஆபிரகாமின் தவற்றின் விளைவு அவனுடைய சந்ததிகளைப் பாதித்ததுபோல பரிசுத்தமில்லாமல் கர்த்தரை ஆராதனை செய்தால் அது பின்தலைமுறைகளைப் பாதிக்கும் என்பது பெற்றோர் கவனிக்க வேண்டிய காரியம். தேவன் கற்றுக்கொடுக்கிற காரியங்களைப் பொறுமையோடும் கவனத்தோடும் கற்றுக்கொண்டு செயல்பட வேண்டியது மிகமிக அவசியம். காத்திருக்க வேண்டிய காலங்களில் தேவனுடைய வார்த்தை நம்மைச் சந்திக்கும்வரை நீடிய பொறுமையுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

இவ்விதமே சவுல் பலிசெலுத்தும்படி தீவிரித்துக்கொண்டபோது அவன் புறக்கணிக்கப்பட்டுப் போனதை நாம் அறிந்திருக்கிறோம். இஸ்ரவேலின் ராஜாவாயிருந்த சவுலைப் பார்த்து சாமுவேல் இவ்வாறு கூறினான்.

நீ எனக்கு முன்னே கில்காலுக்கு இறங்கிபோ. சர்வாங்க தகனபலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்தும்படிக்கு நான் உன்னிடத்தில் வருவேன்; நான் உன்னிடத்தில் வந்து, நீ செய்ய வேண்டியதை உனக்கு அறிவிக்குமட்டும் ஏழுநாள் காத்திரு என்றான். I சாமு.10:8

அவன் தனக்குச் சாமுவேல் குறித்தகாலத்தின்படி ஏழுநாள் மட்டும் காத்திருந்தான்; சாமுவேல் கில்காலுக்கு வரவில்லை, ஜனங்கள் அவனைவிட்டுச் சிதறிப்போனார்கள். அப்பொழுது சவுல்: சர்வாங்க தகன பலியையும் சமாதான பலிகளையும் என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்று சொல்லி, சர்வாங்க தகனபலியைச் செலுத்தினான். I சாமு.13:8-9

சவுல் தகனபலிகளைச் செலுத்திக்கொண்டிருக்கையில், சாமுவேல் வந்து அவனுடைய ஆராதனையை புத்தியீனம் என்று கூறினான். நாமோ ரோமர் 12:1 கூறுவது போல் புத்தியுள்ள ஆராதனை செய்ய தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

சாமுவேலிடம் சவுல் கில்காலுக்குப் போகும்படி கட்டளை பெற்றானே தவிர பலிசெலுத்தும்படி அல்ல. ஆபிராமைப் போன்று ஆராதனையில் அவசரம் காண்பித்த சவுலின் இச்செயல் அவனுடைய ராஜ்யபாரத்திற்கு மட்டிட்டு அவனை வீழ்ச்சியடையச் செய்தது. சாத்தான் சவுலுக்குள் போட்ட துணிகரம் அவனையும் அவன் சந்ததியையும் ராஜாசனத்தை விட்டு இறங்கப் பண்ணிற்று.

தேவனுடைய வார்த்தைக்குக் காத்திருக்க மறந்தவனாகிய ஆபிராமின் சந்ததி தங்கள் தேசத்தை விட்டு அந்நிய தேசத்தில் பரதேசிகளாய் அலைய வேண்டியதாயிற்று. மட்டுமல்லாது வசனத்தின்படி கர்த்தரை ஆராதிக்காவிட்டால் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வருவதற்குப் பதிலாக சாத்தானுடைய ஆவி இறங்கி வரும். ஆபிராமின் சந்ததிக்கு ஆசீர்வாதத்திற்குப் பதிலாக சாபம் உண்டாவதற்குக் காரணம் அவன் தனக்குத் தோன்றினபடி பலிசெலுத்தினால்தான்.

ஈசாக்கை கர்த்தர் பலியிடச் சொன்னார்

ஆபிரகாமின் தொண்ணூற்றொன்பதாம் வயதில் நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய் என்ற உடன்படிக்கையை கர்த்தர் அவனுடன் ஏற்படுத்தி ஆபிரகாம் என்று அழைத்தார். குறித்திருந்த காலத்தில் ஈசாக்கை அவன் கரங்களிலே கொடுத்தார். இஸ்மவேலை ஆபிரகாமைவிட்டு நீக்கினார். அத்துடன் நின்றுவிடாமல் மீண்டும் ஆபிரகாமே என்று அழைத்தார். உன் புத்திரன், உன் ஏகசுதன், உன் நேசகுமாரன் என்று அழுத்தந்திருத்தமாகக் கூறி ஈசாக்கைப் பலியிடும்படி கட்டளையிட்டார். ஆபிரகாம் செய்தது என்ன? அதிகாலையில் எழுந்தான், தேவன் தனக்குக் குறித்த இடத்திற்கு ஈசாக்குடனும் கட்டைகளுடனும் புறப்பட்டுப் போனான். மோரியா தேசத்தில் அனேக மலைகள் உண்டு. அதில் ஏதாவது ஒரு மலையில் பலியிடு என்று சொல்லாமல், நான் காண்பிக்கிற மலையில் பலியிடு என்று கர்த்தர் சொன்னார். மூன்றுநாள் பிரயாணம் செய்துபோனபோது தூரத்திலே ஆபிரகாம் அந்த இடத்தைக் கண்டான்.

அப்பொழுது ஆபிரகாம் தன் வேலைக்காரரை நோக்கி : நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கே காத்திருங்கள்; நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும்போய், தொழுதுகொண்டு உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம் என்றான். ஆதி.22:5

கர்த்தர் முதன்முதலாக ஒரு பலியைக் கேட்டது ஆபிரகாமிடத்தில்தான். அவனும் கர்த்தர் சொன்னபடியே செய்தான். முன்பு ஒருமுறை ஆராதனையின் அழைப்பைச் சரியாக நிறைவேற்ற இயலாதவனாய்ப் போன ஆபிரகாம் இம்முறையோ விசுவாச வைராக்கியமும், வீரமும் நிறைந்தவனாய் தேவனுடைய உன்னதமும் உயரமுமான உச்சக்கட்ட ஆராதனை அழைப்பிற்குத் தன்னை அர்ப்பணித்தான். முன்பு பறவைகளைத் துண்டிக்க தாமதித்த கரங்கள் தன் நேசகுமாரனைத் துண்டிக்க இம்முறை தாமதிக்காமல் ஓங்கி உயர்ந்தன. அவனைத் தடுத்து நிறுத்தினார் கர்த்தர். தாம் ஆயத்தம் பண்ணினதும் அவன் விசுவாசித்ததுமான ஆட்டை அவனுக்குக் கொடுத்தார். கர்த்தர் கொடுத்த ஆட்டை

பலிசெலுத்திவிட்டு, தேவனுடைய சோதனையில் ஜெயத்தைப் பெற்றவனாக தன் வேலைக்காரரிடம் ஈசாக்குடன் திரும்பிவந்தான்.

பிரியமானவர்களே, கர்த்தரை ஆராதிக்கிற இடங்கள் இன்று அநேகம் உண்டுதான். ஆனால் நமக்கு விருப்பமான இடங்களில் போய் ஆராதிப்பது சரியானதல்ல. கர்த்தர் காட்டுகிற இடத்திற்குப் போய், கர்த்தருக்கு ஆராதனை செய்தால் ஆராதனையின் மகிழ்வை வாழ்வில் தாங்கியவர்களாய் திரும்ப முடியும். துக்கமும் சந்தோஷமாய் மாறும். விசுவாசத்தோடு சூழ்நிலையினால் தளர்ந்து போகாமல் முழுமையாக தேவனுக்கு நம்மை அர்ப்பணித்தால் எல்லாவற்றையும் நமக்காக செய்துமுடிக்கிற கர்த்தரை நிச்சயமாக நம் வாழ்வு தரிசிக்கும்.

கண்ட இடமெல்லாம் நீ உன் சர்வாங்க தகனபலிகளை இடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. *உபா.12:13*

ஆபிரகாமின் ஆராதனையின் சிறப்புகள்

அதிகாலையில் புறப்பட்டான்

கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் தங்களுக்கு இஷ்டமான நேரத்தில் ஆலயத்தில் வராமல், ஆராதனை துவங்குமுன் பலிபீடமாகிய ஆலயத்திற்கு வர வேண்டும். சரியான நேரத்துடன் போய் ஆராதனையில் இணைந்துகொள்வது இருதயத்தின் வாஞ்சையை தேவனிடம் வெளிப்படுத்துவதாக அமையும்.

பலிபொருளுடன் வரவேண்டும்

ஸ்தோத்திர சிந்தையுடன் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நாம் ஸ்தோத்திர பலிகளோடு ஆலயத்திற்கு வரவேண்டும். ஆபிரகாம் கர்த்தருக்குக் கீழ்படிவதில் கடினதீர்மானமுடையவனாய் ஈசாக்கை பலிபொருளாய்க் கொண்டுபோக தயங்கவில்லை. மனதைக் குழப்பவில்லை. தீர்மானத்தை மூன்று நாள் பிரயாணமட்டும் மாற்றாமல் காத்துக்கொண்டு ஈசாக்கை பலிமேடைவரை கொண்டு சேர்த்தான். நாமும் சூழ்நிலையின் கடினத்தினாலோ நெருக்கடிகளினாலோ நன்றியறிதலையும்

ஸ்தோத்திர சிந்தையையும் இருதயத்தில் இழந்துவிடாமல் தேவனை ஆராதிக்க வேண்டும்.

கழுதை, வேலைக்காரர்களை வெளியே நிறுத்தினான்

கர்த்தரைத் தொழுது கொள்ளுகிற நாம் உலக சிந்தையையும், பாவசிந்தையையும் அகற்றிவிட வேண்டும். ஆனால் ஆராதனை முடிந்தபின் திரும்ப அவற்றை நம்முடன் சேர்த்துக் கொள்ளக்கூடாது. அசுத்த சிந்தைகள் நம்மைவிட்டு நிரந்தரமாய் அகற்றப்பட்டால்தான் ஆராதனையின் விளைவான தேவனுடைய நிறைவுகள் நம்மில் நிரந்தரமாய் தங்க முடியும்.

கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்ற சிந்தை

தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைக் கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்ற ஆபிரகாமின் விசுவாசத்திற்கிணங்க பலிபீடத்தின் அருகே தகனபலிக்கான ஆட்டுக்குட்டி இருந்தது. ஆராதிக்கிறவர்களுடைய தேவைகளையெல்லாம் அவரே பார்த்துக்கொள்வார். விசுவாசத்தோடு கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று அறிக்கையிடுங்கள்.

ஆசீர்வாதத்துடன் திரும்பினார்கள்

ஆட்டுக்குட்டி இல்லாதவர்களாய் கர்த்தரைத் தொழுதுகொள்ளப்போன அவர்கள் தொழுதுவிட்டு வரும்போது ஆட்டுக்குட்டியாகிய ஆசீர்வாதத்தின் பகுதிகளுடன் வந்தார்கள். நாமும் நம்மை முழுமையாய் தேவனுக்கு உவந்தளித்து நம்மை வெறுமையாக்கிவிட்டு, பரிசுத்த ஆவியானவரோடிணைந்து தேவனை ஆராதிக்கும் போது தேவனுடைய மகிமையின் ஐசுவரியம் நம்மை வெறுமையாக்கிக் கொண்ட நம்முடைய எல்லைகளை முழுமையாக நிரப்பிவிடும்.

வேதவசனத்தின்படி கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுக்கு கர்த்தர் தேவையான ஆசீர்வாதங்களையும், மனமகிழ்ச்சியையும் கொடுப்பார். தேவனுக்குக் கீழ்ப்படிய தம்மை அர்ப்பணித்த எவரும் அவர் அருளும் சந்தோஷத்தை தவறவிடுவதில்லை.

5

ஈசாக்கின் ஆராதனை

எவ்விதத்திலும், எந்நேரத்திலும் தேவனை ஆராதிக்கத் தவறாத ஆபிரகாமைப் போலவே ஈசாக்கும் தேவனை தேடுகிறவனாயிருந்தான். தன் தகப்பன் தேவனிடம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களைத் தன் வாழ்வில் தக்கவைத்துக் கொண்டதால், கர்த்தரால் நூறுமடங்கு பலனடைந்தவனும், மற்றவர்களைப் பார்க்கிலும் பலத்தவனுமானான்.

தனிநேரம் எடுத்து, தேவனோடு தனிமையாய் தியானம்பண்ணி உறவாடுகிறவனாயிருந்த அவன் ஐசுவரியவானாகி வரவர விருத்தியடைந்து மகாபெரியவனானான். ஆகவே கேராரிலிருந்த அவன் அவர்களால் பகைக்கப்பட்டு துரத்திவிடப்பட்டான். ஆபிரகாம் ஈசாக்குக்குக் கொடுத்த துரவுகளையெல்லாம் பெலிஸ்தர் பொறாமையினால் நிரப்பிப் போட்டார்கள்.

ஈசாக்கு வெட்டின துரவுகளையும் அவர்கள் மண்போட்டு மூடினார்கள். ஈசாக்கு அவர்களை எதிர்க்கவோ, பகைக்கவோ செய்யாமல் மறுபடியும் துரவுகளை (ஏசேக்கு, சித்னா) வெட்டினான். அப்போதும் வாக்குவாதம் பண்ணினார்கள். எனினும் அவன் பொறுமையாயிருந்தான்.

எதிர்த்து போராடாமல் ஆராதித்த ஈசாக்கு

பின்பு அவ்விடம்விட்டுப் பெயர்ந்துபோய், வேறொரு துரவை வெட்டினான்; அதைக்குறித்து அவர்கள் வாக்குவாதம் பண்ணவில்லை; அப்பொழுது அவன் : நாம் தேசத்தில்

பலுகும்படிக்கு, இப்பொழுது கர்த்தர் நமக்கு இடம் உண்டாக்கினார் என்று சொல்லி, அதற்கு ரெகோபோத் என்று பேரிட்டான்.

ஆதி:26:22

அங்கேயிருந்து அவன் பெயெர்செபாவுக்குப் போனான். அன்று ராத்திரியிலே கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி பயப்படாதே, நான் உன்னோடேகூட இருப்பேன் என்று கூறி திடப்படுத்தி, உன்னை ஆசீர்வதித்து உன் சந்ததியை பெருகப்பண்ணுவேன் என்று கூறினார்.

அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக்கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான். ஆதி.26:25

தன்னை எதிர்த்து நின்றவர்களையும், தனக்குரியவைகளை அழித்துப் போட்டவர்களையும் எதிர்த்துப் போரிடாமல், எல்லாவற்றையும் தேவனிடத்தில் விட்டுவிட்டு அமைதியாயிருந்த அவனுக்குக் கர்த்தர் எல்லாவற்றையும் அனுகூலமாக்கிக் கொடுத்தார். தனக்கு துணைநின்ற கர்த்தருக்கு நன்றி செலுத்த மறவாமல் அவன் தேவனைத் தொழுதுகொண்டான்.

நாமும் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டு முன்னேற்றமடையும்போது தடைசெய்யும்படியாக மனுஷரும், சாத்தானும் ஒன்றிணைந்து எதிரிட்டு நிற்கிற சூழல்களை நாம் சந்திக்க நேரிடலாம். ஆனால் சாத்தானின் தாக்குதல்களோ, மனித ஆயுதங்களோ எதுவாயிருந்தாலும் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட நம்மைச் சேதப்படுத்த முடியாது. அவரே நமக்கு அரணும், கோட்டையும், கேடகமும், அடைக்கலமுமாயிருந்து நம்மைப் பாதுகாப்பார். ஈசாக்கு நன்மை செய்த கர்த்தரை தொழுதுகொள்ள மறவாதது போல கர்த்தரிடத்தில் நன்மைபெற்ற ஒவ்வொருவரும் நன்றி செலுத்தி பரிசுத்த அலங்காரத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ள மறவாதிருக்க வேண்டும். இயேசுவிடம் சுகம்பெற்று நன்றி சொல்ல மனமற்றுப்போன ஒன்பது குஷ்டரோகிகளைப் போலிராதபடிக்கு நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். வேதத்திலே (யோவான் 5:14) தேவாலயத்தில் இயேசு சந்தித்த பெதஸ்தா குளக்கரையில் இயேசுவிடம் சுகம்பெற்ற

மனிதனைப் போலவும், பேதுருவிடம் சுகம்பெற்று குதித்தெழுந்து நின்று நடந்து தேவனைத் துதித்துக்கொண்டு தேவாலயத்திற்குள் பிரவேசித்த முடவனைப் போலவும், பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக துதிபலி செலுத்தி தேவனை ஆராதிக்க மறவாதிருந்தால் ஈசாக்கை ஆசீர்வதித்த கர்த்தர் நம்மையும் ஆசீர்வதிப்பார். தேவனை ஆராதித்துவிட்டு வீட்டிற்குப் போனபோது அவனுடைய வேலைக்காரர் தாங்கள் வெட்டின துரவைக் குறித்த நற்செய்தியோடு ஈசாக்கை எதிர்கொண்டார்கள்.

அந்நாளில்தானே, ஈசாக்கின் வேலைக்காரர் வந்து, தாங்கள் துரவு வெட்டின செய்தியை அவனுக்கு அறிவித்து, தண்ணீர் கண்டோம் என்றார்கள். ஆதி.26:32

அனேகர் தங்கள் வாழ்க்கையின் ஆசீர்வாதத்திற்காக பெரும்பாடுபடுகிறார்கள். ஒரு பலனுமில்லை. பிரயாசப்பட்டு தள்ளாடுகிறார்கள். தங்கள் சுயமுயற்சியில் தளர்ந்துபோன யாராயிருந்தாலும் சோர்ந்துபோகாமல் சகலத்தையும் கர்த்தருடைய பாதத்தில் வைத்துவிட்டு அவரை முழுமையாக சார்ந்துகொண்டு துதித்து ஆராதிக்க ஆரம்பிக்கும் போது நம்மையுமறியாமல் நம் வாழ்வின் வெற்றிடங்கள் எல்லாம் முழுமையாக நிரப்பப்பட்டிருப்பதை நாம் காணமுடியும். ஆகவே கவலைப்படுவதை நிறுத்துங்கள். துதிக்க ஆரம்பித்துவிடுங்கள். ஏசேக்கு சித்னாவின் வேதனையான அனுபவங்கள் மறையும். கர்த்தர் உங்களுக்கு இடமுண்டாக்கி பெருகப்பண்ணும் ரெகோபோத்தின் அனுபவம் துளிர்விடும். ஈசாக்கு தன்னுடைய திட்டங்கள் நிறைவேற்றப்பட முடியாததைக் கண்டு அப்படியே தன் தைரியத்தையும், முயற்சியையும் விட்டுவிடவில்லை. தொடர்ந்து தனக்காக தேவன் வைத்திருக்கும் துரவாகிய ரெகோபோத்தைக் குறித்த தரிசனமும், தேடுதலும் உடையவனாயிருந்தான். தன் திட்டத்தில் விளைந்த தோல்வியை சகித்துக்கொண்டு தேவ திட்டத்தை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு ஆராதித்த அவனுக்கு ஆசீர்வாதம் ரெகோபோத்தோடு நின்றுவிடாமல் மீண்டும் பெயர்செபா மட்டும் தொடர்ந்தது. தேவ திட்டத்துக்கு உங்களை அர்ப்பணித்து ஆராதித்து

மகிழுங்கள். ஆசீர்வாதம் உங்களை தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும்.

இதுவரை அனுபவித்த எல்லா இல்லாமைகளும், கடனின் நெருக்கடிகளும், பிரச்சினைகளும், வேதனைகளும் கவலைகளும் இன்னும் தொடர்ந்து கொண்டிருப்பது ஏன்? கண்ணீரின் பள்ளத்தாக்கிலேயே நின்று கொண்டிருப்பது ஏன்? சோதனைகளின் சோகங்களில் மூழ்கிக்கொண்டிருப்பது அர்த்தமற்றது. சிந்தையை தேவன்பக்கமாய் திருப்பினால், நம் சூழ்நிலை தானாக மாறும். தொடர்ச்சியான போராட்டங்களும், மன குழப்பங்களும் தற்போது ஒருவேளை உங்களை அசைக்க முயற்சிப்பது உண்மையாக இருக்கலாம். தன்னுடைய பிரச்சினை நேரங்களில் பிரச்சினையின் சூழ்நிலைகளை அலசி ஆராய்ந்துகொண்டு அவ்விடத்திலேயே நின்று கொண்டிருக்காமல், பிரச்சினைகளைக் கடந்து, அவற்றைத் தாண்டி சென்று, தொடர்ச்சியாய் பொறுமையைக் காத்துக் கொண்டு செயல்பட்ட ஈசாக்கைப் போல நாமும் நம்முடைய பிரச்சினைகளையும், பிரச்சினை எழுகிறதற்கான காரணங்களையும் நோக்கிக் கொண்டு நின்று நேரத்தை வீணடிக்காமல் முன்னானவைகளை நோக்கி நம் காலடிகளைத் துரிதப்படுத்த வேண்டும். அப்பொழுது நாம் நெடுநாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற எல்லா ஆசீர்வாதங்களும் நம்மிடம் வந்து சேரும்.

நம் சிந்தை பிரச்சினையை விட்டு நீங்கி தேவன்பக்கம் திரும்புமானால், கண்ணீரின் பள்ளத்தாக்கை நாம் நீரூற்றாக்கிக்கொள்ள முடியும். கால்கள் நடவாத முற்றிலும் புதிதான பாதையில் கூட நாம் சமாதானத்துடன் நடக்கமுடியும். சோதனைகள் நம்மைவிட்டு அகன்றுபோகும். சந்தோஷம், சமாதானம் நமக்குள் நிலைக்கும். பொறுமையுடன் எதிர்த்துப்போரிடாமல் தாழ்மையாக நடந்துகொள்வோமானால் நம்மை எதிர்த்துப் போரிடுகிறவர்கள் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்றும், நம் தகப்பனாகிய தேவனுடைய சகல ஆசீர்வாதங்களுக்கும் நாமே சுதந்தரவாளிகள் என்றும் கண்டுகொள்ளுவார்கள். அநேகருடைய ஆசீர்வாதமான வாழ்விற்கான மாதிரிச் சின்னங்களாக நம்முடைய வாழ்வு மாறும். ஆகவே ஈசாக்கிற்குள் இருந்த அந்த தேவசிந்தை நம்மையும் ஆளட்டும்!

⑥

யாக்கோபின் ஆராதனை

தன் சகோதரனாகிய ஏசாவுக்குப் பயந்து, ஆரானுக்கு ஓடிப்போய், தன் மாமனாரோடு இருபது வருஷம் தங்கியிருந்த யாக்கோபு குடும்பமாக லாபான் இல்லாத வேளையில் வீட்டைவிட்டு கிளம்பினான். இதையறிந்த லாபான் ஏழு நாட்கள் பயணம் செய்து அவர்களைக் கண்டுபிடித்தான். திரும்பவும் அவர்களை தன்னுடன் ஆரானுக்கு அழைத்துச்செல்ல முயற்சித்தான். இதற்கு சம்மதிக்காதபடி யாக்கோபு லாபானுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டான்.

தீங்குசெய்ய நான் இந்தக் குவியலைக் கடந்து உன்னிடத்துக்கு வராதபடிக்கும், நீ இந்தக் குவியலையும் இந்தத் தூணையும் கடந்து என்னிடத்துக்கு வராதபடிக்கும் இந்தக் குவியலும் சாட்சி, இந்தத் தூணும் சாட்சி (ஆதி.31:52) என்பதே அந்த உடன்படிக்கை.

லாபானைப் பிரிந்தபின் ஆராதனை

யாக்கோபும், லாபானும் உடன்படிக்கை செய்துகொண்ட பின், யாக்கோபு மலையின்மேல் பலியிட்டான் (ஆதி.31:54). லாபானுடன் வாழ்ந்த இருபது வருட காலங்களில் அவன் ஒருமுறைகூட பலி செலுத்தியதாக வேதம் கூறவில்லை. ஆனால் தன்னை பின்தொடர்ந்து வந்த லாபானுக்கும் தனக்கும் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்திக் கொண்ட அந்நேரம்தானே கர்த்தருக்கு பலிசெலுத்தும்படி அவனுக்குள் ஒரு தீர்மானம் உண்டாயிற்று. பழைய வாழ்விற்கு தான் தீர்மானித்தபடி விடைகூறுவதில் உறுதியாயிருந்த யாக்கோபை கர்த்தர் ஆராதனையின் அபிஷேகத்தால் நிறைத்தார்.

ஒரு மனிதன் உலகம், மாமிசம், பிசாசோடு பின்னிப் பிணைந்திருக்கும் காலம்வரை கர்த்தரை உண்மையாக ஆராதனை செய்ய முடியாது. கர்த்தரை ஆராதிக்கிறவன் பாவத்தை விட்டுப் பிரிய வேண்டியது அவசியம். பாவத்திற்கு விடைகொடுத்து விட்ட ஒருவனுடைய பரிசுத்தமான உள்ளமே பரிசுத்ததேவனுக்கு பரிசுத்த ஆராதனை செய்யும் பணிமூட்டாக இருக்க முடியும். ஆராதனைதான் ஆராதிக்கிறவனை பாவத்திலிருந்து பிரிக்கவேண்டும் என்று நினைப்பது தவறு. பாவத்தை விட்டுப் பிரிந்து, தீர்மானத்தில் உறுதியாயிருக்கிறவர்களால் நிச்சயமாக தேவனை இருதயமாற ஆராதித்து மகிழமுடியும். யாக்கோபு லாபானைவிட்டுப் பிரிந்து புறப்பட்ட பின்னரும் ஏழுநாட்கள் லாபான் அவனைப் பின்தொடரத்தான் செய்தான். அவ்வாறே பாவத்தை விட்டு விலகுகிறவர்களை மீண்டும் பாவம் துரத்திக்கொண்டே வருவதும், பயமுறுத்துவதும் இயல்பே. ஆனால் உறுதியான தீர்மானத்துடன் பாவத்துக்கும் நமக்கும் இடையே கர்த்தரை நிறுத்திக்கொண்டு அவருடைய அடைக்கலத்துக்குள் தஞ்சம் புகுந்து கொள்வோமானால் பழைய பாவங்கள் ஒருபோதும் நம்மை நெருக்கவோ, மேற்கொள்ளவோ, பயமுறுத்தவோ முடியாது.

லாபான் தொடர்ந்து வந்தது ஏன்?

ராகேல் ஒருவருக்கும் தெரியாமல் திருடிக்கொண்டுவந்த தெய்வங்களை வாங்குவதற்காகத்தான் லாபான் அவர்களை பின்தொடர்ந்தான் (ஆதி.31:30). யாக்கோபு தேவனோடு நெருக்கமான உறவுகொண்டிருந்தான். ஆனால் அவனுடைய மனைவி ராகேலோ அவனுடைய தேவனைக் குறித்த எந்த கரிசனையும் இல்லாதவளாக இருந்தாள். தன் கணவன் வணங்காத தெய்வங்களாயிருந்தும், தன் தகப்பன் வணங்கிவந்த அந்நிய தெய்வங்களாகிய விக்கிரகங்களை தன்னோடு வைத்துக்கொண்டாள். விக்கிரகங்களை விட்டுவிட மனமற்றவளாகிய ராகேலினிமித்தம் லாபான் அவர்களைத் தொடர்ந்து வந்து வழியில் தடுத்து நிறுத்தினான். ராகேல் அந்த சுரூபங்களை ஒட்டகச் சேணத்தின் கீழ் வைத்து,

அதின்மேல் உட்கார்ந்திருந்தாள். நல்ல வேளையாக அவன் அதைக்கண்டுபிடிக்காமல் திரும்பிப்போனான். தற்சமயம் அவளும் தப்பித்துக் கொண்டாள். கண்டுபிடிக்கப்பட்டிருந்தால், யாக்கோபு அதிகமாக நேசித்த தன் மனைவியை இழந்து போயிருப்பான். எனினும் தன் பழைய வாழ்வின் ஆசீர்வாதங்களின் மீதும் பழைய விக்கிரகங்கள் மீதும் பற்று கொண்டிருந்த ராகேல் பரிதாபமாக புதிய வாழ்வின் எந்த ஆசீர்வாதங்களையும் அனுபவிக்க இயலாதவளாக வழியிலேயே மரித்துப்போனாள் (ஆதி.35:19). அதிபதியான தன் மகனோடு எகிப்தில் வாழும் பாக்கியத்தையும் அடையாமற்போனாள்.

நம் குடும்பங்களிலும், சபைகளிலும் இன்றும் அநேகர் ஒருவருக்கொருவர் தெரியாமல் அனேக தீயசெயல்களை செய்கிறார்கள். பல பாவவிஷயங்களை அந்தரங்கமாக மறைத்து வைத்துக்கொண்டே வேஷமாக ஒரு நல்ல பரிசுத்த வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பாவத்தின் சுவடுகள் நம்மேல் இராதபடி சகல பாவ அசுத்தங்களையும் விட்டு நாம் முழுமையாக விடுபட வேண்டும். விடுபடாத ஒருவரை சாத்தான் மீண்டும் தன் ஆதிக்கத்துக்குள்ளும் அடிமைத்தனத்துக்குள்ளும், இழுத்துச் செல்ல தொடர்ச்சியாக முயன்று கொண்டே இருப்பான்.

மட்டுமல்ல மறைவான பாவங்கள் ஒருநாள் வெளியரங்கமாகி நம்மை வேதனைப்படுத்திவிடும். ஆகவே ஜாக்கிரதையோடு பாவத்தோடுள்ள உறவை தைரியமாகத் துண்டித்துக்கொள்வது மிகமிக அவசியம். பாவமாம் எஜமானை தூக்கி வீசி எறிந்துவிட்டால் ஆராதனையின் அபிஷேகம் உங்களுக்குள் பெருக்கெடுத்து புறப்படும். உங்களைப் பின்தொடருகிற சத்துருவின் ஆயுதங்கள் ஒன்றும் உங்களை மேற்கொள்ளாது. பழைய வாழ்க்கையின் தேவனுக்கு பிரியமற்ற காரியங்களோடு எந்த உடன்பாடும் வைத்துக்கொள்ளாமல் அவற்றை மனதார வெறுத்து ஒதுக்கிவிட்டால்தான் தேவனை ஆராதிக்கிற நமக்குள் தேவனுடைய ஆசீர்வாதங்கள் தொடரும்.

யாக்கோபு கற்றுத்தரும் ஐந்து காரியங்கள்

1. லாபானை பிரிந்தான்

லாபானை பிரிந்த யாக்கோபு பலிசெலுத்தினான். ஆராதனை செய்யும் முன் பாவத்தைவிட்டு நீங்க வேண்டும். மனந்திரும்புதலுடன் தேவனை ஆராதிக்க வேண்டும்.

2. மலைமீது ஏறினான்

யாக்கோபு மலையின்மீது ஏறினான். உலகம் மாமிசம் பிசாசை காலின் கீழே மிதித்துப்போட்டுவிட்டு கண்களை உன்னதருக்கு நேராக ஏறெடுத்து பரிசுத்த சிந்தையை அணிந்து கொள்ளுகிறவர்களே கிறிஸ்துவாகிய மலைமீது ஏறுகிறவர்கள். இந்த மலையாகிய கிறிஸ்துவுக்குள் மனந்திரும்பினவர்கள் வாழ வேண்டும். பின் ஆராதனை செய்ய வேண்டும்.

3. போஜனம் பண்ணினான்

பலியிட்ட யாக்கோபு போஜனம் பண்ணினான். இது திருவிருந்து ஆராதனையைக் காட்டுகிறது.

4. சகோதரரை அழைத்தான்

யாக்கோபு போஜனம் பண்ண சகோதரரை அழைத்தான். விசுவாசிகளுடனுள்ள ஐக்கியத்தை இது காட்டுகிறது. காண்கிற சகோதரர்களை நேசிக்க முடியாதவர்களால் காணாத தேவனை ஆராதிக்க முடியாது.

5. மலையிலே தங்கினான்

ஆராதனை செய்த யாக்கோபு மலையிலே தங்கினான். இது ஆராதனை செய்கிறவர்களாகிய ஒவ்வொருவரும் கிறிஸ்துவோடு வாழவேண்டும் என்பதை உணர்த்துகிறது. மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டவர்களாக தேவனுடைய சபையில் தேவனுக்கு ஆராதனை செய்துவிட்டு ஆராதனை செய்தபின் உலகத்துக்குள் போய்விடுவதும், உலக மக்களைப் போல வித்தியாசமின்றி வாழ்வதும் தவறானது. இவ்விதம்

கிறிஸ்துவாகிய பர்வதத்தில் ஏறியும், இறங்கியும் என வாழ்வது எந்த பலனும் தராமல் போய்விடும். நிலைத்து உறுதியாய் கன்மலையாகிய கிறிஸ்துவின் மீது நிற்க வேண்டும்.

என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்: கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்கமாட்டீர்கள். யோவான் 15:4

பாதுகாத்த தேவனுக்கு சீகேமில் ஆராதனை

யாக்கோபு கானான் தேசத்தில் சுகமாய் வந்து சேருவதற்கும், தன்னுடைய யாத்திரையில் லாபானின் எதிர்ப்பு மற்றும் ஏசாவைக் குறித்த பயம் எல்லாவற்றின் மத்தியிலும் அவர்களுக்கு ஒருசேதமும் வராதபடி குடும்பமாக காக்கப்பட்டு வரவேண்டிய இடத்திற்கு வந்து சேருவதற்கும் உதவி செய்த கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான் (ஆதி.33:18-20). கண்ணீரோடும், மிகுந்த பாரத்தோடும், வேதனைகளோடு வாழ்கின்ற அநேகருக்கு மத்தியில் கிருபையாய் நம் கண்களைக் கண்ணீருக்கும், கால்களை இடறுதலுக்கும் விலக்கி நம்மை பாதுகாத்து வருகிற கர்த்தரை உள்ளம்பொங்க ஆராதிக்காது வாழ்கின்றவர்கள் எத்தனையோபேர் உண்டு. யாக்கோபு தன்னை பாதுகாப்பாக நடத்திவந்த கர்த்தரை ஆராதிக்க மறக்கவில்லை. நம்மை சகலவிதமான சத்துருவின் ஆயுதங்களுக்கும் விலக்கி காப்பாற்றுகிறவர் நம்தேவனே. நம் சுயபெலனோ, ஞானமோ, செல்வமோ நம்மைக் காப்பாற்ற போதுமானவை அல்ல. நம்மைப் பாதுகாக்கும் பொறுப்பை தேவனிடம் ஒப்படைக்கத் தவறுவது நம்மை பேரிழப்பிலும், பெரிய ஆபத்துகளிலும் மாட்டிக்கொள்ளச் செய்யும். நம்மை மறவாதவராகிய தேவனிடம் பாதுகாப்பைக் கேட்டுப் பெற்றுக்கொள்வதும், பாதுகாப்பைப் பெற்றுக்கொள்கிற நாம் மறவாமல் அவருக்கு ஆராதனை செய்வதும் தேவனுக்குப் பிரியமாயிருக்கும்.

ஆசீர்வதித்த தேவனுக்கு பெத்தேலில் ஆராதனை

ஏசாவுக்கு பயந்து ஆரானுக்கு ஓடிப்போகிற வழியிலே சூரியன் அஸ்தமித்தபோது கல் ஒன்றை எடுத்து தலையணையாக வைத்துத் தூங்கிக் கொண்டிருந்த இரவு நேரத்தில் கர்த்தர் சொப்பனத்தில் அவனிடம் பேசினார். அப்போது அவன் கர்த்தருக்கு ஒரு பொருத்தனை செய்தான். தேவன் தன்னோடேயிருந்து, தன்னைக் காப்பாற்றி, தேவைகளை சந்தித்து, சமாதானத்தோடே திரும்பிவரச் செய்யும்படியாக அப்பொருத்தனையைச் செய்தான்.

ஆதி.28:20-22

யாக்கோபு மிகவும் விருத்தியடைந்து, திரளான ஐசுவரியமுள்ளவனானான் (ஆதி.30:43). கர்த்தர் இவ்விதமாகத் தன்னோடிருந்து, தன்னைக் கைவிடாமலும் சத்துருவின் கையில் ஒப்புக்கொடாமலுமிருந்து தன்னை ஐசுவரியவானாய் மாற்றினபடியால் கர்த்தருக்கு ஆராதனை செய்ய பெத்தேலில் ஒரு பலிபீடத்தைக் கூட்டினான்.

யாக்கோபும் அவனோடே கூட இருந்த எல்லா ஜனங்களும், கானான் தேசத்திலுள்ள பெத்தேல் என்னும் லூசுக்கு வந்தார்கள். அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, தன் சகோதரனுடைய முகத்துக்கு தப்பி ஓடினபோது, அங்கே தனக்கு தேவன் தரிசனமானபடியால், அந்த ஸ்தலத்துக்கு ஏல்பெத்தேல் என்று பேரிட்டான்.

ஆதி.35:6,7

கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட அநேகர், தன்னை ஆசீர்வதித்தவர் கர்த்தர் என்பதை மறந்து கர்த்தருக்கு ஆராதனை செய்ய மறந்து வாழ்கின்றனர். உசியாவைக் கர்த்தர் உயர்த்தி அவன் கீர்த்தியை வெகுதூரம் பரவும்படி செய்தார் (II நாளா.26:15). அவன் பலப்பட்டபோது, அவனுடைய மனம் மேட்டிமையாகியது. தன்னை உயர்த்தின கர்த்தரை மறந்தான். ஆனால் நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரை துதியுங்கள் (சங்.136:23) என்று சொன்ன தாவீதைப்போலவே யாக்கோபின் இருதயம் எப்போதும்

கர்த்தருக்கு ஆராதனை செய்ய நாடுகிற இருதயமாயிருந்தது. தனிமை, எதிர்ப்பு, ஐசுவரியம் போன்றவை எதுவாயிருந்தாலும் யாக்கோபின் இருதயம் கர்த்தரை இன்னும் இன்னும் கிட்டிச் சேர்ந்து கொண்டேயிருந்ததை அவனுடைய ஆராதனை நிறைந்த வாழ்க்கை பிரதிபலிக்கிறது.

தனிமையில் துவளாது, ஏமாற்றத்தில் பெருமூச்செறியாது, தரித்திரத்தில் முறுமுறுக்காது, ஐசுவரியத்தில் மயங்காது, நிந்தனையில் சோராது, புகழ்ச்சியின் உச்சத்தில் லயித்துவிடாது எச்சூழ்நிலையிலும் தேவனுடைய வழிநடத்துதலையும் அவருடைய மகத்துவத்தையும் எண்ணி எண்ணி ஆராதிக்கத்துடிக்கும் அனைவரையும் நிச்சயமாகக் கர்த்தர் கடைசிமட்டும் உடனிருந்து நடத்துவார். தனிமையில் தேவனைத் தேடினவனாகிய யாக்கோபு தான் சேர்த்துக்கொள்ளப்பட்டபோதும் தேவனைத் தேட மறக்கவில்லை. இல்லாமையில் தேவனோடிருந்தவன் தன் ஐசுவரியத்தின் திரட்சியிலும் தேவனோடிருக்கத் தவறவில்லை. வாழ்விற்கு வழிதேடி ஓடுகையில் தேவனோடு இரவைக் கழித்தவன் வாழ்வடைந்தவனாய் திரும்பிவரும்போதும் தேவனோடு தங்கியிருக்கத் தவறவில்லை. அஞ்சி ஓடினபோது தேவனை விடாப்பிடியாய் பிடித்துக்கொண்டவன் தன் பயத்திற்கு முடிவுண்டாகி பயம் நீங்கின போதும் தன் தேவனைப்பற்றிப்பிடிக்கும் தன் பிடியை தளர்த்தவில்லை. எல்லா காலங்களிலும் தன் தேவன் தனக்கு வேண்டும் என்று அறிந்திருந்த அவன் தேவனை ஒருபோதும் விடாமல் பற்றிக்கொண்டே வந்தான். இத்தகைய உறுதியான பற்றிக்கொள்ளுதலே யாக்கோபை தேவனோடும், மனிதரோடும் போராடி மேற்கொள்ளுகிறவனாய் மாற்றினது. பொழுது விடியும் வரை போராடுகிற அளவுக்கு அவனுக்கு பெலனையும், உறுதியையும், திட நம்பிக்கையையும் கொடுத்தது.

நம்முடைய சொந்த பலத்தால் ஒரு போதும் எவற்றையும் மேற்கொள்ள முடியாது. பரிசுத்தமாய் நாம் வாழும்படி பாவத்தை மேற்கொள்ளவும் நம் சொந்தபலத்தால் முடியாது. பாவங்களிலிருந்து நம்மைக் காப்பாற்றி இரட்சித்த நம் இயேசுவை நம் இரட்சகராக நாம் பற்றிக்கொண்டால் மட்டுமே அவருடைய பெலனால் நாம் பரிசுத்தமாக வாழ முடியும். இரட்சகராகிய இயேசு நம்மோடு இருந்தால் தவறுகளைச் செய்யாமலும், தீயவழியில்

செல்லாமலும் நம்மால் நற்குணங்கள் நிறைந்ததொரு வாழ்க்கையைச் செய்ய முடியும். பாவங்களினால் எல்லாரையும் போல நாமும் சோதிக்கப்பட்டாலும் இயேசுவைச் சார்ந்த விசுவாசத்தினால் அவைகளை எதிர்த்துப் போராடி வெற்றிபெற முடியும். எச்சூழ்நிலையிலும் கர்த்தரைப் பிரியப்படுத்தி வாழ்வதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்த யாக்கோபைப்போல நாமும் இருந்தால் நம் சுயத்திலிருந்து உருவாகும் பாவ இச்சைகளுக்கு இசைந்து போகாமல் வெற்றியுள்ள வாழ்வு நாம் வாழமுடியும். நாம் அவரைவிடாமல் பிடித்துக்கொண்டால் என்னவிதமான பிரச்சினையோ, பரீட்சைகளோ வந்தாலும் அவைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளச்செய்ய அவர் நம்மை விட்டுவிடாமல் இறுகப்பிடித்துக்கொள்வார். தினமும் ஜெபம், வேததியானம், பரிசுத்த சிந்தை ஆகியவற்றின் மூல்மாக தேவ உறவிலும், தேவ ஐக்கியத்திலும் அதிகமாக பெலப்படும்போது எந்த சூழ்நிலைகளும் நம்மை மேற்கொள்ள முடியாது. கடைசி வரை உலகம், மாமிசம், பிசாசை ஜெயித்து வெற்றியாக வாழ தேவனை உறுதியாய் பற்றிக்கொண்டு தேவனை ஆராதனை செய்கிற மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையை தவறாமல் காத்துக்கொள்ளுங்கள்.

7

இஸ்ரவேல் மக்களின் ஆராதனை

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தைத் தமக்குப் பரிசுத்த ஜனமாகவும், தமக்கு சொந்தமான ஜனமாகவும் உரிமை பாராட்டும்படி தமக்கென்று தெரிந்துகொண்டார் (உபா.7:6). ஆனால் அவருடைய ஜனமோ எகிப்திலே அடிமைத்தனத்தின் நுகம் பூட்டப்பட்டவர்களாய் தாங்கள் எஜமானாகிய கர்த்தரைப் பற்றிக்கொள்ள இயலாமல் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

அடிமைத்தன விடுதலையும் ஆராதனையும்

இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது. மத்.6:24

இவ்வார்த்தையைச் சொன்ன கர்த்தர் தன் ஜனத்தை பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்தும், எகிப்தின் வாழ்விலிருந்தும் விடுவித்துவிடும்படி எண்ணங்கொண்டு மோசேயைத் தெரிந்து கொண்டு பார்வோனிடம் அனுப்பினார். எனக்கு ஆராதனை செய்ய என் ஜனங்களைப் போகவிடு (யாத்.9:1) என்று பார்வோனிடம் கூறச் சொன்னார். ஜனங்கள் தனக்கு ஆராதனை செய்ய அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டாக வேண்டும் என்பதால் தான் இவ்விதம் கர்த்தர் கூறினார். ஒருவன் பாவத்திற்கும், பிசாசிற்கும், மாமிசத்திற்கும், உலக இச்சைகளுக்கும் அடிமைப்பட்டவனாய் இருக்கும்போது கர்த்தரை ஆராதிக்க முடியாது.

ஆவி ஆத்தும சரீரத்தில் விடுதலையுடையவர்களால்தான் தேவனை ஆராதிக்க முடியும். சிந்தை, பேச்சு, செயலில் சத்துருவின் அடிமைத்தனத்தையும், நெருக்கத்தையும் உடையவர்களாயிருந்து கொண்டே தேவனை ஆராதிப்பது இயலாத காரியம். புகழ்ச்சியின் உச்சகட்டம், சோதனையின் வேதனை, நெருக்கத்தின் தாக்கம் அனைத்தையும் ஜெயித்தவர்களாய் நாம் தேவனை ஆராதிக்க வேண்டியது அவசியம். நுகத்தடிகளை ஆவியின் பெலனால் முறித்துப்போட்டுவிட்டால் மட்டுமே என்னுடைய நுகம் இலகுவாயிருக்கிறது என்று நம்மை ஆறுதல்படுத்துகிற நமது அன்பு இரட்சகரை நம் உள்ளம் திறந்து ஆராதிக்க முடியும்.

அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றபின் தன் ஜனம் பரிசுத்த ஜனமாய் தன்னை ஆராதனை செய்ய வேண்டிய இடத்தைக் குறித்தும் அவர் நிச்சயம் செய்திருந்தார்.

நான் உன்னோடே இருப்பேன்; நீ ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்துவந்தபின் நீங்கள் இந்த மலையில் தேவனுக்கு ஆராதனை செய்வீர்கள்; நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம் என்றார். *யாத். 3:12*

தன் ஜனம் அசைவில்லாததும், மாசணுகாததும், உறுதியானதும், உயர்ந்ததும், இடறலில்லாததுமான மலையாகிய தம்மீது நின்றுகொண்டு தம்மை ஆராதிப்பது தேவனுடைய ஏக்கம். தூரமாய் நின்ற நம்மையும் தம்முடைய இரத்தத்தால் தன்னோடிணைத்து அசுத்தத்தைவிட்டு பறித்துக்கொண்டது உண்மைதானே. உலகத்தின் அசுத்தத்தைவிட்டு பிரித்தெடுத்துக்கொள்ளப்பட்ட தமது பரிசுத்த ஜனமாகிய நாம் அவர் காட்டும் இடத்தில் ஆராதிப்பதும், அப்படியே மீண்டும் அசுத்தத்தைத் தொடாதிருப்பதும் அவசியம்.

ஆனபடியால் நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். *II கொரி. 6:17*

எகிப்தின் அடிமைத்தன நுகத்தை முறித்துப்போட்டுவிட்டு கிறிஸ்துவின் நுகத்தை சுமந்து கொண்டவர்களாய் கிறிஸ்துவின் ரத்தத்தை சார்ந்துகொண்டு வாழும்போது அவருடைய பரிசுத்த

ஜனங்களாகிய நமக்கு அவர் விடுதலைபெற்று கானானுக்கு நேராகச் சென்றுகொண்டிருந்த தன் சொந்த ஜனத்திற்கு கொடுத்த பின்வரும் வாக்குத்தத்தங்களை அருளுவார்.

1. வியாதியை உன்னிலிருந்து விலக்குவார் (யாத்.23:25)
2. உங்களை பெருகப் பண்ணுவார் (உபா.1:10)
3. கர்த்தர் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார் (உபா.28:12)
4. அவர் உன்னைவிட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை (உபா.31:8)
5. பூமியின் மேலுள்ள எல்லா ஜனங்களிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் (யாத்.33:16)
6. நீங்கள் கர்த்தருடைய சொந்த ஜனம் (உபா.7:6)
7. கர்த்தர் ஜாதிகளை உனக்கு முன்பாக துரத்துவார் (உபா.11:23)
8. உங்கள் முன் ஒருவரும் எதிர்த்து நிற்பதில்லை (உபா.11:25)
9. உங்கள் உள்ளங்கால் மிதிக்கும் இடமெல்லாம் உங்களுடையதாயிருக்கும் (உபா.11:24)
10. தேவனாகிய கர்த்தரின் கண்கள் உன்மேல் வைக்கப்பட்டிருக்கும் (உபா.11:12)

பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரவேலரை தேவன் செங்கடல் வழியாகக் கொண்டு வந்தார். இது ஞானஸ்நானத்துக்கு ஒப்பனையானது என்று வேதம் கூறுகிறது.

எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். I கொரி.10:2

பாவத்திலிருந்து விடுதலை பெறவேண்டியது எவ்வளவு அவசியமோ அவ்வளவுக்கு விடுதலை பெற்றவனாகிய அவன் பாவத்துக்கு மரித்து நீதிக்கு பிழைப்பதற்கு ஒப்பனையான ஞானஸ்நானத்துக்கு தன்னை உட்படுத்த வேண்டியதும் அவசியம். அப்பொழுதுதான் செங்கடலைக் கடந்த ஜனங்கள் கர்த்தரைத் துதித்து மகிழ்ந்ததைப்போல நம்முடைய நாவுகளும் துதியினால் நிறைந்து கர்த்தரை ஆராதிக்க ஆரம்பிக்கும். நம்மை துரத்தி வந்து கொண்டிருக்கிற நம்மைவிட்டு அகன்றுபோக மனமற்ற பழைய எஜமானாகிய சாத்தானும் அவன் சேனையும் அழிக்கப்பட்டுப்

போவதினால் உண்டாகும் கெம்பீர சத்தம் நிறைந்த பாடல். சத்துருவை அழித்துப்போட்ட நம் தேவனைச் சென்று அடையும். யாத்திராகமம் 15:1-18-ல் அடங்கியிருக்கிற பாடல்வரிகள் நம் நாவுகளுக்குச் சொந்தமாகும். இப்பாடலே இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபின் முதலாவது பாடின பாடல்.

ஆராதனையில் தடுமாற்றம்

கர்த்தர் சீனாய் மலையின் கொடுமுடியில் இடிமுழக்கங்களும், மின்னல்களும், கார்மேகமும், பலத்த எக்காளசத்தமும் உண்டாக சூளையின் புகைபோன்ற புகைக்காடாய் அக்கினியில் பிரத்தியட்சமாக இறங்கி மோசேயிடம் பேசிச் சொல்லிய கட்டளைகளை மனதார இஸ்ரவேல் ஜனங்கள் ஏற்றுக்கொண்டனர் (யாத்திராகமம் 19). பின்பு தேவன் தனது விரலினால் எழுதப்பட்ட கட்டளைகளைத் தமது ஜனங்களுக்குக் கொடுக்கும்படி மோசேயை அழைத்துக்கொண்ட போதோ, அவர்கள் காலதாமதமான மோசேயின் திரும்பி வருதலுக்குக் காத்திருக்க மனமற்றவர்களாகி ஆரோனிடம் முரட்டாட்டம் செய்தனர். பிரத்தியட்சமாய் தங்களுக்கு முன் வெளிப்பட்ட தேவனையும், தாங்கள் அவருக்கு முன்பாக நடுங்கினதையும், தேவனோடே பேசின மோசேயையும் சொற்பகாலத்தில் மறந்தவர்களாக தேவனுடைய மகிமையை மறுதலித்து கையினால் உண்டாக்கப்படும் தெய்வங்களை சார்ந்து கொண்டார்கள். மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம். ஆதலால் எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும் என்று ஆரோனிடம் கூறினார்கள். தங்கள் பொன்னணிகளையெல்லாம் கழற்றி தேவன் தங்களுக்குக் கொடுத்த முதலாம் கட்டளையை மீறும்படி கிரயமாகக் கொடுத்தார்கள்.

அவர்கள் கையிலிருந்து அவன் அந்த பொன்னை வாங்கி, சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். அப்பொழுது அவர்கள் : இஸ்ரவேலரே, உங்களை எகிப்திலிருந்து அழைத்துக் கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள். ஆரோன் அதைப்பார்த்து, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, நாளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறினான்.

யாத்.32:4,5

பார்வோனின் கையிலிருந்து விடுதலை பெற்று செங்கடலைக் கடந்து துதிபாடல்கள் பாடிமகிழ்ந்த ஜனங்கள் கர்த்தரை மறந்து கன்றுக்குட்டியை தெய்வமாக்கி ஆராதிக்கத் துணிந்தார்கள். தேவன் கொடுத்த மகிமையை உரிந்தகற்றி நிர்வாணமாய் மாற்றினார்கள் (யாத்.32:25). பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டிய பண்டிகையை புசித்து, குடித்து, உட்கார்ந்து, விளையாடுதலாக்கிப் போட்டார்கள். முன்பு நடுங்கி நின்று தேவனை எதிர்கொண்ட அவர்கள் இப்போதோ தேவகோபம் தங்கள்மேல் மூளும்படி தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள்.

எகிப்திலிருந்து இஸ்ரவேலரை கர்த்தர் அழைத்து வந்தது இதற்காக அல்ல. தனக்கு ஆராதனை செய்யும்படியாகவே. ஆனால் அவர்களோ தங்களுக்கு முன்னின்று தேவனை அகற்றிவிட்டு கன்றுக்குட்டியை நிறுத்தி அதற்கு பலியிட்டு அதனை பணிந்துகொண்டார்கள். பண்டிகை கர்த்தருக்கு. ஆனால் தங்களுக்குமுன் அவர்கள் நிறுத்திக்கொண்டதோ கன்றுக்குட்டியை.

மோசே கர்த்தர் எழுதிக்கொடுத்த உடன்படிக்கை பலகையுடன் மலையிலிருந்து இறங்கிவந்தபோது கண்ட காட்சியால் கோபமடைந்து மலையின் அடியில் அப்பலகையை எறிந்து உடைத்துப்போட்டான்.

அவர்கள் உண்டுபண்ணின கன்றுக்குட்டியை எடுத்து, அக்கினியில் சுட்டெரித்து, அதைப் பொடியாக அரைத்து, தண்ணீரின்மேல் தூவி குடிக்கும்படி செய்தான். யாத்.32:20

மோசேயோடு லேவியின்புத்திரர் சேர்ந்துகொண்டு ஏறக்குறைய 3000 பேரைக் கொன்றுபோட்டார்கள். இந்த மகாபெரிய பொல்லாங்கைச் செய்த அவர்களை விழப்பண்ணினார்கள். இதுதான் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபின் செய்த முதல் ஆராதனையின் விளைவு. தனக்கு ஆராதனை செய்யும்படி, தேவன் தன் சொந்த ஜனமாய் தெரிந்துகொண்ட அவர்களை எத்தனையோ தடைகளைத் தாண்டி, அற்புத அடையாளங்களைச் செய்து அழைத்துக் கொண்டு வந்தார். ஆனால் அவர் உரிமைபாராட்டின இந்த ஜனங்களோ தங்கள் முதல் ஆராதனையிலேயே கர்த்தர் செய்யக்கூடாது என்று எதைச்

சொன்னாரோ அதையே செய்து கர்த்தருக்கு கோபமூட்டினார்கள். காலதாமதமாய் 40 நாட்கள் ஆகியும் மோசே வராததினால் ஏற்பட்ட இனி வரமாட்டான் என்ற உறுதியான அவிசுவாசத்தின் விளைவே இத்தகைய ஆபத்தும் அலங்கோலமுமான தேவகோபம் மிக்க ஆராதனையாயிருந்தது. தேவனுக்கு காத்திருக்கவும், தேவனுடைய முந்தைய நடத்துதலை நினைத்துப்பார்க்கவும் மனமற்றுப்போனால் நமது ஆராதனையும் தேவனை மகிமைப்படுத்துவதாயிராமல் இக்கன்றுகுட்டி போன்ற பல விக்கிரகங்களை மேன்மைபடுத்துவதாய் முடிந்துவிடும். ஜாக்கிரதையாய் தேவனுக்கு ஆராதனை செய்ய மறந்துவிட வேண்டாம்.

இன்றைய கன்றுக்குட்டிகள்

கிறிஸ்தவ சபைகள் தேவனை பரிசுத்தமாய் எதிர்நோக்கி காத்திருக்கிறது ஒருபுறத்தில் உண்மையாயினும், இன்னொருபுறத்தில் கிறிஸ்துவின் வருகை தாமதிப்பதால் புதுபுது காரியங்களை உபதேசங்களில் இணைந்துவிட அனுமதித்துக் கொண்டே இருப்பதும் உண்மையே. தேவ வசனத்திற்கு ஒவ்வாத பாடல், பிரசங்கம், ஆராதனை எதுவாயினும் இன்றைய கன்றுக்குட்டிகளே. ஆரோனைத் தொந்தரவு செய்து தெய்வங்களை உண்டாக்கச் சொன்ன ஜனங்களின் வற்புறுத்தல் அவனுடைய சிந்தையில் விளைவித்த கன்றுக்குட்டிபோலவே இன்றும் இந்த நவநாகரிகமும் அவசரமும் மிக்க உலகின் நெருக்கடிகள் ஆவிக்குரிய தளத்திலும் சாத்தானாய் புகுந்து பலவித கன்றுகுட்டிகளாய் ரூபம் பெற்று கர்த்தருடைய ஆராதனையின் மகிமையையும், தெய்வீக மேன்மைகளையும் உரிந்து போட்டுக் கொண்டிருக்கின்றன. ஆராதனை நடத்துகிற தலைவர்களையும் ஆராதனை செய்கிறவர்களையும் ஒன்றுபோல மதிமயக்கிப் போட்டிருக்கின்றன.

நடனம்

இன்றைய ஆராதனைகள் எல்லாம் நடனத்தை முக்கிய பகுதியாகக் கொண்டுள்ளன. ஆனால் இதற்கான எந்த கட்டாயமும் சுவிசேஷங்களிலும், நிரூபங்களிலும் இல்லை. இயேசுவோ அப்போஸ்தலர்களோ இதைக்குறித்து சொல்லவுமில்லை. இன்றைய ஆராதனைகளில் இசையும், நடனமும் ஒன்றிணைந்து பெரும்பங்கைப் பிடித்துள்ளன. ஆனால் வெறுமனே இசையில்

லயித்து ஆடிக்கொண்டிருக்கும் நடனம் ஆராதனையல்ல. அது வெறும் நடனமே. நமது தேவன் இசையில் பிரியப்படுகிறார் என்பது உண்மையாயினும் தேவன் பிரியப்படுகிற இசை எது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம். தெய்வீகமான இசை மட்டுமே தேவனை கவர்ந்துகொள்ளும் இசை. மற்ற இசைகளோ தேவனுக்கு அருவருப்பானவை. தன்னையும், தாலந்தையும் கர்த்தருக்கு அர்ப்பணித்து, தேவனுடைய மகிமைக்காக மட்டுமே உபயோகிக்கப்படும் தாலந்தினால் விளையும் இசையே தெய்வீக இசையாக மாறமுடியும். தெய்வீக இசை தனது புகழுக்காகவும், அழிவிற்கேதுவானவைகளுக்காகவும் வாசிக்கப்படும் இசையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.

பரிசுத்தம், ஆராதனைக்கேற்ற ஆயத்தம், அர்ப்பணிப்பு, தாழ்மை மற்றும் தேவனுக்கு பயப்படுகிற பயத்துடன் நேர்த்தியாக வாசிக்கப்படும் தெய்வீக இசையோடிணைந்த பாடல்களுடன் ஒழுங்குடனும், கட்டுப்பாட்டுடனும் கர்த்தரை ஆடிப்பாடி துதிக்கும் ஆராதனையில் தேவன் பிரியமாயிருக்கத் தான் செய்வார். தாவீது இவ்விதமாய் தேவனுக்கேற்ற பரிசுத்தம் மற்றும் ஆயத்தத்துடன் தாழ்மையையணிந்து கொண்டு உடன்படிக்கைபெட்டிக்குமுன் பலிகளுடன் ஆடின ஆட்டம் வெற்றியில் தான் முடிந்தது. ஆனால் அவன் பரிசுத்தம், ஆயத்தம், தாழ்மை இவற்றில் கவனம் செலுத்தாமல் 'லேவியரின் தோள்களில் தண்டுகளால் தேவனுடைய பெட்டி சுமக்கப்பட வேண்டும்' என்ற கர்த்தருடைய வார்த்தையை மீறி, தேவனுடைய பெட்டிக்கு முன் பயமும் நடுக்கமுமின்றி ஆடின முதல் ஆட்டமோ இடறலிலும் மரண ஓலத்திலும் நின்றுபோனது. கிருபையினைப் பற்றிக்கொண்டு தேவனுக்குமுன் நிற்பதில் சபை கவனமாயிராவிட்டால் தேவனுக்கு அருவருப்பானவிதமான இசைக்கும், நடனத்துக்கும்கூட சபை ஆளாகிவிட நேரிடும். பாப் போன்ற இசைகளுக்கு செவிசாய்த்து வெறும் ஆட்டத்துக்குள் மனதை திருப்பி பொழுதுபோக்காய் ஆடி மனதை இலகுவாக்கிக் கொண்டிருக்கிறது போன்ற நடனமாகிய கன்றுகுட்டிகள் சபைகளில் இடம்பிடித்துவிடும். இவை கிறிஸ்துவின் வருகை தாமதமாகிக் கொண்டிருக்கிறதால் உண்டாகியுள்ள அஜாக்கிரதை ஏற்படுத்துகிற இடறுதல்களே.

மாற்கு சுவிசேஷத்தில் ஒரு நடனம் உண்டு. அது ஏரோதியாளின் குமாரத்தியின் நடனம். அந்த நடனத்தின் முடிவு ஒரு பரிசுத்தவானின் தலையை எடுத்துப்போட்டுவிட்டது. இன்றும் அனேக ஆவிக்குரிய ஜீவியங்களை நடனம் தகர்த்துக் கொண்டிருக்கிறது. நாம் இயேசுவின் பாதையை பின்தொடருகிறவர்கள். இயேசு சென்ற பாதை சிலுவைக்குச் சென்ற பாதை. அவரைப் பின்தொடரவே இயேசு நம்மை அழைத்திருக்கிறார்.

ஒருவன் என்னை பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் (மத்.16:24) என்று இயேசு சொல்லியிருக்கிறார்.

சிலுவை சுமக்கிற ஒருவன் தன் சிலுவையை சுமந்து கொண்டு நடனமாடுவது அவ்வளவு எளிதான காரியமல்ல. தேவனுடைய பிள்ளையின் உள்ளத்தில் கர்த்தர் தருவதனாலுண்டாகும் களிகூருதல் சிலுவையின் பாதையிலும் கிடைக்கும். உள்ளத்தின் பூரிப்பால் ஆராதனை எழ வேண்டுமேயன்றி, நடனத்தின் களிப்பால் உண்டாகும் மகிழ்ச்சியல்ல ஆராதனை. வேதவசனத்துக்கு ஒவ்வாத பழைய வஸ்திரமும், பழந்துருத்தியும் போன்ற நியாயபிரமாண காலத்திய நடனங்கள் மற்றும் ஆசாரங்களை புதிய வஸ்திரமாகிய சுவிசேஷத்தோடு சேர்த்து ஆசரிக்க வேண்டிய தேவையில்லை. கர்த்தரை துதிப்பதும், ஆராதிப்பதும் பேய்க்கூத்தாக பிறருக்குமுன் இருக்கக்கூடாது. ஆரோன் உண்டாக்கின கன்றுக்குட்டியின்முன் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்குத்தான் ஆராதனை செய்தார்கள். ஆனால் அவர்களுடைய ஆராதனை களியாட்டுபோல் இருந்தது. மற்றவர்களுடைய பார்வையில் அவமானம் நிறைந்ததாகக் காணப்பட்டது (யாத்.32:6,25). இருதயத்தில் தேவன்மீது அன்பும், தேவபயமும் நிறைந்து பயத்தோடும் நடுக்கத்தோடும், துணிகரம் இன்றி பரிசுத்த அலங்காரத்துடன் களிகூர்ந்து தேவனை ஆராதிக்க வேண்டும்.

கர்த்தர் நமக்கு சில உத்தரவாதங்களாகிய சிலுவைகளைக் கொடுத்திருக்கிறார். சிலுவையை எடுத்துக்கொண்டு கர்த்தரை பின்பற்றாதவன் கர்த்தருக்குப் பாத்திரன் அல்ல. சிலுவையை

உதறித்தள்ளிவிட்டு ஆடுவதும் பாடுவதுமாயிராமல் நம்முடைய ஆராதனை நமது பாரங்களை அவருடைய பாதத்தில் இறக்கி வைத்துவிட்டு, சிலுவையை சகித்துக்கொண்டு கர்த்தரை மகிழ்ச்சியோடு ஆராதிக்கிற ஒன்றாயிருக்க வேண்டும்.

ஆகையால் நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்துக்குப் போகக்கடவோம். எபி.13:13

சுமையாகிய கிறிஸ்துவின் நிந்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளும்போது பரலோகத்திற்கேற்ற ஒரு பரிசுத்த ஆராதனையை நாம் செய்ய இயலும். சிலுவையைக் குறித்த ஒரு கதை உண்டு. ஒருமுறை தேவதூதன் ஒருவன் வெளிப்பட்டு, இயேசுவின் சிலுவைக்குப் பங்காளிகள் ஆக விரும்புகிறவர்கள் சிலரைப் பிரித்து நிறுத்தினானாம். அவர்களை அநேக சிலுவைகள் வைத்திருந்த ஒரு அறைக்குள் அழைத்துச் சென்று, ஒவ்வொருவரும் ஒவ்வொரு சிலுவையை எடுத்துக்கொள்ளச் சொன்னானாம். பெரியதும் சிறியதுமான அநேக சிலுவைகள் அங்கு இருந்தன. தான் எடுக்கிற சிலுவையுடன் கொஞ்சதூரம் பிரயாணம் செய்து கடைசியில் தூதனிடம் ஒப்படைக்க வேண்டும். நேரம் எவ்வளவு எடுத்துக்கொண்டாலும் பரவாயில்லை. கடைசிவரை சிலுவையைச் சுமந்து குறிப்பிட்ட இடத்தில் கொண்டு சேர்த்தால் போதும். ஒவ்வொருவரும் போட்டி போட்டு சிறிய சிலுவைகளைத் தேடி கண்டுபிடித்து எடுத்துக்கொண்டனர். கடைசியானவனுக்கு பெரிய சிலுவையே கிடைத்தது. மற்றவர்கள் எல்லாரும் வேகமாகச் சென்று கொண்டிருந்தனர். பெரிய சிலுவை பெற்றவனோ கடைசியாக எல்லாருக்கும் பின்னால் நடக்கக்கூட முடியாமல் வந்து கொண்டிருந்தான்.

முன்சென்றவர்கள் அவனுடைய சிலுவையைப் பார்த்து நகைத்தார்கள். அவன் ரொம்ப கஷ்டப்பட்டு நடந்துபோகும்போது, தனக்கு முன்னாக துள்ளி ஆடிப்பாடி ஓடினவர்களெல்லாம் தூரத்தில் தங்கள் சிலுவையுடன் நிற்பதைக் கண்டான். அவன் கிட்ட வந்து பார்த்தபோது யாரும் போக முடியாத அளவிற்கு பாலம் இல்லாத ஒரு பெரிய கால்வாய் இருந்தது. முன்பு துள்ளிக்குதித்து ஓடினவர்கள் செய்வதறியாமல் பார்த்துக்கொண்டு நிற்கையில் இந்த பெரிய சிலுவையுடன் வந்தவன் தன் சிலுவையை அந்த பெரிய கால்வாயின் குறுக்காக போட்டு அதை ஒரு பாலமாக்கி

அதன்வழியாக மறுகரையை அடைந்து பரிசைப் பெற்றுக் கொண்டானாம். இது ஒரு கதையாயிருந்தாலும் இதில் ஒரு உண்மையுண்டு. கர்த்தர் நம் ஒவ்வொருவருக்கும் சிலுவைகளாகிய பொறுப்புகளைத் தந்திருக்கிறார். அதை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு சுமந்து முடிப்பதில் தான் கிறிஸ்தவத்தின் வெற்றி இருக்கிறது.

சினிமாவில் காண்பது போன்று நடனத்துடனும், பாடல்களுடனும் ஒருமணிநேரத்தில் முடிவதில்லை மனித வாழ்க்கை.

நீங்கள் இயேசுவையும், அப்போஸ்தல உபதேசங்களையும் பின்பற்றுகிறவர்களாக இருக்கவேண்டும். I கொரி. 11:1

அவர்கள் செய்யாததும், சொல்லாததும், தொடராததும் வேதத்திற்குப் புறம்பானவை. அவைகளை புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் பயன்படுத்த வேண்டியதில்லை. இயேசு நமக்காகத் திறந்த புதிய பாதையில் நாம் பயணம் செய்ய வேண்டும்.

ஆகையால் சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்கு தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகாபிரதான ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். எபி.10:19-22

நன்றி

இன்று சபைகளிலும் பிரசங்க மேடைகளிலும் 'ஸ்தோத்திரம்' என்ற வார்த்தையைக் கேட்க முடியவில்லை. 'ஸ்தோத்திரம்' என்று சொல்வது உச்சரிப்பதற்கு கொஞ்சம் கஷ்டம்தான். அதனால் ஸ்தோத்திரம் என்று சொல்லவேண்டிய இடங்களில் சாத்தான் நன்றி என்ற வார்த்தையைப் புகுத்தி, தேவனுக்கு செலுத்தும் மகிமைக்கு மட்டிட்டு விடுகிறான். இதுவும் ஒரு கன்றுக்குட்டிதான்.

எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது. I தெச.5:18

மனுஷனுடைய வாழ்க்கையில் கர்த்தர் செய்கிற பெரியதும் சிறியதுமான எல்லா காரியங்களுக்கும் அவருக்குக் கொடுக்க வேண்டியது 'ஸ்தோத்திரம்'.

தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம். II கொரி.9:15

ஸ்தோத்திரம் என்று சொல்வது கர்த்தருக்கு செலுத்துகிற பலியாக காணப்படுகிறது.

ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான். சங்.50:23

கர்த்தருக்கு பலியிடுவது சாத்தானுக்கு பிடிக்கிற காரியமல்ல. இப்பலியை செலுத்தாமலிருக்கவே அவ்விடங்களிலெல்லாம் நன்றியைப் புகுத்துகிறான். நன்றியறிதலுள்ளவர்களாய் இருக்க வேண்டியது மனிதர் செய்கிற காரியங்களுக்காகவே. மனிதர்களுக்குச் சொல்லுகிற நன்றியல்ல கர்த்தருக்கு கொடுக்க வேண்டியது. கர்த்தர் மகாதெய்வம். அவர் நமக்குச் செய்த உபகாரங்களுக்கு மனிதனுக்குச் சொல்வதைப்போன்று நன்றி சொல்லுவது அவருடைய மாட்சிமையைத் தாழ்த்தி மனிதர் நிலையில் நாம் அவரை கொண்டுவருவதாகி விடுகிறது. இது சாத்தானின் ஒரு தந்திரம்.

இன்றைய நாட்களில் சபைகளிலும், பொது பிரசங்க மேடைகளிலும் ஸ்தோத்திரம் குறைந்து வருகிறது. தேவனை மனுஷனுக்குச் சமமாகக் கொண்டு வருகிறார்கள். சுவிசேஷங்களிலும், சங்கீதங்களிலும், நிருபங்களிலும் கர்த்தருக்கு நன்றி என்று சொல்வதைக் காண முடியாது. நன்றி நிறைந்த இருதயத்தோடு ஸ்தோத்திரம் என்று சொல்லாமேயல்லாமல் நன்றி என்று சொல்லி கர்த்தரை மனிதர்களின் வரிசையில் நிறுத்தக்கூடாது.

தாய்வீடு

ஆதி பரிசுத்தவான்களும், புதிய உடன்படிக்கையின் பரிசுத்தவான்களும், அவர்களோடு இணைந்து நாமும் நம் பரமபிதா வசிக்கும் நாட்டிற்குப் போக பாடுபட்டு வருகிறோம். நம் தேவனாகிய

பரமபிதா வசிக்கும் பரலோக தேசம் வேறு எந்த தெய்வங்களுக்கும் உரிமையானது அல்ல. அது பிதாவாகிய தேவனுடைய தேசம்.

இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல் தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தாங்கள் அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள். இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். எபிரெயர் 11:13,14

சொந்த தேசம் என்ற பொருளில் 'தாய்வீடு' என்ற வார்த்தையை பயன்படுத்துகிறதை ஆவிக்குரிய மனிதர்களிடையே நாம் பார்க்க முடிகிறது. ஆனால் தேவமனிதர்கள் பயன்படுத்துகிற இவ்வார்த்தையை சாத்தான் தந்திரமாக மரியாளுடைய வீடு என்றோ, அந்நிய பெண் தெய்வங்களுடைய தேசம் என்றோ வார்த்தைகளைத் திரித்து பயன்படுத்தி ஜனங்களைத் தன்பக்கம் இழுக்கக்கூடும். நம்முடைய தேவன் ஒரு தாயைப்போல நம்மைத் தேற்றுகிற தேவனாயிருந்தாலும் அவர் மாம்சம் மற்றும் இரத்தத்தால் இயேசுகிறிஸ்து மூலமாக நம்மோடு ஏற்படுத்திக்கொண்டுள்ள அந்த அற்புதமான பரிசுத்த ஆவியினாலுண்டான உறவு தகப்பனாகிய உறவே. ஆகவே வெளிப்படையாய் நாம் கூறும்போது பரலோகம் நம் சொந்த தேசம் என்பதை பரலோகம் நம் பிதாவின் வீடு என்று கூறுவதே ஏற்புடையது. இதனால் இவ்வார்த்தையை சத்துருவாகிய சாத்தான் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதைத் தவிர்க்க முடியும்.

பிரியமானவர்களே, தேவனுடைய பரிசுத்த ஜனமும் சொந்த ஜனமுமாகப் பிரித்து எடுக்கப்பட்டவர்களாகிய நாம் நமது மணவாளனாகிய இயேசு கிறிஸ்துவுக்காக பொறுமையாகக் காத்திருக்கிற கறைதிரையற்ற மணவாட்டி சபையாக நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். அவர் வரும் வேளையில் நம்மில் அவர் மகிழ்ச்சியடையும்படி பரிசுத்தம், விசுவாசம், ஆராதனை மற்றும் கிரியைகளில் இன்னும் அதிகமாக விருத்தியடைந்து பெருக பிரயாசப்பட நாம் தவறக்கூடாது. அவர் வரும்வரை அவர் சொன்னபடி வாழ நம்மை அர்ப்பணித்து அவர் விரும்புகிறபடி நாம் அவரை ஆராதித்து மகிழ வேண்டும் என்பதே அவருடைய விருப்பம்.

⑧

கர்த்தர் வாசம் பண்ண ஆசரிப்புக் கூடாரம்

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு கானான் தேசத்தில் வந்து சேருவதற்கு 40 ஆண்டுகள் ஆயிற்று. 40 வருஷங்களில் 42 கூடாரங்களில் பாளயமிறங்கினார்கள். ஜனங்கள் தங்கள் கூடாரங்களில் வசிக்கும்போது தேவன் தாம் வாசம் பண்ணுவதற்கு ஒரு தனி கூடாரம் உண்டு பண்ணுவதற்கு கர்த்தர் மோசேயிடம் கூறினார். மோசே கர்த்தரின் வார்த்தையின்படி உண்டுபண்ணின அந்த கூடாரம்தான் ஆசரிப்புக்கூடாரம் என்று சொல்லப்படுகிறது.

ஜனங்களின் நடுவில் ஆசரிப்புக்கூடாரம்

அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக. யாத்.25:8

கர்த்தருக்காக இஸ்ரவேல் ஜனங்கள் முதலாவதாக கட்டின ஆலயம் இதுவே. இதன் வேலை கர்த்தர் மோசேயிடம் சொன்னதின்படி செய்யப்பட்டது. இந்த கூடாரம் உண்டுபண்ணுவதற்குமுன் கர்த்தருடைய கூடாரம் பாளயங்களுக்கு புறம்பே இருந்தது. ஆனால் இப்பொழுது இந்த கூடாரமோ ஜனங்களின் கூடாரங்களின் நடுவில் போடப்பட்டது.

இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள்தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின் விருதாகிய தங்கள்தங்கள் கூடாரங்களைப் போட்டு ஆசரிப்புக் கூடாரத்திற்கு எதிராகச் சுற்றிலும் பாளையமிறங்கக்கடவர்கள். எண்.2:2

உங்கள் நடுவில் என் வாசஸ்தலத்தை ஸ்தாபிப்பேன்; என் ஆத்துமா உங்களை அரோசிப்பதில்லை. நான் உங்கள் நடுவிலே

உலாவி உங்கள் தேவனாயிருப்பேன். நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள். *லேவி.26:11,12*

இந்த ஆசரிப்புக்கூடாரம் இயேசு கிறிஸ்துவுக்கு நிழலாய் இருக்கிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் குறிப்பிட்ட இடத்தில் மட்டும் வந்தார். ஆனால் புதிய ஏற்பாட்டின் காலத்தில் இயேசுவின் நாமத்தில் ஜனங்கள் கூடிவருகிற எல்லா இடங்களிலும் வருகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் ஒரு இடத்தைவிட்டு வேறொரு இடத்திற்கு பயணமாகும்போது இந்த கூடாரத்தையும், அதனுடைய உபகரணங்களையும் சுமக்க வேண்டியவர்களான கோகாத்தியர், மெராரியர், கெர்சோனியர் ஆசரிப்புக் கூடாரத்தின் அருகிலேயே கூடாரம் போட்டிருந்தார்கள். கோராகின் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்தின் காவல்காரர்களாயிருந்தார்கள்.

ஆசரிப்புக்கூடாரமும் உடன்படிக்கைப் பெட்டியும்

தேவனுடைய உடன்படிக்கை பெட்டியானது தேவன் மோசேக்குக் காண்பித்த மாதிரியின்படியே செய்யப்பட்டது. சீத்திம் மரத்தினால் பண்ணப்பட்ட இப்பெட்டியின் நீளம் இரண்டரை முழம், அகலம் ஒன்றரை முழம், உயரம் ஒன்றரை முழம். அதன் உட்புறமும், வெளிப்புறமும் எங்கும் பசும்பொன்தகட்டால் மூடப்பட்டிருந்தது. அதின்மேல் சுற்றியும் பொன்னினால் திரணையை உண்டாக்கி, நான்கு பொன் வளையங்களை நான்கு மூலைகளிலும் போட்டு, ஒரு பக்கத்தில் இரண்டு வளையங்களும், மறுபக்கத்தில் இரண்டு வளையங்களும் இருக்கும்படி தைத்து, சீத்திம் மரத்தால் தண்டுகளைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடி பெட்டியின் வளையங்களில் பாய்ச்சப்பட்டிருந்தது. இத்தண்டுகள் பெட்டியிலிருந்து கழற்றப்படாமல், அதின் வளையங்களிலே இருக்கவேண்டும். சாட்சிப்பிரமாணம் இந்த பெட்டியிலே வைக்கப்பட்டிருந்தது (யாத்.25:10-16). பொன் தூபபீடத்தை சாட்சிப்பெட்டிக்கு முன்னே வைத்து வாசஸ்தலத்து வாசலின் தொங்குதிரை தூக்கி வைக்கப்பட்டிருக்கும் (யாத்.40:5).

தகன பலிபீடம் ஆசரிப்புக் கூடாரமாகிய வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக (யாத்.40:6) வைக்கப்பட்டிருக்கும். இங்கேதான்

ஜனங்கள் பலிபொருட்களைக் கொண்டு வரவேண்டும். இந்த கூடாரத்தின் முன்னால் போட்டிருக்கின்ற திரைக்குள் யாரும் போகக்கூடாது. புறம்பேயுள்ள பலிபீடத்தில் ஜனங்கள் பலிசெலுத்திவிட்டுப் போக வேண்டும். இதுதான் அவர்களுடைய ஆராதனை. இந்த கூடாரத்தில் மூன்று பகுதிகள் உண்டு. ஒவ்வொரு பகுதிகளும் திரையினால் பிரிக்கப்பட்டு இருக்கும்.

1. முதல் பகுதி

இங்குதான் உடன்படிக்கைபெட்டியும், கிருபாசனமும் வைக்கப்பட்டிருக்கும். மகாபிரதான ஆசாரியன் வருடத்தில் ஒருமுறை இங்கு வரலாம். இது மகாபரிசுத்த ஸ்தலம் என்று அழைக்கப்படும்.

2. இரண்டாம் பகுதி

இது மேஜையை வைக்குமிடம். குத்துவிளக்கும் இங்கே வைக்கப்பட்டிருக்கும். இது பரிசுத்த ஸ்தலம் என்று அழைக்கப்படும். ஆசாரியர்கள் இங்கு வரலாம்.

3. மூன்றாம் பகுதி

இது பலிபீடமும், தொட்டியும் இருக்கிற இடம். இங்கு எல்லா ஜனங்களும் வரலாம். இது பிரகாரம் என்று அழைக்கப்படும்.

பலிபீடத்தில் என்றும் பலிசெலுத்தலாம். மகாபரிசுத்த ஸ்தலத்தில் வருடத்தில் ஒரு தடவை மகா பிரதான ஆசாரியன் ஆட்டுக்குட்டியின் இரத்தத்துடன் பிரவேசித்து பலி செலுத்த வேண்டும். மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும் உடன்படிக்கை பெட்டியில் பலகையில் எழுதப்பட்ட நியாயப்பிரமாணம் வைக்கப்பட்டிருக்கும்.

பிரகாரத்தில் இருக்கும் பலிபீடத்தில் முதலாவது பலிசெலுத்துவர். இந்த பலி எப்போதும் நமது வாயில் இருக்கவேண்டிய ஸ்தோத்திர பலியாகும் (எபி 13:15). எல்லா மக்களும், எல்லா நாட்களும் பலிசெலுத்துவதற்கு இங்கு அனுமதி உண்டு. இது இடைவிடாமல் நாம் கர்த்தருக்கு செலுத்தவேண்டிய ஸ்தோத்திரத்தையும், துதியையும் நமக்கு நினைவூட்டுகிறது. பலி செலுத்துகிற பொருளையும் (லேவி 1:9) பலிசெலுத்துகிறவனுடைய

கைகால்களையும் இங்கு இருக்கும் தொட்டியில் கழுவி சுத்தம் செய்வர். இது தேவனை ஸ்தோத்திரத்தினாலும், துதிகளினாலும் மகிமைப்படுத்தி ஆராதிக்கிறவர்கள் தங்களைத்தாங்களே சுத்திகரித்தவர்களாய் ஆராதிக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருக்கும் குத்துவிளக்கு பரிசுத்த ஆவியின் நிறைவுக்குள் சென்று தேவனை ஆவியோடு பாடி ஸ்தோத்திரம் செய்யவேண்டியதைக் காட்டுகிறது (1 கொரி 14: 15,16). அடுத்ததாக இருக்கும் மேஜையில் அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் அப்பங்கள் ஆராதிக்கிற நாம் தேவ பிரசன்னத்தில் நிறைந்து தேவனோடு ஐக்கியப்பட்டு ஆராதனை செய்ய வேண்டியதை உணர்த்துகிறது. நாம் அவரோடு ஐக்கியப்படும்போது அவரோடு ஒரே ஆவியாயிருக்கிறோம் (1 கொரி 6:17).

இப்படி தேவனோடு ஐக்கியமாகி அவரோடு ஒரே ஆவியுடையவர்கள்தான் அடுத்த பகுதியான மகா பரிசுத்த ஸ்தலத்தின் அனுபவமாகிய கர்த்தருடைய குரலைக் கேட்கிறதும், அவரை தரிசிக்கிறதுமான ஆராதனையின் உச்சக்கட்டத்துக்குள் கடந்து செல்வர்.

ஆசரிப்புக்கூடாரத்திற்கு வந்து அங்கே பலிசெலுத்துவதுதான், கர்த்தருடைய ஆராதனையாக மோசேயின் காலத்தில் இருந்தது. இவ்விதமான ஆராதனை செய்வதற்குத்தான் கர்த்தர் மோசேயை பார்வோனிடம் அனுப்பி ஜனங்களை அனுப்பச் சொன்னார். இந்த ஆராதனைதான் 40 வருட வனாந்திர யாத்திரையில் நடந்தது. அவர்கள் கானானில் பிரவேசிக்க யோர்தானைக் கடக்க வேண்டியது நேரிட்டபோது, ஜனங்கள் தங்கள் கூடாரங்களை விட்டுவிட்டார்கள். அவர்கள் சகல ஆசீர்வாதங்களையும் கர்த்தர் மோசேயிடம் சொல்லியிருந்ததுபோல பின்னர் பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் யோர்தானைக் கடக்கும் வேளையில் ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைபெட்டியை தங்கள் தோளில் சுமந்து கொண்டு கானானில் பிரவேசித்தார்கள்

(யோசுவா3:15-17). இச்சம்பவம் புதிய ஏற்பாட்டு கால விசுவாசிகளுக்கு ஒரு நிழல் சம்பவமாயிருந்தது.

1. இஸ்ரவேல் ஜனங்கள் பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து மோசே மூலமாக விடுவிக்கப்பட்டவர்கள். புதிய ஏற்பாட்டு காலத்து விசுவாசிகளாம் நாமோ சாத்தானின் கையிலிருந்து இயேசு கிறிஸ்துவினால் விடுதலையாக்கப்பட்டவர்கள்.
2. இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடலாகிய சமுத்திரத்தில் ஞானஸ்நானம் எடுத்தவர்கள். நாமும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள இயேசுவால் கட்டளை பெற்றிருக்கிறோம்.
3. இஸ்ரவேலர் வனாந்தரவாசிகளாக இருந்தார்கள். ஆவிக்குரியவர்களாகிய நாமும் இவ்வுலகில் பரதேசிகளாக இருக்கிறோம் (எபி.11:13).
4. இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தைத் தங்களுக்கு முன்வைத்து நடந்து திரிந்தார்கள். இக்கால விசுவாசிகளாகிய நாமோ பரலோக ராஜ்யத்தை நமக்கு முன்வைத்து பயணம் செய்துகொண்டிருக்கிறோம்.
5. இஸ்ரவேல் ஜனங்களோடு கர்த்தர் கூட இருந்தார். இக்காலத்தில் வாழ்கிற நம்மோடும் பரிசுத்த ஆவியானவர் உண்டு (யோவான் 14:16).
6. இஸ்ரவேல் ஜனங்கள் கூடாரங்களில் வசித்தார்கள் (எண் 33:7-49). ஆவிக்குரியவர்களாகிய நாமும்கூட சரீரமாகிய கூடாரத்திலே இருக்கிறோம் (2 கொரி.5:1).
7. இஸ்ரவேல் ஜனங்கள் கூடாரங்களை விட்டுவிட்டார்கள் (யோசுவா 3:17). விசுவாசிகளும் இந்த சரீரமாகிய மண்கூடாரத்தை ஒருநாள் விட்டுவிடுவார்கள் (2 கொரி.5:2).
8. இஸ்ரவேலர் யோர்தானைக் கடந்தார்கள் (யோசு.3:17). விசுவாசிகள் மரணத்தின் மூலம் இவ்வுலகைக் கடந்து போவார்கள் (2 கொரி.5:1).
9. இஸ்ரவேலர் கானானில் பிரவேசித்து தாங்கள் கட்டாத வீடுகளில் வாழ்ந்தார்கள். தேவபிள்ளைகள் தாங்கள் கட்டாத புதிய

எருசலேம் என்கிற இயேசு கட்டின வீட்டில் வசிப்பார்கள் (1 கொரி.15:49. யோவான் 14:2).

10. கானானில் புதிய எருசலேம் தேவாலயம் கட்டினார்கள் (1 இராஜா 3:63). பரலோகத்தில் இயேசுவாகிய ஆலயம் விசுவாசிகளுக்குக் கிடைக்கும் (வெளி.22:3).

கானானில் முதல் ஆராதனை

இஸ்ரவேல் ஜனங்கள் கானானில் பிரவேசித்தபிறகு ஆசரிப்புக்கூடாரம் போட்டதாக கூறப்படவில்லை. ஆனால் கானானுக்குள் பிரவேசித்தபிறகு யோசுவா ஏபால் பர்வதத்தில் ஒரு பலிபீடத்தைக் கட்டி அதில் பலிகளைச் செலுத்தினான். பின்பு மோசே எழுதின நியாயபிரமாணத்தை ஒரு வார்த்தைவிடாமல் யோசுவா ஜனங்களுக்கு முன்பாக வாசித்தான் (யோசுவா 8:30,31).

1. யோர்தானைக் கடந்தார்கள்

எகிப்திலிருந்து புறப்பட்ட சகல ஜனங்களும் செங்கடலில் ஞானஸ்நானம் பெற்றவர்கள். ஆனால் யோசுவாவும், காலேபும் தவிர மற்றவர்கள் அனைவரும் வனாந்தரத்தில் அழிந்தார்கள். வனாந்தரத்தில் பிறந்தவர்களோ ஞானஸ்நானம் எடுக்கவில்லை. அதனால் யோர்தானைக் கடக்கச் செய்ததை ஞானஸ்நானத்திற்கு ஒப்பாகக் கருதலாம். இவ்வாறு யோர்தானைக் கடந்த ஜனங்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். நிக்கொதேமுவிடம் இயேசு, ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் (யோவான் 3:5) என்று கூறியது பரமகானானுக்குச் செல்ல ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டாக வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

2. விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள்

கர்த்தர் யோசுவாவை நோக்கி நீ கருக்கான கத்திகளை உண்டாக்கி திரும்ப இரண்டாம்விசை இஸ்ரவேல் புத்திரரை விருத்தசேதனம்பண்ணு என்றார் (யோசுவா 5:2). எகிப்திலிருந்து

புறப்பட்டு வனாந்தரத்தில் அழிந்துபோனவர்கள் விருத்தசேதனம் பண்ணப்பட்டிருந்தார்கள். ஆனால் வனாந்தரத்தில் பிறந்தவர்கள் யோர்தானைக் கடந்தபின் விருத்தசேதனம் பெற்றார்கள். விருத்தசேதனம் மனந்திரும்புதலைக் காட்டுகிறது. பழைய ஏற்பாட்டின் காலத்தில் மனந்திரும்புதலின் அடையாளம் விருத்தசேதனமும், புதிய ஏற்பாட்டின் காலத்தில் மனந்திரும்புதல் இருதயத்தில் உண்டாகிற மாற்றமுமாய் இருக்கிறது. பவுல் கூறுகையில், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம் (ரோமர் 2:29) என்று குறிப்பிடுகிறார். மனந்திரும்பாத ஒருவன் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது. இயேசுவும் நாம் மனந்திரும்புவதற்கு எச்சரிக்கையாயிருந்து பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரிக்குமாறு கூறியிருக்கிறார்.

அதுமுதல் இயேசு : மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்க தொடங்கினார். மத்.4:17

3. பஸ்கா **ஆசரித்தார்கள்**

ஏபால் தேவசபையைக் காட்டுகிறது. திருவிருந்தில் பங்குபெற வேண்டுமானால் மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டு தேவசபையாகிய ஏபால் பர்வதத்திற்கு வரவேண்டியது அவசியம். கானானின் மகிமையை அனுபவிக்க இஸ்ரவேல் ஜனங்கள் பஸ்காவை ஏபால் பர்வதத்தில் ஆசரிக்க வேண்டியதாயிருந்தது போலவே பரலோக கானானின் மகிமைக்குள் பிரவேசிக்க மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதோடு திருவிருந்து ஐக்கியத்தில் பங்குகொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது.

சீலோவில் ஆசரிப்புக்கூடாரம்

இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாம் சீலோவிலே கூடி, அங்கே ஆசரிப்புக்கூடாரத்தை நிறுத்தினார்கள். தேசம் அவர்கள் வசமாயிற்று. யோசுவா 18:1

வனாந்தரத்தில் 40 வருஷம் தங்களுடைய பயணத்தில் கூடவேயிருந்த ஆசரிப்புக்கூடாரத்தை யோசுவா கானானில்

பிரவேசித்தபிறகு சீலோவில் நிறுத்தினார்:. வனாந்தர பயணத்தில் போகிற இடங்களில் கூட வந்துகொண்டிருந்த இக்கூடாரம், இப்போது சீலோவில் நிலையாக நிறுத்தப்பட்டபடியால் சகல ஜனங்களும் பலிசெலுத்துவதற்கு சீலோவிற்கு வரவேண்டும். கானானில் வேறொரு பலிபீடத்தைக் கட்டி அங்கே பலியிடக்கூடாது. யோசுவா தான் மரிக்கும் முன்பாக எல்லா இஸ்ரவேலரையும் தன்னிடம் கூட்டி, யோசுவா 24:1-28 வசனங்களை அவர்களுக்குக் கொடுத்தான். அவன் கொடுத்த ஆலோசனையின் சுருக்கம் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டி வைத்திருக்கிற சீலோவை விட்டு எங்கும் பலிசெலுத்தக்கூடாது என்பதே. பின்பு நூற்றுப்பத்து வயதுள்ளவனாய் யோசுவா மரணமடைந்தான்.

மகிமையை இழந்த ஆசரிப்பு கூடாரம்

யோசுவாவின் காலத்திற்குப் பிறகு இஸ்ரவேலரை ஒன்றாக நடத்துவதற்கு ஒரு தகுதியான தலைவர் இஸ்ரவேலருக்கு இல்லாமற்போனது. இஸ்ரவேலர்கள், யோசுவா தங்களுக்கு சுதந்தரவீதம் வைத்துக்கொடுத்த இடங்களை கைவசப்படுத்துவதற்காக தீவிர முயற்சிகள் செய்து கொண்டிருந்தார்கள். தங்கள் பின் தலைமுறைகளுக்கு தேவனைப் பகிர்ந்துகொடுக்கவும், சீலோவிலுள்ள ஆசரிப்புக்கூடாரத்தின் மகிமையைக் குறித்துச் சொல்லிக்கொடுக்கவும் அவர்கள் நேரம் ஒதுக்கவில்லை. யோசுவா கொடுத்த இடங்களை கானானின் இராஜாக்களின் கையிலிருந்து பிடித்துக்கொள்வதில் தீவிரமாய் இருந்தார்கள். இக்காலத்திலும் கர்த்தருடைய மகிமையைக் கண்டு அனுபவித்த அநேகர் கர்த்தர் தங்களை நடத்திய விதத்தைக் குறித்து தங்கள் பிள்ளைகளுடன் பகிர்ந்துகொள்ள நேரம் எடுத்துக்கொள்வதில்லை என்பது உண்மையே. உலகின் பின்னாக ஓடுவதற்கே அவர்களுக்கு நேரம் சரியாக உள்ளது. ஆராதனை, ஜெபம் ஒன்றிற்கும் அவர்களுக்கு நேரம் இல்லை. உலகத்தை சுதந்தரித்துக் கொள்வதற்காகவே ஓடுகிறார்கள்.

யோசுவாவின் காலத்திற்குப் பிறகு சீலோவிலுள்ள ஆசரிப்புக் கூடாரத்திற்கு ஜனங்கள் பலியிட வருவது குறைந்து கொண்டிருந்தது. ஆசரிப்புக் கூடாரம் வனாந்தரத்திலிருக்கையில் கஷ்டமான வனாந்தர யாத்திரையில் தினமும் கர்த்தருக்கு பலியிட ஜனங்கள் வந்தார்கள். கானானுக்குள் வந்த பின்போ கர்த்தருக்கு பலியிடும் எண்ணம் ஜனங்களுக்குள் குறைந்து போனது. கஷ்டமான காலங்களில் கர்த்தரை நோக்கி அழுது ஜெபித்தவர்களும் ஆராதித்தவர்களும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்ட பிறகு கர்த்தருடைய ஆராதனையை நினைத்துப் பார்க்கவும், கர்த்தரைத் திரும்பிப் பார்க்கவும் மனம் அற்றுப் போகின்றதை இன்றும் காணமுடிகிறது. சீலோவில் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி இருந்த இடத்திற்கு கோத்திர தலைவர்களோ, யுத்தவீரர்களோ யாரும் போய் பலி செலுத்தினதாகக் கூறப்படவில்லை. ஆசரிப்புகூடாரம் மறக்கப்பட்ட நிலையில் இருந்தது.

ஆசாரியனாகிய ஏலியினால் கர்த்தருக்கு ஏற்றபடி வளர்க்கப்படாத ஓப்னி, பினெகாஸ் பலிபொருட்கள் மீது காண்பித்த துணிகரம் மற்றும் பெண்களுக்கு இழைத்த பாதுகாப்பற்ற நிலை ஆகியவை பலிசெலுத்த வருபவர்களை அதிகமாய் பாதித்தது. தன் பிள்ளைகளை எச்சரிக்கத் தவறினான் ஏலி. மகிமையாயிருந்த ஆசரிப்புக்கூடாரம் புறக்கணிக்கப்படுவது பிரதிபலிப்பாய் முடிந்தது. ஜனங்கள் பலிபீடத்தண்டையில் வர பயந்தார்கள். கர்த்தருடைய மகிமையும் ஆசரிப்பு கூடாரத்தை விட்டு போய்விட்டது. ஆனால் இன்னும் தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டி அதற்குள்ளேயே இருந்தது.

ஏலியுடன் சாமுவேல்

எப்பிராயீம் தேசத்தில் வாழ்ந்த எல்க்கானாவுக்கும், குழந்தைக்காக தேவசமூகத்தில் அழுது ஜெபிப்பதற்காக சீலோவிலுள்ள ஆசரிப்பு கூடாரத்திற்கு வருஷத்தில் ஒரு தடவை போய்வந்த அன்னாளுக்கும் பொருத்தனையின் குமாரனாக தேவனால் கொடுக்கப்பட்டவன்தான் சாமுவேல். சக்களத்தி பெனின்னாள் விசனப்படுத்தினதால் அன்னாள் அடைந்த துக்கத்தை

தேவசமூகத்தில் ஊற்றினதின் விளைவாக தேவனால் இவன் அருளப்பட்டான். கர்த்தர் தன் விண்ணப்பத்தைக்கேட்டு தனக்குக் கொடுத்த ஆண்பிள்ளைக்கு அவள் சாமுவேல் என்று பெயரிட்டு அவனை சீலோவில் ஆசரிப்பு கூடாரத்திலிருக்கிற ஏலியினிடத்தில் ஒப்படைத்தாள்.

சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் கர்த்தருடைய சந்நிதியில் வளர்ந்தான். I சாமு.2:21

ஏலியின் பிள்ளைகள் கர்த்தருக்கு விரோதமாக பொல்லாங்கு செய்துகொண்டிருந்தார்கள். சாமுவேலோ தேவனுடைய கூடாரத்தைவிட்டுப் பிரியாமல் இருந்தான். கர்த்தர் சாமுவேலிடம் ஏலியின் குடும்பத்தில் வரப்போகிற நியாயத்தீர்ப்பைப் பற்றிச் சொன்னார். சாமுவேல் அவர் பேசினவற்றை ஏலியிடம் சொன்னான். கர்த்தர் எச்சரிக்கை கொடுத்த பிறகும் ஏலி தன் பிள்ளைகளிடம் தங்கள் துன்மார்க்கத்தை விட்டுவிடும்படி உபதேசிக்கவில்லை. பலமுறை கர்த்தர் சாமுவேலுக்கு தரிசனமானார். கர்த்தர் சாமுவேலோடே கூட இருந்தார். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளில் ஒன்றையாகிலும் தரையிலே விழுந்துபோக விடவில்லை. சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிதான் என்று தாண் முதல் பெயர்செபா மட்டுமுள்ள சகல இஸ்ரவேலருக்கும் விளங்கினது (I சாமு.3:19,20).

உடன்படிக்கை பெட்டி பிடிக்கப்படுதல்

கர்த்தர் இஸ்ரவேலில் செய்யப்போகிற காரியத்தைக் குறித்த சாமுவேலின் வார்த்தையை இஸ்ரவேலரெல்லாரும் அறிந்துகொண்டார்கள். பெலிஸ்தருக்கும் இஸ்ரவேலருக்கும் யுத்தம் உண்டானது. யுத்தம் அதிகரித்து இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முடிய அடிக்கப்பட்டார்கள். பெலிஸ்தர்களால் இஸ்ரவேலர் தோற்கடிக்கப்பட்ட போது தங்கள் தோல்வியின் காரணத்தைக் குறித்து சிந்தித்தார்கள். கர்த்தருடைய உடன்படிக்கைபெட்டி இல்லாததுதான் காரணம் என்ற முடிவிற்கு வந்தார்கள். அந்நிய ஜாதிகளின் விக்கிரகங்களை ஆராதித்து வாழ்ந்த அவர்கள் வாழ்க்கை தோல்வியைக் கண்ட பின்னரே அவர்களுக்கு கர்த்தரையும்,

ஆசரிப்பு கூடாரத்தையும், தேவனுடைய உடன்படிக்கை பெட்டியையும் குறித்த ஞாபகம் வந்தது. பெலனுள்ள காலங்களில் தங்களுக்குத் தோன்றினதும், தங்களுக்குப் பிரியமானதுமான வழிகளில் நடந்துவிட்டு பெலனை இழந்தவர்களாய் அவதிப்படும் காலங்களில் ஆலயத்தையும், ஆராதனையையும் தேடுகிறவர்கள் மக்கள். வசதிகளோடு நன்றாயிருக்கும்போது தேவனைத் தேடுவதற்கு மனமிருக்காது. வியாதியின் கொடுமை, கடனின் நெருக்கடி என சாதகமற்ற காலங்கள் சூழ்ந்து கொள்ளும்போது மட்டுமே தேவனைத்தேடி ஓட ஆரம்பிக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் சீலோவில் தேவனுடைய உடன்படிக்கை பெட்டியும், ஆசரிப்புகூடாரமும் இருந்ததை மறந்துவிட்டு, பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவித்தார்கள். அமைதியாய் வாழ்ந்த காலத்தில் உடன்படிக்கைப்பெட்டியை சற்றேனும் சிந்திக்கவில்லை.

தோல்வி வந்தபோது, சீலோவில் யோசுவா வைத்திருந்த உடன்படிக்கை பெட்டியைக் குறித்து சிந்தித்தனர். அசுத்தமுள்ளவர்களாயிருந்த அந்த ஜனங்கள் தேவனுக்கு பயப்படாமல் உள்ளே நுழைந்து உடன்படிக்கை பெட்டியை எடுத்தார்கள். பிரதான ஆசாரியன் மட்டும் ஆட்டுக்கடாவின் இரத்தம் கொண்டுபோய் தெளித்து பரிசுத்தமாக்க வேண்டிய இடத்தில், முன்னாலுள்ள இரண்டு திரைகளையும் நீக்கி பரிசுத்த ஸ்தலத்திலிருந்த உடன்படிக்கை பெட்டியை எடுத்துக் கொண்டு பாளயத்திற்கு வந்தார்கள். ஏலியின் இரண்டு புத்திரரும் பெட்டியோடுகூட வந்தார்கள்.

அப்படியே கேருபீன்களின் மத்தியில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியை எடுத்துவர ஜனங்கள் சீலோவுக்குச் சொல்லியனுப்பினார்கள்; அங்கே ஏலியின் இரண்டு குமாரராகிய ஓப்னியும், பினெகாசும் தேவனுடைய உடன்படிக்கை பெட்டியண்டையில் இருந்தார்கள். கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி பாளயத்தில் வருகிறபோது இஸ்ரவேலரெல்லாரும் பூமி அதிரத்தக்கதாக மகா ஆர்ப்பரிப்பாய்ச் சத்தமிட்டார்கள். **I சாமு.4:4,5**

இஸ்ரவேல் ஜனங்களின் ஆர்ப்பரிப்பின் சத்தத்தைக்கேட்டபோது பெலிஸ்தர் பயந்து, இஸ்ரவேலரின் தேவன் பாளையத்தில் வந்துவிட்டாரென்றும் அவர் கையிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள முடியாதென்றும் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். ஆனால் உடன்படிக்கை பெட்டியை கொண்டு வந்திருக்கிறவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு விரோதிகளும், பாகாலை சேவிக்கிறவர்களும் என்று அவர்களுக்குத் தெரிந்தபோது கர்த்தர் அவர்களுக்காக கிரியை செய்யமாட்டார் என்ற நிச்சயத்துடன் அவர்கள் திடன் கொண்டு யுத்தம் பண்ணினார்கள்.

பெலிஸ்தரே திடன்கொண்டு புருஷரைப்போல நடந்துகொள்ளுங்கள்; எபிரெயர் உங்களுக்கு அடிமைகளாயிருந்தது போல, நீங்களும் அவர்களுக்கு அடிமைகளாகாதபடிக்கு புருஷராயிருந்து யுத்தம் பண்ணுங்கள் என்று சொல்லிக் கொண்டார்கள். I சாமு.4:9

பெலிஸ்தியர் இஸ்ரவேலரோடு பலமாய் யுத்தஞ்செய்தார்கள். இஸ்ரவேலர் முறியடிக்கப்பட்டார்கள். ஜனங்களில் முப்பதினாயிரம்பேர் இறந்தார்கள். ஏலியின் இரு பிள்ளைகளும் இறந்தார்கள். கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியை பெலிஸ்தியர் பிடித்துக்கொண்டு போனார்கள். இச்செய்தியைக் கேட்டவுடன் ஆசாரியனாகிய ஏலி மல்லாக்க விழுந்து பிடரி முறிந்து செத்துப்போனான். பினெகாசின் மனைவி நிறை கர்ப்பிணியாயிருந்தாள். தன் மாமனும், புருஷனும் இறந்த செய்தியை அறிந்தவுடன் அவள் ஒரு ஆண்குழந்தையைப் பெற்றுவிட்டு இறந்துபோனாள்.

பரிசுத்தமின்றி ஆர்ப்பரிப்பு

பரிசுத்த தேவனுடைய உடன்படிக்கைபெட்டியை கையில் வைத்துக்கொண்டு சத்தமாய் ஆர்ப்பரித்துவிட்டால் ஜெயித்துவிடலாம் என்று நினைத்தார்கள். யோசுவாவும் ஜனங்களும் எரிகோ பட்டணத்தின் கோட்டையின்முன் ஆர்ப்பரித்த போது அவர்கள் அடைந்த வெற்றியைப்போன்று தங்களுக்கும் வெற்றியுண்டாகும் என்று நினைத்துக் கொண்டு ஆர்ப்பரித்த அவர்களுக்கு வெற்றிக்கு

பதிலாக அழிவே காத்திருந்தது. வெறும் இசைக்கருவிகளின் இரைச்சலும், ஆர்ப்பரிப்பின் கூச்சலும் ஒருபோதும் தேவசமூகத்தை எட்டுவதில்லை. சுத்த இருதயமும், நற்சிந்தையும், தேவனுக்குப் பிரியமான செயல்களும் இல்லாத நிலையில் எவ்வளவுதான் ஆர்ப்பரித்தாலும் ஆசீர்வாதம் உண்டாவதில்லை. மாறாக இருக்கிற ஆசீர்வாதங்களையும்கூட சாத்தானிடம் பறிகொடுக்கிற நிலைமையே உண்டாகும். வாரம் முழுவதும் பாவச்செயல்களில் ஈடுபட்டுவிட்டு பரிசுத்த ஆராதனைக்கு வேதாகமத்தை சுமந்துகொண்டு ஆலயத்திற்கு வந்து சத்தமிட்டு ஆராதிப்பதால் ஒருபோதும் வெற்றி கிடைக்கும் என்று நினைக்கக்கூடாது. கர்த்தர் பரிசுத்தராயிருக்கிறார். பரிசுத்தமின்றி எவரும் தேவனை நெருங்கமுடியாது. வெளியரங்கமான ஆர்ப்பரிப்பையும், பெரிய சத்தத்தையும், நடனத்தையும் பார்த்து கர்த்தர் ஒருவருக்கும் உதவிசெய்வதில்லை. அந்தரங்கமான பரிசுத்த வாழ்க்கையையே தேவன் கவனிக்கிறார்.

நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. I பேதுரு 1:16

சுத்திகரிப்பைப் பெற்றுக்கொண்டு தேவசமூகத்தில் ஆர்ப்பரித்தால் வெற்றியுண்டு. உடன்படிக்கை பெட்டியின்றி போனபோது 4000பேர் இறந்தார்கள். ஆனால் பெட்டியுடன் போனபோது 30000 பேர் இறந்தார்கள். காரணம் என்ன? பரிசுத்தமற்ற வாழ்க்கையே. கர்த்தரை ஆராதிக்கிற நாம் தேவ வசனம் நம்மோடு பேசும்போது நம்மை சோதித்தறிந்து நம்மை சீர்செய்துகொள்வது நல்லது.

இப்படியிருக்க எவன் அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்து குற்றமுள்ளவனாயிருப்பான். I கொரி.11:27

இங்கு அப்பம் தேவ வசனத்தைக் குறிக்கிறதாக எடுத்துக்கொண்டால், அபாத்திரமாய் தேவ வசனத்தை பயன்படுத்துவது சர்வ வல்லவராகிய தேவனை வாழ்க்கையில் கிரியை செய்யவிடாமல் தடைசெய்துவிடும். இப்படிப்பட்டவர்களைக்

குறித்து எரேமியா தீர்க்கதரிசி தங்கள் கால்களை அடக்கிக்கொள்ளாமல் அலைய விரும்புகிறவர்களென்று (எரே.14:8,9) கூறுகிறார்.

பெட்டி பிடிக்கப்பட்டபின் ஆசரிப்புக்கூடாரம்

சீலோவில் ஆசரிப்பு கூடாரத்திலிருந்த உடன்படிக்கை பெட்டி அங்கிருந்து எடுத்துச்செல்லப்பட்டபின், ஆசரிப்புகூடாரம் கர்த்தருடைய பெட்டி இல்லாத வெறும் கூடாரமாக மாறிப்போனது. ஏலியின் மரணத்தோடு ஆசாரிய பதவியும் இல்லாமல் போய்விட்டது. ஜனங்களும் ஆசரிப்புகூடாரத்தில் பலிசெலுத்துவதை விட்டுவிட்டார்கள். அதன்பிறகு இஸ்ரவேலில் வேறொரு பலிபீடம் உண்டாகவுமில்லை.

சாமுவேல் இஸ்ரவேலருக்கு நியாயம் விசாரித்தான். ஜனங்கள் தாங்கள் காரியங்களை சாமுவேலிடம் கொண்டு வருவர். வருஷந்தோறும் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தபின்பு ராமாவுக்கு திரும்பிவருவான். அங்கே இஸ்ரவேலை நியாயம் விசாரித்து அவ்விடத்தில் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான் (I சாமு.7:16,17).

சீலோவில் ஆசரிப்பு கூடாரத்தைவிட்டு மகிமை போய்விட்டபின் பலிகள் செலுத்துவதும் நின்றுவிட்டது. அதன்பின் சாமுவேல் தன் சொந்த ஊராகிய ராமாவில் சாமுவேல் கட்டின பலிபீடத்தில் இஸ்ரவேலர் பலியிடப் போனதாக வேதாகமத்தில் எங்கும் காணப்படவில்லை. அதனால் இது சாமுவேல் கர்த்தருக்குக் கட்டின பலிபீடம் என்று நினைக்கலாம்.

பெலிஸ்தரிடம் தேவனுடைய பெட்டி

இஸ்ரவேல் ஜனங்களை தோற்கடித்து பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியைப் பிடித்துக்கொண்டுபோய், தங்கள் தேவனாகிய தாகோனின் கோயிலில் வைத்தார்கள். மறுநாள் அவர்கள் பார்க்கையில் தாகோனின் சிலை தேவனுடைய பெட்டியின் முன்பாக விழுந்து கிடந்தது. சரிசெய்து திரும்ப நிறுத்தப்பட்டும்

மறுபடியும் விழுந்து கிடந்ததுடன் உடைந்தும் போனது (I சாமு.5:1-4). உடல் மாத்திரம் மீதியாயிருந்தது. கர்த்தருடைய பெட்டியை வைத்திருந்த அஸ்தோத்தின் ஜனங்களைக் கர்த்தர் மூலவியாதியினால் வாதித்தார். கர்த்தருடைய பெட்டி காத் பட்டணத்துக்குக் கொண்டுபோகப்பட்டது. அங்கேயும் கர்த்தருடைய கை மகா உக்கிரமாய் இறங்கியதால் மூலவியாதி உண்டாயிற்று. எனவே தேவனுடைய பெட்டி அங்கிருந்து எக்ரோனுக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது கர்த்தர் எக்ரோனின் ஜனத்தையும் மூலவியாதியினால் வாதித்தார். அங்கே அனேகர் செத்துப்போனார்கள்.

செத்துப்போகாதிருந்தவர்கள் மூலவியாதியினால் வாதிக்கப்பட்டதினால், அந்த பட்டணத்தின் கூக்குரல் வானபரியந்தம் எழும்பிற்று. I சாமு.5:12

கர்த்தருடைய பெட்டி பெலிஸ்தியரின் தேசத்திலிருந்த ஏழு மாதங்களில் அவர்களுக்கு மரணமும், வியாதியும் மிஞ்சினதேயல்லாமல் எந்தவித நன்மையும் உண்டாகவில்லை. இயேசுவை விசுவாசியாத அனேகர், தேவ வசனத்தை தங்களுடைய வீட்டிலும், தொழில்கூடங்களிலும் மற்ற புத்தகங்களுடன் வைத்துக்கொள்கிறார்கள். பரிசுத்த வேதாகமம் தங்களுடைய கையில் கிடைத்தபிறகும் திறந்து ஒருமுறைகூட வாசித்துப் பார்க்காதவர்கள் கீழுள்ளவற்றைக் கவனிக்க வேண்டும்.

1. பரிசுத்த வேதாகமம் ஒரு காட்சிப்பொருள் அல்ல.
2. ஜீவனுள்ள இப்புத்தகம் மற்ற புத்தகங்களுடன் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டிய ஒன்று அல்ல.
3. பரிசுத்த புத்தகத்தைப் பரிசுத்தத்துடன் உபயோகிக்க வேண்டும்.
4. உபயோகிக்காமல் வைத்திருப்பதைக் காட்டிலும் பிறருக்கு உபயோகிக்கும்படி கொடுப்பது மேலானது.
5. மனந்திரும்பாமல் வேதாகமத்தை வைத்துக்கொண்டால் ஆசீர்வாதம் பெறலாம் என நினைக்கக்கூடாது.

பெலிஸ்தியர் தேவனுடைய பெட்டியைத் திரும்ப இஸ்ரவேலுக்கு அனுப்ப தீர்மானித்தார்கள். ஒரு புதுவண்டியில் பெட்டியை வைத்து, தங்கள் ஆசாரத்தின்படியே சில பொருட்களையும் கூட வைத்து வண்டியில் இதுவரை நுகம்பூட்டப்படாத இரண்டு கறவைப் பசுக்களைக் கட்டினார்கள். இஸ்ரவேல்தேசம் நோக்கி பெட்டி பயணமானது. பெலிஸ்திய பிரபுக்கள் தங்கள் எல்லைவரை வண்டியைத் தொடர்ந்து வந்தனர். வண்டி பெலிஸ்திய நாட்டைக் கடந்து இஸ்ரவேலின் தொடர்ச்சியான இடமாகிய பெத்ஷிமேசுக்கு வந்தது. பெத்ஷிமேசின் மனுஷர் பெட்டியைக் கண்டபோது சந்தோஷப்பட்டு, சுமந்து வந்த பசுக்களைக் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக செலுத்தினார்கள். I சாமு.6:13,14

தேவனுடைய பெட்டியை சுமந்த பசுக்கள்

இஸ்ரவேலை விட்டு விலகிப்போன மகிமை (I சாமு.4:22) இஸ்ரவேலுக்குத் திரும்புவதற்கு இரண்டு நுகம்பூட்டப்படாதிருந்த கறவைப்பசுக்கன்றுகள் ஜீவனை விடவேண்டியதாயிற்று. இன்றும் தேவமகிமையையிழந்த தேவ ஜனம் கர்த்தருடைய ஊழியக்காரர்களுடைய அர்ப்பணத்தால்தான் தேவமகிமையை பெற்றுக்கொள்ள முடியும். பெட்டியைக் கொண்டுவந்த பசுக்கள் கறவையுள்ளதும், கன்றுகள் உள்ளதும், ஒரே கட்டுப்பாட்டில் வளர்ந்து வந்தவைகளுமாய் இருந்தன. பெட்டியை இழுக்கவேண்டிய பொறுப்பை அடைந்த இவை சிலவற்றைச் சகிக்க வேண்டியதாயிற்று.

1. கறவை நின்று போனதால் வருமானம் இழப்பாய் மாறினது.
2. தங்கள் கன்றுகளைவிட்டு பிரிய வேண்டியதாயிற்று.
3. தாங்கள் வாழ்ந்த வீட்டைவிட்டு பிரிய நேரிட்டது.
4. அவற்றுடனிருந்த பிற பசுக்களைவிட்டு பிரிய வேண்டியதாயிற்று.
5. அழுதுகொண்டே தங்கள் பொறுப்பை சுமந்துசென்று இறுதியில் முழுமையாக தங்களை தேவனுக்கு அர்ப்பணித்து பலியாக வேண்டியதாயிற்று.

இப்பசுக்கள் தேவனுடைய பெட்டியை பெலிஸ்திய தேசத்திலிருந்து இவ்வளவு கஷ்டங்களையும், நஷ்டங்களையும் அழுதுகொண்டே நடந்தாகிலும் சகித்துக்கொண்டபோதுதான் பெத்ஷிமேசில் சந்தோஷமாய் தேவமகிமை விளங்க முடிந்தது.

ஆகையால் நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம்.

எபி.13:13

தேவ பிள்ளைகள் உலக வருமானம், மனைவி பிள்ளைகள், குடும்பம், இனம் ஜனம் வீடு தேசம் என எதையும் திரும்பிப்பாராமல் அவற்றைப் பின்னால் வைத்துவிட்டு சுவிசேஷத்திற்காக செய்திருக்கிற அர்ப்பணமுள்ள வாழ்க்கை ஒருபோதும் வெறுமையாய்ப் போகாது. தேவ மகிமையைத் திரும்பவும் கொண்டு வரத்தான் செய்யும். சுவிசேஷத்திற்காக வாழ்கிறவர்கள் கிறிஸ்துவின் நுகத்தைச் சுமந்து கர்த்தருக்காக தங்கள் ஜீவனையும் அர்ப்பணிக்கிற கோதுமை மணிகளும், கறவை பசுக்களுமாக இருக்கிறார்கள். கிறிஸ்துவின் நுகத்தை ஏற்றுக்கொண்டு, இந்த பசுக்களைப்போல தியாகம் சகிப்பதற்கு தயாரானால் சாத்தானின் வல்லமைகள் முடக்கிப் போட்டிருக்கிற இடங்களைவிட்டு தேவவசனம் புறப்பட்டுச் செல்வதுடன் தேவனுடைய ஆசீர்வாதம் தடையின்றி, அடைய வேண்டிய இடங்களைச் சென்றடையும்.

நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும். I கொரி.1:6

இயேசுவை அறியாத இடங்களுக்குக் கடந்து போகும் சுவிசேஷ தியாகிகளை கர்த்தர் தேடுகிறார்.

கர்த்தருடைய பெட்டி அபினதாபின் வீட்டில்

பெலிஸ்தர்கள் திருப்பி அனுப்பிய பெட்டியை இஸ்ரவேலர் எடுத்து மேட்டின் மேலிருக்கிற அபினதாபின் வீட்டில் வைத்தார்கள். கர்த்தருடைய பெட்டியைக் காக்கும்படி அவனுடைய மகன் எலெயாசாரைப் பரிசுத்தப்படுத்தினார்கள்.

பெட்டி கீரியாத்யாரீமிலே அநேகநாள் தங்கியிருந்தது. இருபது வருஷம் அங்கேயே இருந்தது. இஸ்ரவேல் குடும்பத்தாரெல்லாம் கர்த்தரை நினைத்து புலம்பிக் கொண்டிருந்தார்கள். Iசாமு.7:2

கர்த்தருடைய பெட்டி இருபது வருஷம் அபினதாபின் வீட்டில் இருந்தபோது கர்த்தர் இஸ்ரவேலரையோ, அபினதாபின் வீட்டாரையோ ஆசீர்வதிக்கவில்லை. பெட்டி இஸ்ரவேலில் வந்த பிறகும் அவர்களுடைய புலம்பலும், அழுகையும் மாறவில்லை. மிகவும் பரிசுத்தமாய் பிரதான ஆசாரியன் ஆட்டுக்குட்டியின் ரத்தபலியோடு மட்டும் வருஷத்தில் ஒருதடவை போய் பார்க்கவேண்டிய கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி ஒரு சாதாரண மனுஷனுடைய வீட்டில் ஒதுக்கி வைக்கப்பட்டது.

தேவனுடைய பெட்டியும் தாவீது ராஜாவும்

இஸ்ரவேலரை நியாயம் விசாரிக்க கர்த்தர் நியாயாதிபதிகளை காலாகாலங்களில் உருவாக்கி வைத்திருந்தார். ஏலியின் வீட்டில் வளர்ந்த சாமுவேல் ஏலியின் மரணத்திற்குப் பிறகு சீலோவிலிருந்து அவனுடைய சொந்த இடத்திற்கு வந்தான். அங்கே ஒரு பலிபீடத்தை கட்டினது மட்டுமின்றி இஸ்ரவேலருக்கு நியாயவிசாரணையும் செய்து வந்தான். இஸ்ரவேலர் தங்களுக்கு ஒரு இராஜா வேண்டுமென்று சாமுவேலிடம் வந்து வேண்டிக் கொண்டார்கள். சாமுவேல் தேவனிடம் கேட்டு பென்யமீன் கோத்திரக்காரனாகிய கீஸ் என்பவனுடைய மகன் சவுலை இஸ்ரவேலின் இராஜாவாக அபிஷேகம் செய்தான். சவுலின் காலத்தில் கர்த்தருடைய பெட்டியிருந்த இடத்திற்கு யாரும் போகவுமில்லை. அதனை நினைத்துப் பார்க்கவுமில்லை. தாவீது இஸ்ரவேலுக்கு இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்ட பிறகு அவன் தேவனுடைய பெட்டியை நினைத்தான். அவன் இஸ்ரவேல் ஜனங்களை வரவழைத்து கர்த்தருடைய பெட்டியைக் குறித்து அவர்களிடம் பேசினான்.

நமது தேவனுடைய பெட்டியைத் திரும்ப நம்மிடத்துக்குக் கொண்டு வருவோமாக; சவுலின் நாட்களில் அதை தேடாதே போனோம் என்றான். I நாளா.13:3

தேவனுடைய பெட்டியைக் கொண்டு வருவதற்கு தாவீது மேற்கொண்ட பத்து காரியங்கள்

1. சவுல் நினையாத தேவனுடைய உடன்படிக்கை பெட்டியை அவன் நினைத்தான்.
2. பெட்டியை இஸ்ரவேலுக்குக் கொண்டுவர தீர்மானித்தான்.
3. தீர்மானத்தை இஸ்ரவேலின் சகல ஜனத்துக்கும் தெரிவித்தான்.
4. பெட்டியை ஏற்றிவருவதற்கு புதுவண்டியையும், அதை இழுத்துவர காளையையும் தயார் செய்தான்.
5. இஸ்ரவேலிலுள்ள சகல ஜனங்களையும் ஒருமித்துக்கூடி வரச்செய்தான்.
6. பாடகரையும், சகலவித வாத்தியங்களையும் வரவழைத்தான்.
7. வண்டியை நடத்த ஊசாவை நியமித்தான்.
8. தாவீதும் ஜனங்களும் தேவனுக்குமுன்பாக நடனமாடி தேவனை துதித்தார்கள்.
9. ராஜாவாயிருந்த தாவீது சாதாரண மனுஷரோடு சேர்ந்து நடந்து தேவனை ஆடிப்பாடி துதித்தான்.
10. தேவனுடைய பெட்டியின்முன் தாவீது தன்னை மறந்து தேவனைத் துதித்தான்.

இவ்வளவு காரியங்களுக்குப்பின் தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டி கொண்டு வரப்பட்ட போதிலும் கீதோனின் களம் மட்டும் வந்தபோது மாடுகள் இடறினபடியால், ஊசா பெட்டியைப் பிடிப்பதற்காக தன் கையை நீட்டினபோது கர்த்தர் அவனை அடித்தார். அவன் தேவசமூகத்தில் செத்தான். 20 வருஷமாக ஒருவர் கூட திரும்பிப் பார்க்காமலிருந்த இடத்திலிருந்து தேவனுடைய பெட்டியை இவ்வளவு பிரயாசங்களுடன் கொண்டுவந்த போதும் அவனுக்குக் கிடைத்த பிரதிபலன் மோசமாயிருந்தது.

1. தாவீது விசனப்பட்டான் (I நாளா.13:11)
2. தாவீது பயந்தான் (I நாளா.13:12)

தாவீது தன் விருப்பத்தின்படி தேவனுடைய பெட்டியைத் தன்னிடத்துக்குக் கொண்டுவர முடியாமல் பயந்து அதை ஓபேத்ஏதோமின் வீட்டிலே வைக்க வேண்டியதாயிற்று.

தாவீதின் முயற்சியை கர்த்தர் ஏற்றுக்கொள்ளாமற்போனது ஏன்?

1. தேவ வசனத்தின்படி அவன் பெட்டியைக் கொண்டுவராததால் அவன் அதற்காக மேற்கொண்ட அனைத்து காரியங்களுமே பலனற்றவைகளாய் போய்விட்டது.
2. பெட்டியை பரிசுத்தமாக்கப்பட்ட ஆசாரியர்கள் தங்கள் தோள்களில் சுமப்பதற்கு பதிலாக காளைகள் இழுத்துக் கொண்டு வந்தன.
3. பெட்டியை வைக்க தனி இடம் ஒதுக்கப்பட வேண்டும்.
4. தாவீது தன் பழைய பூர்வமான பாதையை மறந்து மற்ற ஜாதிகள் செய்ததுபோல செய்தான். இதைக்குறித்து எரேமியா தீர்க்கதரிசி இப்படிச் சொல்லுகிறார்,

வழிகளிலே நின்று பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்லவழி எங்கே என்று பார்த்து அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள். *எரே.6:16*

பூர்வபாதை சொல்வது என்ன? பெட்டி எப்படி கொண்டு வரப்பட வேண்டும்?

1. **பெட்டி அதன் தண்டுகளால் சுமக்கப்பட வேண்டும்.**

   அந்த தண்டுகளால் பெட்டியைச் சுமக்கும்படி இவைகளைப் பெட்டியின் பக்கங்களிலிருக்கும் வளையங்களிலே பாய்ச்சக்கடவாய் (யாத்.25:14).

2. **பரிசுத்தமாய் லேவியராகிய ஆசாரியர்களால் சுமக்கப்பட வேண்டும்.**

   ஜனங்களை நோக்கி : நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியையும், அதைச் சுமக்கிற

லேவியராகிய ஆசாரியர்களையும் கண்டவுடனே நீங்களும் உங்கள் இடத்தைவிட்டு பிரயாணப்பட்டு அதற்கு பின் செல்லுங்கள்.
யோசு.3:3

3. **பெட்டியுடன் போகிற ஜனங்கள் தங்களை சுத்திகரிக்க வேண்டும்.**

யோசுவா ஜனங்களை நோக்கி : உங்களை பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள் என்றார்.
யோசு.3:5

4. **ஜனங்கள் பெட்டிக்குப் பக்கத்தில் போகாமல் இடைவெளிவிட்டு போகவேண்டும்.**

உங்களுக்கும் அதற்கும் இடையிலே இரண்டாயிரம் முழத்தூரமான இடம் இருக்க வேண்டும்; நீங்கள் நடக்க வேண்டிய வழியை அறியும்படிக்கு அதற்கு சமீபமாய் வராதிருப்பீர்களாக.
யோசு.3:4

5 **பெட்டியைப் பரிசுத்தமான இடத்தில் இறக்கி வைக்க வேண்டும்.**

தாவீது பூர்வ பாதையையும், தேவ வசனத்தையும் தள்ளிவிட்டு தன் விருப்பப்படி பெட்டியைக் கொண்டுவர முயற்சித்தது ஆசீர்வாதத்திற்கு பதிலாக மரணத்தில் முடிந்தது. மக்கள் கூட்டம், ஆடல், பாடல் எல்லாம் இருந்தும் தேவ வசனத்தின்படியாக நடக்காமற்போனதால் தேவன் அவனைக் கண்ணோக்கிப் பார்க்கவில்லை. பெட்டியை வண்டியிடம் சுமக்கவிட்டுவிட்டு பயமும் பக்தியும் நடுக்கமும் இல்லாமல் தன் விருப்பப்படி நடனமாடி ஆராதித்தது ஆசீர்வாதத்தையல்ல விசனத்தையே தாவீதுக்கு அளித்தது. உடன்படிக்கைப்பெட்டி சுவிசேஷத்தைக் குறிக்கிறது. சுவிசேஷத்தைக் குறித்த பாரத்தை மனதில் சுமக்க வேண்டியவர்களாகிய அழைக்கப்பட்ட ஜனங்கள் அப்பாரத்தை ஏற்றுக்கொள்ளாமல் மற்ற ஜனங்களைப்போல சுவிசேஷ சுமையின்றி தேவனை ஆராதிப்பதை தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார். யெப்தாவின் மகளுடைய நடனத்துக்கும் (நியா.11:34), ஏரோதியாளின் மகளின் நடனத்துக்கும் (மாற்கு 6:22-28) உண்டான முடிவாகிய

ஒரு மரணத்தைப் போன்றே தாவீதின் நடனயாத்திரையின் முடிவும் அமைந்துவிட்டது. தான் சுமக்க வேண்டிய சுவிசேஷ பாரத்தை சுமக்க மனமற்ற ஒருவன் தேவனுக்குமுன் நடனமாடிவிடுவதால் தேவன் ஒருபோதும் அந்த நடனத்துக்கு பலனளிப்பதில்லை. கர்த்தரை மகிமைப்படுத்தும்படி கைகளை உயர்த்தி, கைகளைத் தட்டி, கைகளை அசைத்து என பலவிதங்களிலும் ஆராதிக்கலாம். இருதயத்தில் தேவனுடைய பாரத்தை சகிக்கிறவர்களுக்குமுன் அசையாதவை இல்லை.

அப்போஸ்தலர்கள் ஒருமித்துக் கூடியிருந்து ஜெபித்தபோது அவர்கள் இருந்த இடம் அசைந்தது. அப்.4:31

பவுலும் சீலாவும் நடுராத்திரியில் கர்த்தரைப்பாடி துதித்தபோது சிறைச்சாலையின் கதவுகள் திறக்கப்பட்டது.

அப்.16:25.26

எரிகோ கோட்டையைச் சுற்றிவந்து இஸ்ரவேல் ஜனங்கள் ஆர்ப்பரித்தபோது எரிகோ கோட்டை விழுந்தது (யோசு.6:1).

ஆனால் இன்று விழவேண்டியது விழாமலும், திறக்க வேண்டியது திறக்காமலும், அசைய வேண்டியது அசையாமலும் இருந்தவண்ணமே இருக்கிறது. மாறாக ஆராதிக்கிற ஜனமே அசைக்கப்பட்டு, தகர்க்கப்பட்டு விழுந்துகொண்டிருக்கிறது. காரணம் என்ன? பரிசுத்த ஆவியானவரின் கிரியைக்கு இடங்கொடாமல் தாவீதைப்போல புதிய வண்டிகளை கட்டுகிறதே. தாவீது வண்டியைக்கட்ட கற்றுக்கொண்டது பெலிஸ்தியரிடமிருந்து. தேவ வசனத்தை அறியாத அவர்கள் பூஜாசாரிகள், குறிசொல்லுகிறவர்களின் சொல்கேட்டு செய்தபடியே தாவீதும் செய்ததன் முடிவே ஊசாவின் மரணமாகிவிட்டது. இன்றைய ஆவிக்குரிய தலைமுறைகளும் இக்காரியங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பூர்வ பாதைகளையும் தேவ வசனத்தையும் புதுமையான உலகிற்கேற்ப மாற்றிக்கொள்வதில் மிகுந்த கவனமுள்ளவர்களாயிருக்க வேண்டியது அவசியம். பிற ஜனங்களின் செயல்களைப் பின்பற்றக்கூடாதென்று கர்த்தர் சொன்னார். இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் பின்பற்ற வேண்டியது

இயேசுவையும், அப்போஸ்தல உபதேசத்தையுமே. இந்த உலகத்தோடு ஒத்த புதிய வேஷத்தைத் தரிக்காமல் மனதைப் புதிதாக்கி மறுரூபப்படுவதில் அக்கறை கொள்ள வேண்டும்.

ஓபேத் ஏதோமை கர்த்தர் ஆசீர்வதித்தது ஏன்?

தேவனுடைய பெட்டி ஓபேத் ஏதோமின் வீட்டிலே அவனிடத்தில் மூன்றுமாதம் இருக்கையில் கர்த்தர் ஓபேத் ஏதோமின் வீட்டையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார். I நாளா.13:14

அபினதாபின் வீட்டில் 20 வருடங்கள் இருந்தும் எந்த ஆசீர்வாதத்தையும் கொண்டுவராத அந்த தேவனுடைய பெட்டியால் வெறும் மூன்று மாதங்கள் மட்டுமே இருந்த ஓபேத்ஏதோமின் வீடு ஆசீர்வதிக்கப்பட்டதற்குக் காரணம் ஒன்று உண்டு. அபினதாப் பெட்டியை பார்த்துக்கொள்ள தன் மகனை நியமித்துக்கொண்டு கடமைக்காக தேவனுடைய பெட்டியை தன் வீட்டில் வைத்திருந்தான். ஓபேத்ஏதோமோ அதைத் தன் காரியமாக ஏற்றுக்கொண்டு, மற்றவர்களைப் பொருட்படுத்தாமல் தன் கடமையாக நினைத்து தன் வீட்டில் வைத்திருந்தான். கர்த்தரை கடமைக்காக ஆராதிக்கிறவர்கள் எவ்வளவு காலம் ஆராதித்தாலும் அவர்கள் கர்த்தரிடமிருந்து எந்த நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியாது. கர்த்தரைத் தாங்கள் சொந்தமாக்கிக் கொள்ளுகிறவர்களாய் ஆராதிக்கிறபோது மட்டுமே சகல ஆசீர்வாதங்களும் உண்டாகும்.

அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள். ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை. அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே. எபி.11:16

பெட்டியை சுமந்த ஆசாரியர்களும், சிலுவை சுமந்த இயேசுவும்

தேவனுடைய உடன்படிக்கை பெட்டியை சுமந்த ஆசாரியர்கள் சிலுவை சுமந்த கிறிஸ்துவிற்கு நிழலாவர். இயேசு சிலுவையை சுமக்கையில் யாரும் உதவி செய்யவில்லை. சீமோனை

இயேசுவின் சிலுவையை சுமக்க பலவந்தம்பண்ணினார்கள் என்றும் (மத்.27:32; மாற்கு 15:21), அவன்மேல் வைத்தார்கள் (லூக்.23:26) என்றும் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளதே ஒழிய அவன் சிலுவையை சுமந்தான் என்பதற்கு வேதத்தில் எந்த ஆதாரமும் இல்லை. ஏனெனில் யோவான் சுவிசேஷம் (19:17) அவராகவே சிலுவையை சுமந்தார் என்றே கூறுகிறது. சீமோன் என்ற அடிமை மனுஷனை அவர்கள் பலவந்தம் பண்ணினார்கள் என்பது நிச்சயம். இந்த அவமானத்தை அவன் சகித்ததினால் அதற்காகவே கர்த்தர் அவன் குடும்பத்தை ஆசீர்வதித்தார். கர்த்தர் சிலுவையைச் சுமந்துகொண்டு சென்றது போல நாம் ஒவ்வொருவரும் சுவிசேஷத்தைச் சுமந்துகொண்டு பாளயத்திற்கு வெளியே சென்றிட வேண்டும்.

வசனத்தின்படி உடன்படிக்கைப் பெட்டி எருசலேமுக்கு கொண்டு வரப்பட்டது

அபினதாபின் வீட்டிலிருந்து தேவனுடைய பெட்டியைக் கொண்டுவந்த போது தாவீதுக்கு ஏற்பட்ட விசனமும், பயமும் அவனை வசனத்தின்படி செய்ய பயிற்றுவித்தது. அவன் கற்றுக்கொண்ட பாடம் அவனைத் தேறினவனாக்கிற்று. தாவீதின் நகரத்துக்கு மகிழ்ச்சியுடன் கொண்டுவர தீர்மானித்தான். தேவனுடைய பெட்டியை, அதனை சுமக்க வேண்டிய ஆசாரியர்கள் சுமந்து வந்தார்கள். தங்களை பரிசுத்தமாய் காத்துக்கொண்டு பெட்டியைச் சுமக்கத் தேவையான சகல ஆயத்தங்களையும் செய்தார்கள். தாவீது தன்னை தாழ்மைப்படுத்தினான். தன் ராஜவஸ்திரத்தைக் களைந்தான். சணல்நூல் ஏபோத்தைத் தரித்தான். தேவனுக்கு பலியிட்டு பயணத்தைத் தொடர்ந்தான். தன் தேவனுக்குமுன் தன்னைத் தாழ்த்தி தன் முழுபலத்தோடும் நடனம் பண்ணி மீகாள் தன்னை அவமதிக்கும் அளவுக்குக் குதித்து ஆடிப்பாடினான். பெட்டி தாவீதின் நகரத்துக்குள் கொண்டு வரப்பட்ட போது பலிகளைச் செலுத்தினான். பலியில் ஆரம்பித்த தேவனுடைய பெட்டியுடன் கூடிய இந்த பயணம் தேவனுக்கு பலிசெலுத்தி முடிவுற்றது. இம்முறை அவன் ஆடிப்பாடினதும், குதித்ததும்,

நடனமாடினதும் பலியின் இரத்தத்தின்மீது நின்றுகொண்டே. இந்த இரத்தம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்துக்கும், அவருடைய கிருபைக்கும் நிழலாகும். கிருபையைச் சார்ந்து இயேசுவின் ரத்தத்தால் தன்னை பாவமற கழுவிக்கொண்ட பின் செய்யும் ஆராதனையே தேவன் ஏற்றுக்கொள்ளும் ஆராதனை. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் தன்னைக் கழுவிக்கொள்ளாத நிலையில் சுயபெலத்துடனும், சுயமரியாதையின் கெம்பீரத்துடனும் உண்டாகும் ஆராதனையையல்ல தேவன் எதிர்பார்ப்பது. கிறிஸ்துவின் ரத்தத்தின் சகல மேன்மைகளையும் அடையும்படி அதிகமாய் இயேசுவை சார்ந்துகொள்வோமானால் தேவவசனம் நிச்சயமாய் நம்மில் தங்கி முப்பதும் அறுபதும் நூறுமாக பலன்கொடுக்கும். வசனத்தைப் பற்றிக்கொண்ட தாவீது தன் நகரத்திற்கு தேவனுடைய பெட்டியுடன் ஜெயமாகச் சென்றடைந்தான்.

இருபது வருஷமாக எந்த பலியும் செலுத்தப்படாத, ஆசாரியர்களால் கொண்டுவரப்பட்ட பெட்டியின் முன் தாவீது சர்வாங்க தகனபலிகளையும், சமாதானபலிகளையும் செலுத்தினான். பெட்டி தாவீதின் நகரமாம் எருசலேமில் வைக்கப்பட்டது. இந்த இடத்திற்கு இஸ்ரவேல் ஜனங்கள் பலியிட வந்ததாக பின்னர் கூறப்படவில்லை. இது தாவீது கர்த்தருக்காக செய்த பலியாகவேயிருந்தது.

அவர்கள் தேவனுடைய பெட்டியை உள்ளே கொண்டுவந்தபோது, தாவீது அதற்கு போட்ட கூடாரத்தின் நடுவே அதை வைத்து, தேவனுடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தினார்கள்.

I நாளா.16:1

தேவனுடைய பெட்டி மீண்டும் எடுத்துச்செல்லப்பட்டது

தாவீது தன் மகனாகிய அப்சலோமைப் பார்த்து பயந்து எருசலேமைவிட்டு ஓடிப்போகும்போது தேவனுடைய பெட்டியையும்கூட லேவியர்கள் சுமந்துகொண்டுபோய் ஜனங்கள் எல்லாரும் நகரத்தி-ருந்து கடந்து தீருமட்டும் (II சாமு.15:24)

நகரத்திற்குப் புறம்பே கீதரோன் ஆற்றண்டை வைத்திருந்தார்கள். பின்பு கர்த்தர் என்மேல் கிருபையாயிருந்தால் நான் மீண்டும் அதையும், அவர் வாசஸ்தலத்தையும் பார்க்கிறதற்கு என்னை திரும்பி வரப்பண்ணுவார் என்று கூறி கண்ணீரோடே பெட்டியை நகரத்திற்கு அனுப்பிவிட்டு, தாவீது முகத்தை மூடிக்கொண்டு வெறுங்காலால் வனாந்தர வெளிகளுக்கு நடந்து சென்றான். பெட்டி அதன் இடத்தில் திரும்ப கொண்டுவந்து வைக்கப்பட்டது. அப்சலோமின் மரணத்திற்குப்பின் தாவீது மறுபடியும் ராஜாவாக வந்தான். கர்த்தருடைய பெட்டியை வைக்கிறதற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்று விரும்பினான். ஆனால் அவனுடைய மகன் சாலொமோனே எனக்கு ஆலயம் கட்டுவான் என்று (II சாமு.7:13) கர்த்தர் கூறியிருந்தபடியால் தாவீது தேவாலய வேலைக்கான சகல பொருட்களையும் சேகரித்தான்.

தாவீது தன்னை ராஜாவாக்கின கர்த்தரை மறவாதவனாய் இருந்தபடியால் அவன் தன் மனதை தேவனுடைய பெட்டியிருக்கும் இடத்திலே வைத்திருந்தான். அதைவிட்டுவிட்டு பிரிந்து போகும்போது, ஆகவேதான் அவன் உள்ளம் உடைந்தது. அழுதுகொண்டே சென்றான். என்மேல் அவருக்கு பிரியமில்லை என்று சொல்லமாட்டார் என்று கர்த்தரைக் குறித்து உரிமையாய் பேசிவிட்டு வனாந்தரத்தில் தரித்திருந்த அவனுடைய சூழ்நிலையைத் தலைகீழாக மாற்றி பெட்டியிருக்கும் இடத்தில் அவனைக் கர்த்தர் திரும்பவும் ராஜாவாக்கி கொண்டுவந்து சேர்த்தார். நம்பிக்கை கர்த்தர்மேல் இருந்தால் ஒருபோதும் சூழ்நிலை கர்த்தரை நம்பின தேவபிள்ளையை ஜெயிப்பதில்லை.

9

கர்த்தருக்கு ஆராதனை செய்ய ஆலயம்

சாலொமோன் இஸ்ரவேலின்மேல் ராஜாவான நாலாம் வருஷம் சீப் மாதமாகிய இரண்டாம் மாதத்தில் (I இரா.6:1) கர்த்தரின் ஆலயத்தைக் கட்டத் தொடங்கினான். ஏழு வருடங்களில் ஆலயத்தைக் கட்டிமுடித்தபிறகு, தாவீது தேவனுடைய பெட்டியை வைத்திருந்த இடத்திலிருந்து எடுத்து ஆலயத்திற்குள் அதற்குரிய முறைமையின்படியே கொண்டுவந்து வைத்தான். ஆசரிப்புகூடாரத்தில் இருந்த அதே நிலையில் எருசலேம் தேவாலயத்திலும் தேவனுடைய பெட்டியை வைத்தான்.

அப்படியே ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை ஆலயத்தின் சந்நிதிஸ்தானமாகிய மகாபரிசுத்த ஸ்தானத்தில் கேருபீன்களுடைய செட்டைகளின்கீழே கொண்டுவந்து வைத்தார்கள். I இரா.8:6

ஆசரிப்புக்கூடாரத்திற்குப் பிறகு கர்த்தருக்கென்று கட்டப்பட்ட முதல் ஆலயம் இதுவே. ஆசரிப்புக்கூடாரத்தில் ஜனங்கள் பலியிட்டுவந்ததுபோல இந்த ஆலயத்திலும் ஜனங்கள் பலியிடுவதற்குத் தேவையான எல்லா வசதிகளும் செய்யப்பட்டது. ஆசரிப்பு கூடாரத்தையே அதற்குள் வைத்தார்கள்.

பெட்டியையும், ஆசரிப்புகூடாரத்தையும், கூடாரத்திலிருந்த பரிசுத்த பணிமுட்டுகள் அனைத்தையும் சுமந்துகொண்டு வந்தார்கள்; ஆசாரியரும் லேவியரும் அவைகளைச் சுமந்தார்கள். ராஜாவாகிய சாலொமோனும் அவனோடேகூடின இஸ்ரவேல் சபையனைத்தும்

பெட்டிக்கு முன்பாக நடந்து, எண்ணிக்கையும் கணக்குமில்லாத திரளான ஆடுகளையும், மாடுகளையும் பலியிட்டார்கள்.

I இராஜா 8:4,5

கர்த்தருடைய மகிமையினால் நிரப்பப்பட்டிருந்த இந்த தேவாலயத்தில் நின்று கர்த்தரை நோக்கி ஜெபித்தபோது (I இராஜா 8:12-63) கர்த்தர் அவன் விண்ணப்பத்தைக் கேட்டு அவனுக்கு உத்தரவு (I இராஜா 9:3-9) அருளினார்.

சாலொமோனின் தவறுகள்

சாலொமோன் தான் கர்த்தரிடம் சொன்னபடியாகவோ, கர்த்தர் அவனிடம் கூறினபடியாகவோ அவன் கர்த்தருக்கு முன்பாக நடந்து கொள்ளவில்லை. ஆகவே கர்த்தர் தாம் முன்பே சொல்லியிருந்தபடி தம்முடைய கண்களை இந்த ஆலயத்தைவிட்டு விலக்கிக்கொண்டார் (I இராஜா 9:6-8).

1. சாலொமோன் அந்நிய ஜாதியரான அநேகம் ஸ்திரீகளை விவாகம் செய்தான் (I இராஜா 11:1).
2. சாலொமோன் அந்த ஸ்திரீகளின்மேல் ஆசைவைத்து அவர்களோடு ஐக்கியமாயிருந்தான் (I இராஜா 11:2).
3. அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள் (I இராஜா 11:3).
4. சாலொமோனுடைய இருதயம் அவனுடைய தகப்பனைப்போல கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை (I இராஜா 11:4).
5. சாலொமோன் அன்னிய தேவர்களைப் பின்பற்றினான் (I இராஜா 11:4,5).
6. கர்த்தரைப் பூரணமாய் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான் (I இராஜா 11:6).
7. அந்நிய தெய்வங்களுக்கு மேடையைக் கட்டினான் (I இராஜா.11:7,8).

ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, அந்நிய தேவர்களைப் பின்பற்றவேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தும் அவன் கர்த்தரைவிட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற்போனதினால் கர்த்தர் அவன்மேல் கோபமானார்.

I இராஜா 11:9,10

எருசலேம் தேவாலயத்தின் வீழ்ச்சி

சாலொமோனின் காலத்திற்கு பிறகு இஸ்ரவேல் தேசம் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டது. பெலவீனரும், விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்களுமாகிய இராஜாக்கள் தேசத்தை ஆண்டனர். யோயாக்கீனுடைய காலத்தில், பாபிலோன் இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இஸ்ரவேல் தேசத்தை முற்றுகை போட்டு அதைப்பிடித்துக்கொண்டான் (II இராஜா 24:13-15). இது முதலாம் பாபிலோன் வருகை என்று கூறப்படுகிறது. நேபுகாத்நேச்சார் இரண்டு தடவையாக இஸ்ரவேலரையும், இஸ்ரவேலிலுள்ள அனைத்தையும் பாபிலோனுக்குச் சிறைபிடித்துக்கொண்டு போனான் (II இராஜா 24:16). சிலநாட்கள் கழிந்த பின்பு பாபிலோன் இராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் ஊழியக்காரனாகிய நெபுசராதான் என்னும் காவல் சேனாபதி எருசலேமுக்கு வந்து இஸ்ரவேலரை சிறைகளாகக் கொண்டு போனான் (II இராஜா 25:9-11). இது இரண்டாம் பாபிலோன் வருகை என்று கூறப்படுகிறது.

சாலொமோனின் கர்த்தரைவிட்டு வழுவிப்போன இருதயமும் கர்த்தரின் எச்சரிப்புகளுக்குத் திரும்பாத அவனுடைய இருதயமும் கர்த்தரின் மகிமை தங்கின ஆலயத்தை பரிதாபமான நிலைமைக்குள்ளாக்கிவிட்டது. தன்னைவிட்டு அகன்றுபோன இருதயங்களால் கோபமான கர்த்தர் சாலொமோன் கட்டின அந்த தேவாலயத்தை மறந்தார்.

நெகேமியாவின் காலத்தில் ஆலயம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இது செருபாபேலின் ஆலயம் என்று சொல்லப்பட்டது. செருபாபேல் கட்டின இந்த ஆலயத்தைத்தான்

ஏரோது புதுப்பித்துக் கட்டினான். இயேசுவின் காலத்தில் இருந்த ஆலயம் இதுவே. ஏரோது இந்த ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டுவதற்கு 46 வருஷங்கள் ஆனது. இந்த ஆலயத்தைப் பார்த்துதான் இயேசு, "இந்த ஆலயத்தை இடித்து போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்றார்.

அப்பொழுது யூதர்கள் இந்த ஆலயத்தைக்கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே. நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ என்றார்கள். யோவான் 2:19,20

சாலொமோன் ஆலயத்தைக்கட்ட ஏழு வருடங்களே ஆனது. ஆனால் அது இடிக்கப்பட்டபோது, மறுபடியும் அதை 46 வருடங்களாக இரண்டு தடவைகள் கட்டியும் குறை தீர்க்கப்படவில்லை. ஒரு தேவபிள்ளை பின்மாற்றம் அடைந்து போனால் திரும்ப தேவனுடைய சாயலை அடைவதும் இத்தகையதே. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைவிட்டு விலகுகிற ஒருவனை மறுபடியும் விசுவாசத்தில் பூரணமடையச்செய்வது இலகுவான காரியமல்ல.

சாலொமோனுடைய வாழ்க்கையில் தேவனுக்கு அவன் செய்த ஆராதனையில், தடுமாற்றம் உண்டானபோது கர்த்தர் இரண்டுமுறை தரிசனமானார். ஆனால் பின்னும் ஸ்திரீகளினால் சாத்தான் அவன் இருதயத்தை தேவனைவிட்டு விலகச்செய்தான். சாலொமோனை வசீகரித்த சாத்தான் இன்றும் உலகத்தில் இருக்கிறான். அவனைக் கர்த்தர் அக்கினிக்கடலில் போடுகிறது வரையிலும் அவன் தன்னுடைய வேலையைத் தொடர்ந்துகொண்டேதான் இருப்பான். சாத்தான் பண ஆசையாகிய வலையையும் பயன்படுத்தி அநேகரை இன்று வசீகரித்துக் கொண்டிருக்கிறான்.

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். I பேதுரு 5:8

கர்த்தருக்கென்று உலகத்திலே மிகப்பெரிய ஆலயத்தைக் கட்டினதற்குரிய எந்த கனத்தையும் கர்த்தரிடம் சாலொமோன் பின்னாட்களில் பெற்றுக்கொள்ளாமல் போனான். விசுவாச வீரர்களின் பட்டியலிலும் அவன் பெயர் இடம்பெறாமல் போனது. பெரிய நிறுவனங்களைக் கர்த்தரின் பெயரால் நிறுவுவதாலோ, ஆலயம் கட்ட பணமோ இடமோ கொடுப்பதாலோ கர்த்தர் நம்மேல் பிரியம் கொள்வதில்லை. கர்த்தருடைய கற்பனைகளை கடைபிடிப்பதுதான் உத்தமம்.

கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம். *I சாமு.15:22*

இயேசுவின் காலத்தில் ஆலயத்தின் நிலை

1. தேவாலயம் வியாபார ஸ்தலமாக மாறியது.
2. கள்ளர்கள் மறைந்திருக்கிற குகையாக மாறியது.
3. பணம் வட்டிக்குக் கொடுக்கிறவர்கள் இருக்கிற இடமாக மாறியது.
4. கபட பக்தியுள்ள ஆசாரியர்களும், பரிசேயர்களும் இருக்கிற இடமாக மாறியது.
5. வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையைப் போன்ற யூதர்கள் உள்ள இடமாயிற்று.

இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்திலே விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும் புறாவிற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்து, என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார். மத்.21:12,13

இயேசு தேவாலயத்தைவிட்டுப் புறப்பட்டுப் போகையில் அவருடைய சீஷர்கள் தேவாலயத்தினை காண்பிக்க அவரிடம் வந்தபோது "ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடி எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத்.24:1.2). மற்றொரு முறை "தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார்" (மத்.24:6) என்றார். மேலும் ஆலயத்தைக் கட்டினவனாகிய "சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்" (மத்.12:42) என்று கூறினார். இயேசு இவ்வாறெல்லாம் கூறியது இப்போதுள்ள ஆலயம் இடிக்கப்பட்டு அதைவிட பெரிய ஆலயம் ஒன்றை இயேசு கட்டப்போகிறார் என்பதினால்தான். இதை இயேசு பேதுருவிடம் இவ்வாறு முன்னுரைத்தார்.

மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையை கட்டுவேன்: பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத்.16:18) என்றார்.

சாலோமோனும் இயேசுவும்

1. சாலொமோன் வெள்ளியினாலும், பொன்னினாலும் எருசலேம் தேவாலயத்தைக் கட்டினான். இயேசுவோ தன்னுடைய சொந்த ரத்தத்தால் சபையைச் சம்பாதித்தார்.
2. சாலொமோன் பலருடைய உதவியோடு தேவாலயத்தைக் கட்டினான். இயேசு தானாகவே சிலுவை சுமந்து, சபையை ஸ்தாபித்தார்.
3. சாலொமோனின் ஆலயம் உயிரற்ற பொருட்களால் ஆனது. இயேசுவின் ஆலயம் உயிருள்ள மனிதர்களால் ஆனது (II கொரி.6:16)
4. சாலொமோனின் ஆலயத்தில் ஆசரிப்புக் கூடாரம் வைக்கப்பட்டிருந்தது. இயேசுவின் ஆலயத்தில் ஆசரிப்புக்கூடாரம் மனிதர்களின் இருதயமே.

5. சாலொமோனின் ஆலயத்தில் பெட்டியின் உள்ளே நியாயபிரமாண பலகை வைக்கப்பட்டிருந்தது. இயேசுவின் ஆலயமாகிய மனிதனின் இருதயத்தில் பிரமாணம் எழுதப்பட்டிருக்கிறது (II கொரி.3:3).

6. சாலொமோன் ஆலயத்தைக் கட்டிவிட்டு பின்வாங்கினான். கர்த்தருடைய ஆவியானவரோ சபையை இன்றும் கட்டிக்கொண்டிருக்கிறார் (எபே.3:20-22).

7. சாலொமோனின் ஆலயம் அசுத்தமாக்கப்பட்டது. இயேசுவின் ஆலயமோ பரிசுத்தமானது (I கொரி.3:17).

8. பழைய உடன்படிக்கை நியாயபிரமாணம். இயேசுவின் புதிய உடன்படிக்கை அவருடைய இரத்தம் (லூக்.22:20).

9. சாலொமோன் ஆலயம் கட்டுவதற்கான பொருட்களை சில தேசங்களிலிருந்து சேர்த்தான். இயேசு ஆலயம் கட்டவேண்டிய கற்களை உலகம் முழுவதிலுமிருந்து சேகரிக்கிறார்.

10. சாலொமோனின் ஆலயம் கட்டுவதற்கு தாவீதின் முன்னறிக்கையுண்டு. இயேசுவின் ஆலயம் கட்டப்படுவதும் தேவனுடைய முன்குறிப்பின்படியே (ரோமர் 8:29,30).

எருசலேம் தேவாலயத்தின் அழிவு

இயேசுவின் சிலுவை மரணத்திற்கு பிறகு கி.பி.70-ல் தீத்தோஸ் கைசருடைய தலைமையில் இஸ்ரவேலில் வந்த இராணுவம் தேவாலயத்தை இடித்துத் தகர்த்துப்போட்டது. அவர்கள் ஆலயத்தினுள் இருந்த சகல பொருட்களையும் கொள்ளையடித்தார்கள். ஆலயத்தின் தரைக்குக் கீழ் பொன் இருப்பதாக நினைத்துப் பெரிய கலப்பையைக் கொண்டு யானைகளால் உழுது ஆலயத்தை அழித்தார்கள். சீயோன் வயல்வெளியாக உழப்படும் என்று கர்த்தர் மீகா தீர்க்கதரிசிக்கு உரைத்த தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

ஆகையால் உங்கள் நிமித்தம் சீயோன் வயல்வெளியைப் போல உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப்போம், ஆலயத்தின் பர்வதம் காட்டுமேடுகளாய்போம். *மீகா.3:12*

தீத்தோஸ் இலட்சக்கணக்கான யூதர்களைக் கொன்று குவித்தான். யூதர்களின் இரத்தம் குதிரையின் கடிவாளம் வரை எட்டக்கூடிய அளவிற்கு ஆறாகப் பாய்ந்தது. இயேசுவின் இரத்தப்பழி எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகளின் மேலும் வரட்டும் என்று சொன்ன யூதர்கள் (மத்.27:25), அவர்கள் சொன்னபடியே அனுபவிக்க வேண்டியதாயிற்று. மேலும் அவர்கள் எருசலேமைவிட்டுத் துரத்தப்பட்டார்கள். உலகம் எங்கும் சிதறடிக்கப்பட்டார்கள். இப்படி எருசலேம் என்ற இடமே இல்லாமற்போனது. முதலாம் உலகப்போரின் காலத்தில் ஹிட்லர் இலட்சக்கணக்கான யூதர்களைக் கொன்று குவித்தான். யூதர்கள் சொந்த தேசமின்றி சகலத்தையும் இழந்தவர்களாக அந்நிய தேசத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

⑩

இன்றைய ஆலயமும் ஆராதனையும்

இயேசு தமது புதிய ஆலயத்தில் சேர்க்க வேண்டியவர்களாகிய ஜனங்களை முன்னறிந்து, முன்குறித்து, அழைத்து, நீதிமான்களாக்கி, மகிமைப்படுத்தி சேர்த்து வருகிறார்.

தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார், எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்திருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார். ரோமர் 8:29,30

1. முன்னறிந்திருக்கிறார்

ஆதாமின் பாவத்தினாலே சகல மனுஷரும் தேவனைவிட்டு விலகினார்கள். ஆனால் கர்த்தர் அனைவரையும் இரட்சிக்கும்படி தம்முடைய ஒரே குமாரன் இயேசுவை இந்த உலகத்திற்கு தந்தருளினார். இந்த இயேசுவின் சிலுவை மரணத்தினால் பாவத்திலிருந்து விடுதலை பெற்றுக்கொள்ளப்போகிற ஜனங்களைக் கர்த்தர் முன்னமே அறிந்திருந்தார். அதைக்குறித்து ஏசாயா தீர்க்கதரிசி, அவர் தமது சந்ததியைக்கண்டு நீடித்த நாளாயிருப்பார் என்று கூறியிருக்கிறார். இயேசு சிலுவையில் வைத்து, தான் கட்டப்போகிற சபையின் விசுவாசிகளாகிய கற்களைக் கண்டார். அவை உலகமெங்கும் உண்டு.

2. முன்குறித்திருக்கிறார்

தேவசபையின் கற்களாய் இயேசு சிலுவையில் வைத்து கண்டவர்களை குறித்து வைத்திருக்கிறார். எவ்விதமான பணிகளைச் செய்ய வேண்டிய கற்கள் என்பதையும் அவர் குறித்திருக்கிறார்.

உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காக சந்தோஷப்படுங்கள்.

லூக்.10:26

3. அழைத்திருக்கிறார்

இந்த அழைப்பினை கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்கள் மூலமாக நிறைவேற்றி வருகிறார். அவர்கள் பூலோகம் முழுவதும் சுற்றித்திரிந்து, கர்த்தரால் முன்குறிக்கப்பட்டவர்களை அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதி சபையில் ஜனங்களின் நடுவே நின்று பேதுரு பேசினபோது 3000 பேர் இயேசுவிடம் சேர்ந்தார்கள். இன்னும் கர்த்தர் தமக்கென்று பக்தியுள்ளவர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்.

பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொண்டாரென்று அறியுங்கள்.

சங்.4:3

பிரசங்கங்களிலும், ஆராதனைகளிலும் இந்த அழைப்பு இன்றும் தொனித்துக் கொண்டுதான் இருக்கிறது. அழைப்பை ஏற்றுக்கொண்டு, கர்த்தராகிய இயேசுவை வாயினால் அறிக்கையிட்டு இயேசு உயிரோடு எழுந்தார் என்று விசுவாசிக்கிறவர்கள் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

4. நீதிமான்களாக்கியிருக்கிறார்

இயேசுவைக் குறித்த அறிவினாலும் (ஏசா 53:11) இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளாலும் நிறைந்தவர்களாகி (பிலி. 1:10) அவரால் நீதிமான்களாய் மாற்றப்பட்டவர்களே நீதிமான்கள் என்று சொல்லப்படுகிறார்கள். தேவனுடைய பிள்ளைகள் நிறைவேற்ற வேண்டிய நீதிகளில் ஒன்றாகிய தண்ணீரில் இறங்கி ஞானஸ்நானம் எடுப்பது என்பதை இயேசு குறிப்பிட்டார். யோவானிடம் ஞானஸ்நானம் எடுக்கும்படி தன்னிடம் வந்த இயேசுவை யோவான்ஸ்நானன் தடை

செய்தபோது இயேசு அவனைப்பார்த்து. இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்று இயேசு கூறினார் (மத்.3:15). ஆகவே தேவனால் அழைக்கப்பட்டு சபையில் கட்டப்படக்கூடிய விசுவாசிகளாகிய கற்கள் இயேசு நிறைவேற்றின நீதியாகிய ஞானஸ்நானம் எடுக்க வேண்டியது அவசியம். லூக் 18:13,14-ல் தன்னைத் தாழ்த்தி பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்று கெஞ்சின ஆயக்காரனை நீதிமானாக்கியவர் அவருடைய கிருபையை பெற்றுக்கொண்டவர்களாகிய நம்மையும் நீதிமான்களாக்கிவிட்டார்.

5. மகிமைப்படுத்தியிருக்கிறார்

நம்மை மகிமைப்படுத்துகிறவர் கர்த்தர். இது பரிசுத்த ஆவியானவரால் நமக்கு ஏற்படுகிற மகிமையே. கர்த்தராகிய இயேசுவும் பரிசுத்த ஆவியினாலே மகிமையடைந்திருந்தார். ஆகவேதான் அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும், வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம் (II பேதுரு 1:16) என்று பேதுரு கூறினார்.

இவ்விதமான ஒரு விசுவாசியே இயேசு 2000 வருடங்களாக கட்டிக்கொண்டிருக்கிற சபையில் இணைக்கப்படுகிற ஒரு கல்லாக இருப்பார். மேற்கூறின தகுதிகளை அடையாத கற்கள் புறம்பே தள்ளப்பட்டுப் போகும். அவைகளை சாத்தான் எடுத்துக்கொண்டுபோய் தன்னுடைய கூட்டத்தாரோடிணைத்துக் கொள்ளுவான். சபையில் இணைத்து கட்டப்பட்டவர்களையோ முத்திரை பதித்த கற்களாய் மாற்றி கர்த்தருக்கு பயப்படும் பயத்தை அவர்களுடைய இருதயத்திலே வைத்து (எரே.32:40), பிரமாணங்களை இருதயத்திலே எழுதுவார். சாலொமோன் கட்டின ஆலயத்தைவிட கிறிஸ்துவின் ஆலயம் பெரிதாயிருக்கும்.

முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும் இந்த பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்.

ஆகாய் 2:9

இயேசுவின் புதிய ஆலயத்தைக் குறித்த எசேக்கியேலின் தீர்க்கதரிசனம் எசேக்கியேல் 36:24-28

1. உங்களைப் புறஜாதிகளிடத்திலிருந்து அழைப்பேன் - இரட்சிப்பு
2. சுத்தமான ஜலம் தெளிப்பேன் - ஞானஸ்நானம்
3. உங்களை சுத்தமாக்குவேன் - பாவ மன்னிப்பு
4. உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிடுவேன் - பரிசுத்த ஆவியின் அபிஷேகம்
5. தேசத்தில் குடியிருக்கச் செய்வேன் - தேவசபையில் சேர்க்கப்படுதல்

நீங்கள் தேவனுடைய ஆலயம்

இந்த வசனம் மனுஷன் தேவனுடைய ஆலயம் என்று ஒருமையாகக் கூறவில்லை. ஒவ்வொரு மனிதர்களும் தேவன் கட்டுகிற ஆலயத்தின் கற்களாக இருக்கிறோம் என்பதையே இது உணர்த்துகிறது.

சாலொமோனின் எருசலேம் தேவாலயம் வெட்டியெடுத்த இடத்தில் வைத்து சுத்திகரித்து பணிதீர்த்து கொண்டுவரப்பட்ட கற்களாலே கட்டப்பட்டது. ஆகையால் அது கட்டப்படுகிறபோது, சுத்திகள், வாச்சிகள் முதலான எந்த இரும்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை (I இராஜா 6:7). இதைப்போலவே தேவசபையைக் கட்டுவதற்கான கற்களாகிய விசுவாசிகளும் இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டவர்களாகவும், இருதயத்தில் 'அன்பு' என்ற இயேசுவின் புதிய கற்பனையாகிய நியாயபிரமாணத்தை உடையவர்களாகவும் இருக்க வேண்டும். மூலைக்கல்லாகிய இயேசுவில், அப்போஸ்தலர்களின் உபதேசமாகிய சிமெண்டினால் இணைத்துக் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஒரு கல் தனியாக இருந்தால் அதனை கல் என்பார்கள். ஆனால் அனேக கற்களுடன் இணைத்துக் கட்டப்படும்போது தான் அது கட்டிடம்.

மதில் என்று சொல்லப்படுகிறது. ஒரு கிறிஸ்தவன் தனித்திருந்தால் அது கர்த்தருடைய ஆலயம் ஆகாது. அப்போஸ்தலர்களின் உபதேசத்தினால் இணைத்துக் கட்டப்படும்போது தேவனுடைய ஆலயமாகின்றது. இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும், தேவசபையில் இணைந்து இருக்க வேண்டும். அப்போதுதான் ஆவியானவரின் கிரியை நடக்கும்.

பெந்தேகோஸ்தே நாளில் இறங்கின பரிசுத்த ஆவியானவர் கர்த்தருடைய சபையாம் மாளிகையைக் கட்டத் தொடங்கினார். அது உலகமெங்குமுள்ள விசுவாசிகளால் இப்போதும் கட்டப்படுகிறது. கர்த்தராகிய இயேசுவின் வருகையுடன் இந்த மாளிகையின் வேலை முடிந்துவிடும். அப்போது வேலை முடிவடைந்த சபையை ஆவியானவர் இயேசுவிடம் ஒப்படைப்பார். கர்த்தர் தாம் சம்பாதித்த சபையை தம்முடன் சேர்த்துக்கொள்ள பரலோகத்திலிருந்து இறங்கி மேகங்களில் வருவார் (I தெச.4:16,17). பூமியிலிருக்கிற சபையை பரலோகத்தில் ஸ்தாபிப்பதற்கு கர்த்தர் ஓர் இடத்தை ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கிறார்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன். யோவான் 14:3

பரலோகத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட தேவ சபையை யோவான் பரிசுத்த ஆவியில் தரிசித்து இவ்விதமாய் எழுதினான்.

அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின்பெட்டி காணப்பட்டது, அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின. வெளி.11:19

தேவசபை தேவனோடுகூட சேர்ந்து இருக்கும் என்பதுதான் இதன் பொருள். இதுவரையிலும் தேவசபையாகிய மாளிகையின் கற்களாக நீங்கள் மாறாவிட்டால், இன்றே மனந்திரும்பி

ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம்பெற்று தேவசபையில் ஒரு அங்கமாய் மாறி அப்போஸ்தல உபதேசத்தில் வளர உங்களை அர்ப்பணித்துவிடுங்கள். கர்த்தருடைய வருகையில் சபையோடுகூட எடுத்துக்கொள்ளப்பட்டு, இயேசுவோடுகூட நித்தியகாலமாய் வாழ ஆயத்தமாகுங்கள்.

இதோ நான் சீக்கிரமாய் வருகிறேன். வெளி.22:12

எவற்றை ஆராதிக்கக் கூடாது?

ஆராதனையில் பல தவறுகள் இன்று மிகுந்து காணப்படுகின்றன. ஜனங்கள் வசனம் சொல்லுகிறபடி செய்யாமல் தங்களுக்குத் தோன்றினபடி ஆராதனை செய்கிறார்கள். சத்தியத்தை உணர்ந்து வசனத்தின் பாதையில் நடக்க வேண்டும். யாரை ஆராதிக்க வேண்டும்? யாரை ஆராதிக்கக்கூடாது? என்பதை திருவசனத்தின் அடிப்படையில் நிதானித்து அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

1. விக்கிரகத்தை ஆராதிக்கக்கூடாது

யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம். யாத்.20:4,5

ஆண் உரு, பெண் உரு, பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தின் உரு, ஆகாயத்தில் பறக்கிற செட்டையுள்ள யாதொரு பட்சியின் உரு, பூமியிலுள்ள யாதொரு ஊரும் பிராணியின் உரு மற்றும் பூமியின் கீழ் தண்ணீரிலுள்ள யாதொரு மச்சத்தின் உருவுமாயிருக்கிற இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தை உண்டாக்காதிருக்க வேண்டும் (உபா.4:16) என்று வேதம் எச்சரிக்கிறது. தேவன் ஆவியாயிருக்கிறார். ஆவிக்கு ரூபமில்லை. ரூபமில்லாத ஆண்டவருக்கு கற்பனையாக ரூபத்தைக் கொடுத்து இவைகள்தான் தெய்வம் என்று சொல்லி வணங்குவது தான் விக்கிரக ஆராதனை. தேவனை அறியாத ஜனங்கள் பலவிதமான உருவங்களை உண்டாக்கி அவைகளுக்குப் பெயரிட்டு

தெய்வம் என்று சொல்லி வணங்குவதுபோல தேவபிள்ளைகளும் தேவனுக்கு ஒரு ரூபத்தை உண்டாக்குவது பெரிய பாவமாக மாறும்.

இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்திய மோசே தேவனிடமிருந்து இறங்கிவர தாமதித்தபோது, ஆரோன் இஸ்ரவேலின் தேவனுக்கு ஒரு ரூபத்தைக் கொடுத்து, ஜனங்களை ஆராதிக்கச்செய்தான். அவன் இஸ்ரவேலின் தேவனுக்கு மனிதரூபத்தைக்கூட கொடுக்காமல் ஒரு மிருகத்தின் ரூபத்தைக் கொடுத்தான். இஸ்ரவேல் தேசத்தின் ராஜா யெரொபெயாமும் இரண்டு கன்றுக்குட்டிகளை உண்டாக்கி, இதுதான் இஸ்ரவேலின் தேவன் என்று சொல்லி ஜனங்களை ஆராதிக்கச் செய்தான் (I இராஜா 12:28-30). கர்த்தரின் பார்வையில் அது பாவமாக எண்ணப்பட்டது. தேவனை ஆராதிக்கிறவர்களும், ஜெபிக்கிறவர்களும் மனுஷரால் உண்டாக்கப்பட்ட எந்த ஒரு ரூபத்தையும் முன்னால் வைத்துக்கொண்டு கர்த்தரை ஆராதிக்கவோ, ஜெபிக்கவோ கூடாது. அப்படி செய்தால், ஆசீர்வாதத்திற்குப் பதிலாக தேவனுடைய கோபமே கிடைக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது. நமது கர்த்தர் மகாபெரிய தெய்வம். அவர் மனிதனுடைய கைவிரலினால் வனையப்படுகிறவர் அல்ல.

2. சிருஷ்டியை வணங்கக்கூடாது

தேவனுடைய சிருஷ்டியான வானம், பூமி, மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் இவைகளை வணங்கக்கூடாது. கண்களை வானத்துக்கு நேராக ஏறெடுத்து, சூரிய சந்திர நட்சத்திரங்களையும் வணங்கக்கூடாது (உபா.4:18,19).

3. பரிசுத்தவான்களுக்கு ஆராதனை செய்யக்கூடாது

உயிரோடிருக்கிற மனிதர்களையோ அல்லது இறந்துபோன மனிதர்களையோ பரிசுத்தவான்களாக்கி ஆராதிப்பது தவறு. மனிதர்களாகிய நமக்கும் தேவனுக்கும் மத்தியஸ்தராக நிற்கும் அதிகாரம் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. தேவனுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தர் இயேசு ஒருவர் மட்டுமே.

தேவன் ஒருவரே. தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே : இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது. I தீமோ.2:5,6

செசரியா பட்டணத்தில் பேதுரு கொர்நேலியுவின் வீட்டிற்குச் சென்றபோது அவன் பேதுருவின் பாதத்தில் விழுந்து பணிந்துகொண்டான். அப்பொழுது பேதுரு அவனைத் தூக்கியெடுத்து எழுந்திரும், நானும் ஒரு மனுஷன்தான் என்றான் (அப்.10:26). ஆனால் இன்று பேதுருவின் ரூபத்தை உண்டாக்கி ஆராதனை செய்கிறவர்கள் இருக்கிறார்கள். பேதுரு உயிரோடிருக்கையிலே அவன் தன்னைப் பணிந்துகொள்ள அனுமதிக்கவில்லை. ஆனால் இதையறியாது ஒரு கூட்டம் ஜனங்கள் இறந்துபோன பேதுருவை நம்பி ஆராதனை செய்கின்றனர்.

அப்போஸ்தலனாகிய பவுல் லீஸ்திராவுக்கு பர்னபாவுடன் சென்றிருக்கையில் தாயின் கர்ப்பத்திலிருந்து முடவனாகிய ஒரு மனுஷனைக் கண்டு சுகப்படுத்தியதை பெரிய அற்புதமாகக் கருதி, லீஸ்திராவின் ஜனங்கள் பூமாலைகளைக் கொண்டுவந்து அவர்களுக்குப்போட்டு, தேவர்கள் என்றுசொல்லி பலியிட ஆயத்தமானார்கள். இதைக்கண்ட பவுலும், பர்னபாவும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு கூட்டத்துக்குள்ளே ஓடி உரத்தசத்தமாய், மனுஷரே ஏன் இப்படி செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்தானே, நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம் (அப்.14:15) என்று கூறினார்கள். அவர்களும் உயிரோடிருக்கையிலே இவ்வாறு தங்களை தொழுதுகொள்ளுவதை எதிர்த்திருக்கையில் அவர்களை அவர்கள் மரித்தபிறகு புனிதர்களாக்கி, அவர்கள் பெயர்களில் ஆலயங்களைக் கட்டி தொழுதுகொள்வதும், அவர்கள் உருவங்களை உண்டாக்கி, எடுத்து செல்வதும் தேவ வசனத்திற்குப் புறம்பானதும், பிரயோஜனமற்றதும்

ஆகும். அப்போஸ்தலர்களுடைய பெயரைக்கொண்ட அனேக நிறுவனங்கள் உள்ளன. அது தவறல்ல. ஆனால் அவர்களை ஆராதிப்பது தவறு.

4. மரியாளை ஆராதிக்கக்கூடாது

கன்னிமரியாள் பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரித்து முதற்பேறான குமாரனாகிய இயேசுவைப் பெற்றெடுத்தாள் (லூக்கா 2:7). அவளுக்கு அதன்பிறகு மீண்டும் பிள்ளைகள் உண்டு. ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கைக் குறித்து தேவன் உன் ஏகசுதன் என்று ஆபிரகாமிடம் சொல்லும்போது, அவனுக்கு வேறு குமாரன் இருந்தான். மறுபடியும் அவனுக்கு ஆறு குமாரர்கள் பிறந்தார்கள். ஆனால் ஈசாக்கு தேவனுடைய வாக்கின்படி, ஆபிரகாமுக்குப் பிறந்த முதற்பேறான குமாரனாய் இருந்தான். இதைப்போலவே கன்னிமரியாளின் முதற்பேறான இயேசு பரலோகத்தின் பிள்ளை. இந்த பிள்ளை பிறக்கிறது வரை அவளுடைய புருஷனாகிய யோசேப்பு அவளை அறியாதிருந்தான் (மத்.1:25). அதன்பிறகு கணவனும் மனைவியுமாய் குடும்பமாய் வாழ்ந்த அவர்களுக்கு மீண்டும் நான்கு ஆண் பிள்ளைகளும், ஒன்றிற்கு அதிகமான பெண்பிள்ளைகளும் பிறந்தன. தன் சொந்த ஊரில் அவருடைய பெற்றோர்களும், சகோதர சகோதரிகளும் ஆராதிக்கச் சென்ற ஆலயத்தில் இயேசு பிரசங்கம் செய்தபோது கேட்டுக்கொண்டிருந்தவர்கள் இயேசுவின் சகோதர சகோதரிகளைக் குறித்து பேசினதை நாம் அறிந்திருக்கிறோம். இயேசுவின் சகோதரர்களில் யாக்கோபும், யூதாவும் வேதாகமத்தில் நிருபங்கள் எழுதியுள்ளார்கள். இந்த யாக்கோபு பிற்காலத்தில் எருசலேம் சபைக்குத் தலைவனாக மாறிவிட்டான்.

இயேசுவின் சிலுவை மரணத்திற்குப் பிறகு சீஷர்கள் பரிசுத்த ஆவிக்காகக் காத்திருந்த கூட்டத்தில் சீஷர்களுடன் இயேசுவின் தாயாகிய மரியாளும், இரண்டு பிள்ளைகளும் இருந்தார்கள்.

அங்கே இவர்களெல்லாரும் ஸ்திரீகளோடும், இயேசுவின் தாயாகிய மரியாளோடும் அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்.

அப்.1:14

பரிசுத்த ஆவி முதன்முதலாக இறங்கினபோது கூடியிருந்த 120 பேர்களில் இயேசுவின் தாயும், இரண்டு சகோதரர்களும் இருந்தார்கள். ஆதிசபை விசுவாசிகளின் முதல் *batch*-ல் மரியாளும் இருந்தாள். கன்னிமரியாளை நித்தியகன்னிகை என்று சொல்லுவது வசனத்தின்படி சரியல்ல. இயேசு பிறக்கும்வரை கன்னிகையாயிருந்த அவள் பிறகு ஒரு குடும்பத்தின் பக்தியுள்ள தாயும், ஒரு உத்தம விசுவாசியுமாக இருந்தாள். தேவதூதனால் ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளென்று வாழ்த்தப் பட்டவளும், ஜெபத்தில் ஆதிசபையோடு இணைந்திருந்த ஒரு விசுவாசியுமாக மதிக்கப்படுகிற ஒருவராயிருப்பினும், மரியாளை ஆராதிக்க வேதத்தில் எந்த அனுமதியுமில்லை.

5. மரித்தவர்களிடம் வேண்டுதல் செய்யக்கூடாது

நாம் ஒருவர் மற்றொருவருக்காக வேண்டுதல் செய்கிறோம். வேதமும் இதனை உற்சாகப்படுத்துகிறது. ஆனால் மரித்தவர்களிடம் வேண்டுதல் செய்யும்படி கேட்பது வேதவசனம் அனுமதிக்காத காரியம். மரித்தவர்களும், மவுனத்தில் இறங்குகிறவர்களும் கர்த்தரைத் துதியார்கள் என்றே வேதம் கூறுகிறது. மரித்துப்போன பரிசுத்தவான்களிடம் தங்களுக்காக ஜெபம் செய்யும்படி சிலர் வேண்டுதல் செய்கின்றார்கள். இதற்கான எந்த ஆதாரமும் வேதத்தில் இல்லை. பரிசுத்தவான்களுடைய ஆத்துமா தேவனுடைய பரதீசில் இளைப்பாறிக் கொண்டிருக்கிறது. மரித்த பரிசுத்தவான்களுடைய ஆத்துமா அங்கே கிறிஸ்துவில் மறைந்திருக்கிறது.

ஏனென்றால் நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. கொலோ.3:3

இயேசுவின் வருகைமட்டும் அவர்கள் ஆத்துமா இளைப்பாறிக் கொண்டிருக்கும். கர்த்தருடைய வருகையில் அவர்கள் மகிமையில் வெளிப்படுவார்கள். அதுவரையிலும் பூமியிலிருந்து அவர்களுடைய பெயர்களைச் சொல்லிக் கூப்பிட்டு எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்று எத்தனைமுறை கூப்பிட்டாலும் அவர்கள்

கேட்பதுமில்லை. பதில் தருவதுமில்லை. ஆனால் அவர்களுடைய பெயர்களை எடுத்துக்கொண்டு நான் அவர்தான் என்று சொல்லி, மனிதர்களை சாத்தான் ஏமாற்றுவான். சில அற்புதங்களைக்கூட செய்வான். ஆனால் மரித்த பரிசுத்தவான்கள் இதை அறிவதே இல்லை.

அது ஆச்சரியமல்ல. சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. II கொரி.11:14

பாதாளத்தில் வேதனை அனுபவித்துக்கொண்டிருந்த ஐசுவரியவானுக்கும், லாசருவுக்கும் நடுவே கடந்துபோகக்கூடாத பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்று லூக்கா 16:26 கூறுகிறது. ஆனபடியால் மரித்துபோன பரிசுத்தவான்களோடு எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்று சொல்லி வீண் ஆராதனை செய்யாமல், மரித்து உயிர்த்து இன்றும் ஜீவிக்கிற இயேசுவை நோக்கி கூப்பிடுங்கள். அவரே உங்களைக் காண்கிறவர். உங்கள் கூக்குரலை அவர் கேட்பார். பதில் தருவார்.

ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். எபி.4:16

மேலும் தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். எபி.7:25

6. தூதர்களை ஆராதிக்கக்கூடாது

தேவதூதர்களைக் கர்த்தர் சில சந்தர்ப்பங்களில் அனுப்பி தேவனுடைய பிள்ளைகளுக்கு உதவி செய்ததை நாம் வேதாகமத்தில் பார்க்கிறோம். அவர்களை ஆராதிக்கவோ, வணங்கவோ வேதம் சொல்லவில்லை. வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதிய யோவானுக்கு பத்மூ தீவில் வைத்து ஒரு தூதன் வெளிப்பட்டபோது, அவன் அந்த தூதனை வணங்கினான். அப்போது அந்த தூதன் அவனிடம் இப்படிச் செய்யாதபடிக்குப்பார்;

உன்னோடும் இயேசுவைக் குறித்துச் சாட்சியிட்ட உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன். தேவனைத் தொழுதுகொள் (வெளி.19:10) என்றான்.

யாரை ஆராதிக்க வேண்டும்?

தேவனை ஆராதிக்க வேண்டும். கர்த்தர் மோசேயை அழைத்து பார்வோனிடம் போய், எனக்கு ஆராதனை செய்ய என் ஜனங்களைப் போகவிடு (யாத்.9:1) என்று கூறச் சொன்னார். மோசேக்குக் கர்த்தர் நியாயபிரமாணம் கொடுக்கும்போது, என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் என்று கூறினார் (யாத்.20:3). ஆகவே ஏக தெய்வமாகிய தேவனை இயேசுவின் நாமத்தில் தொழுதுகொள்ள வேண்டும். ஒரு விசுவாசியின் சகல ஜெபங்களும், துதி ஆராதனைகளும் இயேசு மூலமாகவே பிதாவிடம் செல்ல வேண்டும். இயேசுவே என்று கூப்பிட்டு ஜெபிப்பதும் தவறல்ல. ஏனெனில் இயேசுவில் பிதாவாகிய தேவன் உண்டு. பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று கேட்ட பிலிப்புவிடம் இயேசு, என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் (யோவான் 14:9) என்று கூறினார்.

பிதாவாகிய தேவனில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய மூன்று அம்சங்களும் ஒன்றிணைந்துள்ளது. இம்மூன்று அம்சங்களில் ஒன்றைமட்டும் தனியாகக் கூறி வணங்குவதை வசனம் அனுமதிக்கவில்லை. திரித்துவ தேவனின் மூன்று நிலைகளையும் விசுவாசியாதவர்களின் ஆராதனையை பரலோகம் அங்கீகரிப்பதில்லை.

இயேசுவை கிறிஸ்து அல்ல என்ற மறுதலிக்கிறவனே யல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து. குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடையவனல்ல. குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான். I யோவான் 2:22,23

மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள்

கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே. அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது. I யோவான் 4:3

கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும், குமாரனையும் உடையவன். II யோவான் 9

மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த இயேசு தம்முடைய சீஷர்களுக்கு வெளிப்பட்டு நீங்கள் புறப்பட்டுபோய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் (மத்.28:19,20) என்றார்.

எங்கே ஆராதிக்க வேண்டும்?

இயேசுவும், சமாரியா ஸ்திரீயும் பேசினபோது அவள், எங்கள் பிதாக்கள் இந்த மலையில் தொழுதுகொண்டு வந்தார்கள், நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ள வேண்டும் என்கிறீர்களே என்று கேட்டபோது இயேசு கூறின பதில் கவனிக்கத்தக்கது.

அதற்கு இயேசு : ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு. நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் வருகிறது. யோவான் 4:21

இவ்வசனத்தில் இயேசு 'எங்கும்' என்று கூறியிருப்பது கர்த்தரை ஆராதிப்பதற்கு ஒரு குறிப்பான இடம் எதையும் கட்டாயப்படுத்தாததையே காட்டுகிறது. இரண்டோ மூன்றோ பேர் இயேசுவின் நாமத்தில் கூடிவருகிற இடங்களிலெல்லாம் இயேசு அவர்கள் நடுவில் வருகிறார். கட்டப்பட்டுள்ள பெரியபெரிய ஆலயங்களில் மட்டுமல்ல, தேவனை ஆராதிக்கிற எந்த சிறிய குடிசையிலும்கூட தேவன் இறங்கி வருவார். புதிய ஏற்பாட்டு

விசுவாசிகளுக்கு குறிப்பான எந்த ஆராதனை ஸ்தலமும் வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் விசுவாசிகள் ஒன்றாகக்கூடின இடங்கள் சபை என்று அழைக்கப்பட்டுள்ளது. உலகத்தையும், அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும், பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை (அப். 17:24). ஆராதனை ஸ்தலத்தைக் கர்த்தர் கவனியாமல் ஆராதிக்கிறவர்களின் பரிசுத்தத்தைக் கர்த்தர் பார்க்கிறவர். பெருந்திரளானவர்கள் மத்தியில் மட்டுமல்லாமல் இரண்டுமூன்று பேர் இயேசுவின் நாமத்தில் கூடிவருகிற இடத்திலும் அவர் இறங்கி வருகிறவர்.எம்மாவூருக்குப்போன இரண்டு சீஷர்களிடம் வந்தவர் பத்மூ தீவில் தனிமையாயிருந்த யோவானிடமும் அங்கே வந்தார். பெரிய கட்டிடத்திலும், சிறிய கூடாரத்திலும், மரத்தின் நிழலிலும், வெட்டாந்தரையிலும், கடற்கரையிலும், எவ்விடத்திலும் இயேசு இறங்கி வருவார். இயேசு எதிர்பார்க்கிறதெல்லாம் பரிசுத்தமான ஜனங்களாய் அவரை ஆராதிக்கிற இடங்களையே.

எப்படி ஆராதிக்க வேண்டும்?

உண்மையாய் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். யோவான் 4:23

தேவன் பரிசுத்தர். ஆகையால் அவருக்கு முன்பாக மன உண்மையாய் பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்ய வேண்டும். மட்டுமல்ல பரிசுத்த ஆவியின் துணையோடும் ஆராதிக்கிறவர்களாய் இருந்தால் மட்டுமே, அவருக்கு உகந்த ஆராதனையை செய்கிறவர்களாய் நாம் இருக்க முடியும்.

பரிசுத்த ஆவியானவர்

இயேசு கட்டுகிற புதிய சபையின் ஆரம்பமே பரிசுத்த ஆவியானவர் தான். அப்போஸ்தலர்களுடைய எல்லா கிரியைகளும் பரிசுத்த ஆவியானவரை முன்னிட்டே நிற்கின்றன. இயேசு இந்த உலகத்தில் இருந்தபோது சீஷர்களை வழிநடத்தினதுபோல, பரிசுத்த ஆவியானவர், கண்களால் காணமுடியாத ஒரு மனித தன்மையோடு இன்று சபையை நடத்துகிறார். நம் மனித கண்களால் பரிசுத்த ஆவியானவரைக் காணமுடியாவிட்டாலும், அவருடைய கிரியைகளை நாம் காணும்போது அதுவே பரிசுத்த ஆவியானவர் பிரசன்னமாய் இருப்பதை நமக்கு வெளிப்படுத்துகிறது. இயேசு சீஷர்களோடு அன்று வாழ்ந்து வந்தது போல பரிசுத்த ஆவியானவர் நம்மோடு இன்று வாசம் பண்ணிக் கொண்டிருக்கிறார்.

1. இவர் மகத்துவமுள்ளவர் — II கொரி.4:7
2. விசுவாசிகளுடன் இருக்கிறவர் — அப்.19:2
3. சபை எடுத்துக்கொள்ளப்படும்வரை இருப்பவர் — யோவா 14:16
4. ஆவிக்குட்பட்டவர்களாயிருக்க தேவனுடைய ஆவியானவர் தேவை — ரோமர் 8:9
5. அற்புதங்கள் செய்கிறவர் — அப்.6:8
6. பரலோகத்தைக் காணச் செய்கிறவர் — அப்.7:55
7. பலமும், அன்பும், தெளிந்தபுத்தியும் அருளுகிறவர் — II தீமோ.1:7
8. விசுவாசிகளுக்கு முத்திரை போடுகிறவர் — எபே.1:14
9. விடுதலையை உறுதிப்படுத்துகிறவர் — II கொரி.3:17
10. மறுரூபமடையச் செய்கிறவர் — II கொரி.3:18
11. தளர்ந்துபோகும்போது தாங்குகிறவர் — அப்.8:39
12. ஆலோசனை தருபவர் — யோவா 14:26
13. சத்தியத்தில் நடத்துபவர் — யோவா 16:13
14. பாவத்தைக் குறித்துக் கண்டித்து உணர்த்துபவர் — யோவா 16:8
15. நம்மை தடைபண்ணி தமக்குப் பிரியமானபடி நடத்துபவர் — அப்.16:6

பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வது எப்படி?

வேதாகமத்தில் தேவனுடைய ஊழியர்கள் கைகளை வைக்கும்போதும் (அப்.8:17), தேவ வசனத்தைக் கேட்கும் போதும் (அப்.10:44), ஜெபத்துடன் காத்திருந்தபோதும் (லூக்கா 24:49) பரிசுத்த ஆவியானவரை பலர் பெற்றுக்கொண்டதை நாம் வாசிக்க முடிகிறது. பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ளும்படியான தணியாத தாகமும், ஏக்கமும், வாஞ்சையும் பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ள உதவிசெய்யும். தாகமுள்ளவன் மேல் தண்ணீரை ஊற்றுவேன் என்று சொன்னவர் தாகத்தோடு அவருடய பரிசுத்த ஆவியைக் கேட்கிற அவருடைய சந்ததிகளாகிய பிள்ளைகள் மீது நிச்சயமாக பரிசுத்த ஆவியை பொழிந்தருள்வார். அப்பொழுது பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு அந்நிய பாஷைகளில் பேசி தேவனைப் புகழ்ந்து ஆராதிக்க முடியும்.

அப்.10:45,46

அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது பரிசுத்த ஆவி அவர்கள்மேல் வந்தார். அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். *அப்.19:6*

11

திருவிருந்தும் ஞானஸ்நானமும்

திருவிருந்து ஆராதனை இயேசு கிறிஸ்து தம் சரீரத்தை நொறுக்கப்படுவதற்கு ஒப்புக்கொடுத்து தம் இரத்தத்தினால் சம்பாதித்த சபையில் இருக்க வேண்டிய ஒரு ஆராதனை. சபை கூடிவரும்போதெல்லாம் இவ்வாராதனை செய்யப்படாவிட்டாலும் சபையின் ஒழுங்கின்படி கிரமமாக இவ்வாராதனை செய்யப்படவேண்டியது அவசியம். திருவிருந்து ஆராதனையின் ஒரு பாகமல்ல. இது சபை ஆராதனைகளில் எல்லாம் சேர்த்து நடத்தப்பட வேண்டியதுமல்ல. இது ஒரு சிறப்பான ஆராதனை. நீங்கள் கூடிவரும்போதெல்லாம் இதைச் செய்யவேண்டும் என்று கூறாமல், "நீங்கள் இதை பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" (I கொரி.11:25) என்றே இயேசு சொன்னார்.

சபை ஆராதனைக்குக் கூடிவரும்போது செய்கிற காரியங்களை ஒவ்வொன்றாகக் குறிப்பிடுகையில் பரிசுத்த பவுல் திருவிருந்தைக் குறிப்பிடவில்லை. வேதாகமத்தில் வேறு எந்த இடத்திலும் சபைகூடிவருதலில் திருவிருந்தும் சேர்த்து அனுசரிக்கப்பட்டதாகக் கூறப்படவில்லை. தேவனுடைய பிள்ளைகள் சபைக்கு கூடிவருவது கர்த்தரை ஆராதிப்பதற்காகவே.

திருவிருந்து நடத்தப்படுவதற்கு ஒரு தனிகூடிவருதல் அவசியம். வாரத்தின் முதலாம் நாள் பகல்வேளையில் கர்த்தரை ஆராதிக்க வந்தவர்கள் மறுபடியும் திருவிருந்து ஆராதனைக்காக இரவுநேரத்தில் கூடிவந்தது இதனைத் தெளிவாக்குகிறது.

திருவிருந்து நித்தியநியமம்

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு சில நியமங்களையும், சில நித்திய நியமங்களையும் கொடுத்திருந்தார். நியமம் பூமிக்குரியதும், நித்தியநியமம் பரலோகம் வரை அனுசரிக்கப்பட வேண்டியதுமாகும். நியமங்களை மனிதர்கள் மாற்றிக்கொண்டாலும், கர்த்தருடைய நித்தியநியமங்களை மாற்றிக்கொள்வதற்கு பூமியில் ஒருவருக்கும் அதிகாரமில்லை. பஸ்கா இஸ்ரவேல் ஜனம் தலைமுறை தலைமுறையாக ஆசரிக்க வேண்டிய நித்திய நியமம். ஆகவே அவர்கள் தலைமுறை தலைமுறையாக இதை ஆசரித்து வந்தார்கள். இயேசுவின் சீஷர்கள் முன்னமே ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில் பஸ்காவை புசித்தனர். இயேசுவும் சீஷர்களும் ஆசரித்த நிழலான பழைய ஏற்பாட்டின் பஸ்கா இயேசுவின் சிலுவை மரணத்துடன் உண்மையான பஸ்காவாயிற்று.

எகிப்தில் இஸ்ரவேலருக்காக ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவோ அகில உலகின் சகல ஜனங்களுக்காகவும் சிலுவையில் அடிக்கப்பட்டார். முழு உலகின் இரட்சிப்பிற்கும் அவரால் வழியுண்டாயிற்று. இயேசுவே புதிய நியமத்தின் பஸ்கா. இரவிலே எகிப்தில் பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது. இயேசு சிலுவையில் அறையப்பட்டபோதே ஆறாம் மணிமுதல் ஒன்பதாம் மணிநேரம் வரை பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று (மத்.27:45). அதன்பிறகு முதலாவதாக கொரிந்துசபையின் விசுவாசிகள், பவுல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடம் பெற்றுக்கொண்ட முறையின்படியாக திருவிருந்தை ஆசரித்தனர் (I கொரி.11:23). அப்பம் பிட்குதலுக்குமுன் சுத்திகரிப்புக்குள் நடத்தப்படுதல் தேவை. திருவிருந்து கர்த்தருடைய மரணத்தை தியானிக்கிற வேளை ஆகும்.

அபாத்திரமாய் அப்பம் புசிக்கவும் திராட்சரசத்தை குடிக்கவும் கூடாது. தங்களை சோதித்துப் பார்த்து தற்பரிசோதனை செய்தபின்னரே திருவிருந்தில் பங்குகொள்ள வேண்டும். இயேசுவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் எடுத்தவர்களே இதைப் புசிக்க வேண்டும் (I கொரி.11:23-31).

திருவிருந்து நித்தியநியமம் ஆனபடியால் சபை இதற்காக கூடிவந்து அப்பம் பிட்கவேண்டியது அவசியம்.

ஞானஸ்நானம்

ஞானஸ்நானம் தேவ ஆலோசனையாயிருக்கிறபடியினாலும், தேவ நிதீயாயிருக்கிறபடியினாலும் (மத்.3:15), அஸ்திபார உபதேசமாயிருக்கிறபடியினாலும், நல்மனசாட்சியின் உடன்படிக்கையாயிருக்கிறபடியினாலும் (I பேதுரு3:21), பரலோகம் செல்லும் வழியாயிருக்கிறபடியினாலும் (யோவான் 3:5), மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் இணைப்பாயிருக்கிற படியினாலும் (கொலோ.2:12), கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளச் செய்கிறபடியினாலும் (கலா.3:27), பரிசுத்த ஆவியின் வரத்தை பெற்றுக்கொள்ளச் செய்கிறபடியினாலும் (அப்.2:38), இயேசு கிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்படிந்து ஞானஸ்நானம் பெறுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது. அப்போது இயேசுவை நேசகுமாரன் என்றழைத்த தேவன் நேசகுமாரர்களாகவும், நேசகுமாரத்திகளாகவும் நம்மையும் பிரியமாய் கூப்பிடுவார்.

நகையணிவது குறித்த குழப்பம்

ஞானஸ்நானத்தைக் குறித்த பல குழப்பங்கள் இன்றும் ஆவிக்குரிய சபைகளில் நிலவி வருகிறது. நகைகளைப் போட்டுக்கொண்டு ஞானஸ்நானம் பெறலாமா என்பது இன்றைய ஆவிக்குரிய சபைகளில் பெரிய கேள்வியாகவே உள்ளது. நகைபோட்டு ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாதென்று வேதாகமத்தில் எங்கேயும் எழுதப்படவில்லை.

பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி செங்கடலைக்கடந்து வந்தது இஸ்ரவேல் ஜனங்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதற்கு ஒப்பாகக் கருதப்படுகிறது. எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்களென்று Iகொரிந்தியர் 10:2 கூறுகிறது. இவர்கள் காதணிகள் மற்றும் பொன் ஆபரணங்களை

அணிந்திருக்கத்தான் செய்தார்கள். அது மட்டுமின்றி, எகிப்தியரிடம் கேட்டு வாங்கி வந்தவற்றையும்கூட அணிந்திருந்தார்கள் (யாத்.12:35,36).

ஆரோன் உண்டாக்கின கன்றுக்குட்டி, தாங்கள் அணிந்திருந்த ஆபரணங்களிலிருந்து உண்டாக்கப்பட்டபடியால், இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு முன்பாகத் தாங்கள் செய்த தவறை உணர்ந்து, நாங்கள் இனி ஆபரணங்கள் அணிவதில்லை என்று அவர்களாகவே தீர்மானம் பண்ணிக்கொண்டார்கள். இது அவர்கள் எடுத்துக்கொண்ட தீர்மானமேயன்றி கர்த்தர் அவர்களுக்குச் சொல்லிய காரியமல்ல.

இஸ்ரவேல் புத்திரர் ஓரேப் மலையருகே தங்கள் ஆபரணங்களைக் கழற்றிப்போட்டார்கள் (யாத்.33:6). ஆனால் இந்த இடத்தில் கழற்றிப்போட்ட அவர்கள் பிறகு அணியவில்லை என்று நினைக்கமுடியாது. ஆபரணங்கள் அணிவதும், அணியாமலிருப்பதும் ஒவ்வொருவரின் விருப்பமே. ஆனால், ஞானஸ்நானத்திற்கும், நகைகள் போடுவதற்கும் தொடர்பு இல்லை. ஞானஸ்நானம் எடுக்கும்போது அணியவேண்டிய வஸ்திரங்கள் மற்றும் ஆபரணங்கள் இவைகளைக்குறித்து இயேசுவோ, அப்போஸ்தலர்களோ எதுவுமே சொல்லவில்லை.

1. யோவான் முதலாவதாக தங்கள் பாவங்களை விட்டுவிட மனதாய் அவற்றை அறிக்கையிட்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தானேயன்றி ஆபரணங்களை விட்டுவிடுவதைக் குறித்து எதுவுமே அவர்களிடம் சொல்லவில்லை (மத்.2:5,6).
2. பேதுருவின் வார்த்தையை அதாவது தேவனுடைய வசனத்தை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் பேதுருவிடம் ஞானஸ்நானம் பெற்றார்களென்று சொல்லப்பட்டுள்ளதேயன்றி நகைகளை மாற்றியவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்களென்று சொல்லப்படவில்லை (அப்.2:41).
3. சமாரியாவிலுள்ள ஜனங்கள் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் தேவனுடைய ராஜ்யத்துக்கும் ஏற்றவைகளைக்

குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை விசுவாசித்தபோது ஞானஸ்நானம் பெற்றனர் (அப்.8:12).

4. தேவ வசனத்தைப் புரிந்துகொண்டு இயேசுவை முழு இருதயத்தோடும் விசுவாசித்த மந்திரி, பிலிப்புவிடம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான் (அப்.8:38).

5. தேவனுடைய கட்டளையை ஏற்றுக்கொண்ட கொர்நேலியுவும், குடும்பத்தாரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர் (அப்.10:48).

6. தாங்கள் இரட்சிக்கப்படுவதற்கான வழியை பவுலிடம் அறிந்துகொண்ட சிறைச்சாலைக்காரன் குடும்பமாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான் (அப்.16:33).

7. பவுலாக மாறின சவுல் தாமதிக்காமல் தன் பாவங்கள் போகக்கழுவப்படும்படி அனனியாவிடம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான் (அப்.22:16).

8. ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்களுடன் இணைந்து கிறிஸ்புவும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான் (அப்.18:8).

9. பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் இருதயத்தைத் திறந்தருளியபோது லீதியாள் தன் குடும்பத்தோடுகூட ஞானஸ்நானம் பெற்றாள் (அப்.16:14).

10. பரிசுத்த ஆவியைப் பற்றிக் கேள்விப்பட்டபோது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எபேசு பட்டணத்திலுள்ள சபையார் பவுலிடம் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்.19:15).

இவ்விதமாகக் கூறப்பட்டுள்ளதேயன்றி ஞானஸ்நானம் எடுத்தவர்கள் எதைக் கழற்றினார்கள், எதை அணிந்திருந்தார்கள் என்பதைக்குறித்து வேதாகமத்தில் எதுவுமே கூறப்படவில்லை. நகைபோட்டு ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாது என்ற உபதேசம் வசனத்திலோ, வேதசரித்திரத்திலோ இல்லை. இந்த குழப்பம் ஜனங்கள் ஞானஸ்நானம் எடுத்து தேவசபையோடு சேராதபடிக்கு சாத்தான் உபயோகிக்கிற ஒரு தந்திரம். இத்தந்திரத்தினால் ஒரு

பெரும்கூட்டம் மக்களை சுலபமாக சபையோடிணைக்கப்படாதபடி சாத்தான் தடைசெய்து வைத்திருக்கிறான். சில சபைகளின் போதகர்களும் இதை ஒரு முக்கிய உபதேசமாக ஏற்றுக்கொண்டு பரலோக பாதையில் அநேகர் சேர்ந்துவிடாதபடிக்கு மிகக் கவனமாகச் செயல்பட்டு வருகின்றனர்.

தேவஜனங்கள் இந்த உலகத்துக்கு ஒத்தவேஷம் போடக்கூடாது என்பது உண்மையே. சொல்லப்போனால் பெரிய வீடு, விலையுயர்ந்த ஆடம்பரமான பொருட்கள் எல்லாமே ஆபரணங்களைக் காட்டிலும் ஆபத்தானதே. நகைகளை தவிர்த்துப் பழகியவர்கள் உலகில் பயமின்றி வாழலாம். நகைகள் வாழ்க்கையை சிக்கலாக்கி ஆபத்தை இழுத்துவைப்பதும், படுக்கையில் சமாதானத்தோடு கூடிய நித்திரையை அகற்றிப்போடுவதும் உலகில் நாம் கண்கூடாகக் காண்கிற அவலமாகத்தான் உள்ளது. நகைகளை அணிந்து கொள்வது பயத்தைச் சுமந்து செல்வதாகவே உள்ளது. அப்படிப்பட்டதொரு பயத்தை வீட்டில் வைத்திருப்பதும், சுமந்து செல்வதும் நல்லதல்ல.

மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. Iபேதுரு 3: 3,4

தகுதியான வஸ்திரம், நாணம், சாந்தம், அடக்கம், அமைதல், நற்கிரியைகள், தெளிந்த புத்தி, தேவ பக்தி என்கிற அழியாத அலங்கரிப்பே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றதாயிருக்கிறது. இந்த அலங்காரம் இல்லாத வெறும் புறம்பான உயர்ந்த அலங்காரம் வீண். தேவவசனத்தின்படி தங்களை அலங்கரிப்பதே தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு மேன்மை.

எந்த நாமத்தில் ஞானஸ்நானம் பெறுவது?

யோவான் கொடுத்த ஞானஸ்நானத்திற்கும், இயேசுவின் சீஷர்கள் கொடுத்த ஞானஸ்நானத்திற்கும் வித்தியாசம் காட்டுவதற்காக மட்டுமே சில இடங்களில் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று சுருக்கமாக இயேசுவின் பெயரை மட்டும் குறிப்பிட்டு இவ்வாறு வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது.

பேதுருவின் பிரசங்கத்தைக்கேட்ட 3000 பேர் ஞானஸ்நானம் எடுத்தார்கள். ஆனால் எந்த நாமத்தில் பெற்றுக்கொண்டார்கள் என்று குறிப்பிடப்படவில்லை. அதனால் ஒரு நாமமும் சொல்லாமல் ஞானஸ்நானம் கொடுத்தார்கள் என்று நினைப்பது தவறு. அவர்கள் இயேசு சொன்னபடியே பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால்தான் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். இந்த வசனத்தைக் காரணம்காட்டி ஒரு நாமமும் சொல்லாமல் ஞானஸ்நானம் கொடுக்கலாமா? மந்திரிக்கு பிலிப்பு ஞானஸ்நானம் (அப்.8:38) கொடுத்தபோதும், கொரிந்தியர் அநேகருக்கு பவுல் ஞானஸ்நானம் (அப்.18:8) கொடுத்தபோதும், சிறைச்சாலைக் காரனுக்கு பவுல் ஞானஸ்நானம் (அப்.16:33) கொடுத்தபோதும், லீதியாளும் குடும்பமும் பவுலிடம் ஞானஸ்நானம் (அப்.16:15) பெற்றுக்கொண்டபோதும் எந்த நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது என்பதைக்குறித்து வேதாகமத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதற்காக அப்போஸ்தலர்கள் இயேசுவின் வார்த்தைகளை நிராகரித்து ஒரு நாமமும் சொல்லாமல் ஞானஸ்நானம் கொடுத்தார்கள் என்று சொல்ல முடியுமா? அவர்கள் இயேசு சொன்னதுபோலவே திரித்துவத்தின்படிதான் ஞானஸ்நானம் கொடுத்தார்கள்.

சில இடங்களில் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தார்கள் என்று எழுதியிருப்பது யோவான் கொடுத்த ஞானஸ்நானத்திலிருந்து வேறுபடுத்திக்காட்டிச் சுருக்கமாகக் குறிப்பிடுவதற்காக மட்டுமே. ஆனால் இதைமட்டும் பிடித்துக்கொண்டு இயேசுவின் நாமத்தில் மட்டும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வது

மத்தேயு 28:19-ல் இயேசு சொன்ன வார்த்தைக்கு விபரீதமானது. வேதாகமம் கூறும் ஒரே ஞானஸ்நானம் பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் அளிக்கப்படும் ஞானஸ்நானமே.

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். மாற்கு 28: 19-20

திரும்ப ஞானஸ்நானம் பெறலாமா?

பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் வழிதவறிப்போய் மீண்டும் திரும்பி வரும்போது மறுபடியும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி வேதம் கூறவில்லை. ஆனால் விசுவாசமுள்ளவர்களாகும் முன்பு பெறும் குழந்தை ஞானஸ்நானம், தெளிப்பு ஞானஸ்நானம், திரித்துவம் கூறப்படாமல் இயேசுவின் நாமத்தில் மட்டும் பெற்ற ஞானஸ்நானம் ஆகியவை இயேசு கூறின ஞானஸ்நானத்திற்கு முரண்பட்டவையாயிருப்பதால் இப்படிப்பட்ட ஞானஸ்நானம் பெற்றவர்கள் உண்மையான ஞானஸ்நானத்தை மறுபடியும் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் யோவான் கொடுத்த திரித்துவமில்லாத ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் மற்றும் பரிசுத்த ஆவியினைக் குறிப்பிட்டு ஞானஸ்நானம் பெறாததால் பரிசுத்த ஆவியைக் குறித்துக் கேள்விப்படாத எபேசு சபையின் மனிதருக்கு பவுல் மீண்டும் சரியான ஸ்நானத்தைக் கொடுத்தான் (அப்.19:3-5).

சில வார்த்தைகளைப் பிடித்துக்கொண்டு சாத்தான் தந்திரமாக தேவனுடைய திரித்துவத்தைப் பிரித்துவிடப் பார்க்கிறான். விசுவாசிகள் இதைப் புரிந்துகொண்டு அவனை எதிர்த்து ஜெயமெடுக்க வேண்டும். திரித்துவத்தைப் பிரித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் மீண்டும் திரித்துவ தேவனின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆராதனை! ஆராதனை!
தேவனுக்கு ஆராதனை!
உனக்கும் எனக்கும் பங்குள்ள ஆராதனை!
மனந்திரும்புதலோடு ஆராதனை!
பரிசுத்த ஜீவபலியோடு ஆராதனை!
அது புத்தியுள்ள ஆராதனை!
கருத்தோடு ஆராதனை!
ஆவியோடும் உண்மையோடும் ஆராதனை!
அது உண்மையான ஆராதனை!
எப்போதும் ஆராதனை!
துதியோடு ஆராதனை!
அது தேவன் விரும்பும் ஆராதனை!
உயிருள்ளவரை ஆராதனை!
தேவனை தரிசிக்கும் ஆராதனை!
தரிசித்துவிடு உயிருள்ள போதே!
அவ்வுலக வாழ்வில் தேவனை தரிசிக்க!

உங்கள் கவனத்திற்கு

- இப்புத்தகத்திற்கு ஓய்வு தராதிருங்கள்
- ஒருவருக்காகிலும் இப்புத்தகத்தை அறிமுகம் செய்யுங்கள்.

ஆசிரியரின் இதர வெளியீடுகள்:

- ஸ்தோத்திர பலிகள் 1000
- வாக்குத்தத்தங்கள் 1000
- விசுவாச அறிக்கைகள் 1000
- சமாரியா ஸ்திரீ
- ஆசீர்வாத குடும்பங்கள்
- இயேசு செய்த அற்புதங்கள்
- இயேசுவின் உவமைகள்
- 66 புத்தகங்களின் அறிமுகம்
- தற்கொலை
- தாலந்து
- கிறிஸ்தவத்தின் அடிப்படை உபதேசங்கள்
- இயேசுவின் வருகையும், நியாயத்தீர்ப்பும்
- சகோதரரின் செய்திகளடங்கிய DVDக்கள்
- சகோதரரின் செய்திகளடங்கிய VCDக்கள்

உங்கள் பிரார்த்தனையும் ஒத்துழைப்பும் எதிர்பார்க்கும் உங்கள்
சகோதரர்

சகோதரரைப் பற்றி.....

சென்னையில் விமானப் பொறியியல் பட்டப்படிப்பின் போதே தேவனின் பணியாற்ற அழைக்கப்பட்டார்கள். ஓப்புக்கொடுத்தார்கள். பஞ்சாப் மாநிலத்தில் பரமனின் பணியை பாரத்தோடு பாமர மக்களிடையே ஆற்றினார்கள்....

கன்னியாக்குமரியை கண்ணோக்கின கர்த்தர் நமது சகோதரரை அழைத்து வந்தர்ா் தற்போது தேவனுடைய உன்னத உத்தியோகஸ்தராகவும், வழக்கறிஞராகவும் பணியாற்றி ஆவியின் கனிகளோடும, ஆவியின் வரங்களோடும் 1998 ஆம் ஆண்டிலிருந்து கர்த்தருக்காக உலகமெங்கும் சுவிஷேச பிரபல்யம் செய்து கர்த்தரின் நல்லநாமத்தை 8000 விசுவாசிகள் கொண்ட ஏதேன் AG சபை கோட்டார், நாகர்கோவில் மற்றும் இயேசு வாழ்வளிக்கிறார் ஊழியங்கள் என்ற பெயரில் சகோதரரும் குடும்பமும் இணைந்து மிகச்சிறப்பாக ஜெயமாக நிறைவேற்றி வருகிறார்கள். இலட்சக்கணக்கான மக்கள் சகோதரரின் செய்தியாலும், ஜெபத்தினாலும், கர்த்தர் அன்னாருக்குத் தந்திருக்கும் கிருபை வரங்களினாலும், பாடல்களினாலும், ஆராதனைகளினாலும், எழுதப்பட்டிருக்கும் புத்தகங்களினாலும் பயன்பெற்று வருகின்றனர். அப்படியே தேவனால் அருளப் பட்ட இதயப்பூர்வமான வெளிப்பாடுகளே நம் கரங்களில் தரப்பட்டிருக்கும் இப்புத்தகம்.

இயேசு வாழ்வளிக்கிறார் ஊழியங்கள்
ஏதேன் AG சபை,
தபால்பெட்டி எண் 47,
25/12A, லாரன்ஸ் நினைவரங்கம்,
இந்து கல்லூரி ரோடு,
செட்டிக்குளம் ஜங்சன், நாகர்கோவில்.
தொலைபேசி : 04652-279920,279921

JESUS PROVIDES LIFE MINISTRIES
Eden A.G Church
25/12A Lawrence Memorial Hall Comp,
Hindu College road, Chettikulam Jn,
Nagercoil-2
Ph:04652-279920,279921
Fax: 04652-227498
E-Mail: revdrdmdbenjaminjplm@gmail.com
Jesusprovideslifeministries@gmail.com
Web:WWW.jesusprovideslife.org

விலை: ரூ 80